442

சக்தி

மாத வெளியீடு

சுபானு ஹு
புரட்டாசி மீ
-/8

கதைகள்

அந்த மோதிரம்
பிதாம்பரையர்
குடும்பக் காட்சி
தண்ட நீதி
மாயக் கண்ணாடி
மணல் வீடு

வரலாறுகள்

அத்தனை அபிமன்யு
அரிய சம்பாஷணை
காந்தியும்-
விவேகானந்தரும்
ரசத்திலே-
தேர்ச்சிகொள்

கட்டுரைகள்

நான் கண்ட-
தமிழ் நாடு
ஒப்பற்ற ஆயுதம்
வரப்போகும்-
இந்தியா
யுத்தகால ஆசிரியன்
கவிதை

பாடல்கள்

வாழும் வழி
என் பொம்மை
வீரத் துறவி

குறிப்புகள்

உடம்பும் மருந்தும்
பறித்த பூக்கள்
புத்தக உலகம்
காலச்சுழல்
விசித்திரம்
கதம்பம்

88838
சென்னை 600 008
N21,N365
N42.0.1

சிறந்த ஆபரணங்களுக்கும்

வைரங்களுக்கும்

P.A. ராஜு செட்டியார் & பிரதர்

கடைத்தெரு - கோயமுத்தூர்

போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜு"

20 JUN 1944
MADRAS

குழலோசை
ஆசைகொண்டேன் வண்டே } N. 18217

எல்லா "எச்.எம்.வி." வியாபாரி களிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

சிறந்த சங்கீதம்

சீரிய ஒலிப்பதிவு

நீண்டகாலம் உபயோகிக்கக் கூடிய "எச். எம். வி."

— ஹைபிடெலிடி ஊசிகள் —

ஒரு ஊசியினல் பல ரிகார்டுகளைப் பாடவைக்கலாம்

10 ஊசிகளடங்கிய பாக்கெட் 1-க்கு விலை ரூ. 2-4

மாடர்ன் தியேட்டர்ஸ்



திவான் பகதூர் — டைரக்ஷன் T. R. சுந்தரம், B. A. BSc. (Leads)

இலங்கையில் பிரபல
பத்திரிகை புஸ்தக
வியாபாரிகள்

★

வெஸ்டன் நியூஸ் ஏஜன்ஸீஸ்

★

170, ஆட்டுபட்டி தெரு
(WOLFENDHAL ST.,)

கொழும்பு (சிலோன்)

சுபானு
மலர் 9

சக்தி

புரட்டாசி
இதழ் 1

**அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!**

இரண்டு மகான்கள்

ஏசு பெருமான் சிலுவையில் அறையப்பட்டார். என்றாலும், அவர் ஒரு மகான் என்றே உலகோரால் கொண்டாடப்படுகிறார். காந்தி சிறையில் இருக்கிறார். என்றாலும், அவரை மகான் என்றே இந்தியர் கொண்டாடுகிறார்கள். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று வாதித்து வென்று புழுங்கினான் கீரன். காந்திஜி மகானாயிருந்தால் என்ன? உத்தம புத்திரனாயிருந்தால் தான் என்ன? சட்டமில்லையா? சர்க்கார் இல்லையா? அவர் சிறைப்பட்டு விட்டார். சட்டமும் அதிகாரமும் ஒருவரைச் சிறைப்படுத்த முடியும்; பலர் உள்ளங்களை மாற்ற முடியுமா?

இலக்கணத்தை மீறிய குற்றவாளி பரமசிவன். ஆனாலும், பக்தர்களின் மனம், அவரிடம் கொண்ட பக்தியில் குன்றாது. சட்டங்களுக்கு மாறுபட்ட குற்றவாளி காந்தி. ஆயினும், அவரிடம் மக்களின் அன்பு குறையாது. காந்தியின் ஜன்ம தினம் இதோ வந்திருக்கிறது. பிசகு எங்கேயோ? பழி யாரிடமோ? அதைப் பற்றி யெல்லாம் இங்கே நாம் சிந்திக்க வேண்டாம். குரோதத்துக்கோ துவேஷத்துக்கோ, காந்தி தர்மத்தில் இடங் கிடையாது. சத்தியமும் தர்மமும் வெல்லட்டும் என்றே காந்தி வேண்டுவார். அதுவே நமது பிரார்த்தனையாயுமிருக்கட்டும். காந்திஜி நீடூழி வாழவேண்டும்; நமது இருளெல்லாம் விலகவேண்டும் - இதுவே நமது துதியும் வாழ்த்துமாயிருக்கட்டும்.

இச்சமயம் மற்றொரு மகானையும் நாம் நினைவுகூர்ந்து, மகிழ்ச்சியில் திளைக்கிறோம். ஐம்பது வருஷங்களுக்கு முன்னே அமெரிக்காவுக்குச் சென்று வெற்றி வாகை சூடிய வீர சிங்கம் அவர். சுவாமி விவேகானந்தர், இந்தியாவுக்கு வாங்கித் தந்த கீர்த்தியை, இந்தியா ஒருநாளும் மறக்காது.

சிக்காகோவிலே ஒரு சர்வமத மகாநாடு நடந்தது. அதைக் கூட்டியவர்களின் நோக்கம், கிருஸ்தவமே உலகில் மேலானது என்று ஸ்தாபிப்பதேயாகும். தங்களிடம்தான் ஞான ஒளி இருக்கிறது, மற்றவர்களெல்லாம் அஞ்ஞானிகளே என்பது அவர்கள் கனவு. சுவாமிகள் அந்த எண்ணத்தைச் சிதறடித்தார். புதிய ஞான தீபமொன்றை அங்கே ஏற்றிவைத்தார். ஹிந்துமதம் என்பதுதான் என்ன? அது உலக மதம். ஏனெனில், உலக மதங்களை யெல்லாம் தன்னிலே தாங்கிக்கொள்ளும் தன்மை அதற்குண்டு. அது உலகத்துக் குரியது. விவேகானந்த மகான் உலகத்துக் குரியவர். அவர் நாமம் என்றென்றும் வாழ்க!

★

காலச்சுழல்

யானையும் பாலமும்: "ஞானம் மிகுந்த யானை, புதியதொரு பாலத்தைக் கடக்குமுன், பாலம் தன் பாரத்தைத் தாங்குமா என்று பரிட்சித்துப் பார்த்துவிட்டே கடக்க முயலும். இந்தியப் பிரச்னைகளைத் தீர்க்கத் திட்டமான நடவடிக்கைகளை எடுக்குமுன், அந்த யானையைப்போலவே, வேவலும் தம் களனைப் பரிட்சித்துக்கொள்வாராக" என்று எச்சரிக்கிறார் இந்தியா மந்திரி அமெரி. "நல்லது இந்த யானை இன்னும் தன் பாலத்தையே கண்டுகொள்ள வில்லையே!" என்கிறார் வரும் வைஸிராய் வேவல். பேச்சு விருந்துப் பேச்சுத்தான். ஆனாலும், 'சுண்ணும்பிலே இருக்குது சூட்சுமம்' என்பதுபோல, இதிலும் ஏதேனும் மர்மம் இருக்குமோ? "நாங்களெல்லாம் சாதிக்க முடியாத காரியத்தை நீரா சாதிக்கப்போகிறீர்? பார்க்கலாம் உமது கைவரிசையை?" என்பதே, ஒருவேளை அமெரியின் பேச்சுக்கு அர்த்தமா யிருக்குமோ? அப்படியானல், வேவல் வந்து செய்யப் போவதுதான் என்ன? சமரசமே அது என்று நாம் நிச்சயமாய் நம்பிவிடத்தான் முடியுமா? முந்தி ஒரு விருந்துப் பேச்சிலே, "இந்திய முட்டுக்கட்டையைத் தீர்க்கவேண்டுமென்று இங்கும் இந்தியாவிலும் இருந்துவரும் பலத்த அபிப்பிராயத்தை நான் அறிவேன்" என்றார் வேவல். ஆகவே, சமரத்துக்கு முயல்வார் என்று நாம் நம்பலாமா? ஆம், நாம் நல்லதையே எண்ணுவோம்; நடப்பது நடக்கிறது.

மாஸ்கோ மகாநாடு: 'மலை மகானிடம் செல்லாவிட்டால், மகான் மலையிடம் வந்துதா னகவேண்டும்' என்பதுபோல் ஒரு பழமொழி உண்டு. இதேபோல, ஒரு சம்பவம் சமீபத்தில் நடக்கப்போகிறது. நல்லதுதான். அமெரிக்க ஜனதிபதியும், பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் சந்தித்துப் பேசினார்களே; ருஷ்யத் தலைவன் ஸ்டாலினை ஏன் அங்கே அழைக்கவில்லை? இப்படி ஒரு கேள்வி. காரணம் ஏதேதோ சொல்லப்பட்டது. மேல் நாட்டிலே ஒரு சம்பிரதாயம் உண்டு. ஜான் வீட்டுக்கு ஜோன் ஒருமுறை போனல், ஜோன் வீட்டுக்கு ஜான் ஒருமுறை வந்தாகவேண்டும். இதுவே மரியாதை. சர்ச்சில் ஒருமுறை ருஷ்யா சென்று ஸ்டாலினைப் பார்த்துவிட்டார். இனி ஸ்டாலின்தான் பிரிட்டனுக்கோ அமெரிக்காவுக்கோ வரவேண்டும் என்று சர்ச்சில் எதிர்பார்த்திருக்கலாம். ஆனல், போரின் முழுச் சுமையையும் தாங்கிக்கொண்டிருக்கும் ஸ்டாலின், எப்படித் தம் நாட்டைவிட்டு வெளிவர முடியும்? இதிலே போலி மரியாதை, கௌரவமெல்லாம் பார்த்துப் பயனில்லை. ஆகவே, ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் சந்திப்பு ஒன்று சில வாரங்களில் மாஸ்கோவிலேயே நடக்குமென்ற செய்தியில் ஆச்சர்யமில்லை. கொஞ்ச நாளைக்குமுன் யாரோ சொன்னது போல, ஐக்கிய நாடுகள் 'ஐக்கியங் குலைந்த நாடுக'ளாயில்லாமல் ஒன்றுபட, அந்த மூவர் சந்திப்புப் பயன்படவேண்டும் என்பது தான் நமது ஆசை.

படாக்ளியோ சரணுகதி: இதாலியிலே புதிய சர்க்கார் அமைத்த படாக்ளியோ, பிரிட்டனிடம் சரணுகதி செய்துவிட்டார். இது ஐக்கிய நாடுகளுக்குப் பெரும் வெற்றிதான். ஆனல், இதாலி அடியோடு இவர்கள் வசமாகிவிட்டதாகச் சொல்ல முடியாது. இதாலியின் வட பாகம் ஜெர்மன் பிடிக்குள் இருக்கிறது. தென் பாகத்தில், ஐக்கிய நாடுகளின் போர் நடக்கிறது. போராட்டம் முடியவில்லை. இதாலியின் யுத்தக் கப்பல்களும் போர் விமானங்களும் ராணுவத்தில் சில பகுதிகளும் ஐக்கிய நாடுகளுக்குக் கிடைத்தது மட்டில் பெரிய லாபமேயாகும். பிரஞ்சுத் தளபதி டிகாலைப்போல், இனிமேல் இதாலிய தளபதி படாக்ளியோவும், ரேடியோப் பிரசங்கங்கள் வாதப் பிரதிவாதங்கள் முதலியவைகளின் மூலம் ஐக்கிய நாடுகளுக்குப் பேருதவி செய்து கொண்டிருப்பார். இன்று இத்தாலிய மக்கள் நிலை குலைந்து தவிக்கும்

தவிப்பு, ஐக்கிய நாடுகளின் வீரப் போட்டத்தினுல் தீர்ந்து, அமைதியும் சாந்தியும் அடைவார்களானுல், ஆண்டவன் வாழ்த்தப்படுவார்.

தப்பிய முஸோலினி : சர்ச்சில் ஒரு தீரன். என்ன குறைகள்தான் அவரிடம் இருக்கட்டுமே; உண்மையைச் சொல்லுவதில் அவர் தயங்கமாட்டார். முன்னுல் என்னென்னவோ வதந்திகளெல்லாம் வந்தன. முஸோலினி சிறையிலிருக்கிருர், வேற்றூருக்குப் போய்விட்டார், பிரிட்டனிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றெல்லாம் வதந்திகள். உண்மை என்ன? அவர் சிறைப்பட்டு, பலத்த காவலில் இருந்தது வாஸ்தவம். ஆனுல், ஜெர்மன் பாரசூட் வீரர்கள், மகா துணிச்சலுடன், அதி ஆச்சர்யமாய் அவரைத் தப்பித்துக் கொள்ளச்செய்து, ஜெர்மனிக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். இந்தத் துணிகரச் செயலைக் கண்டு, சர்ச்சில் முகம் சுண்டவில்லை; வியக்கிருர். ஆஹா! என்ன வீரத்தனமான மனேபாவம்! முஸோலினி மட்டுமல்ல; அவருடைய குடும்பத்தார் அனைவருமே தப்புவிக்கப்பட்டுள்ளார்களாம். சர்ச்சில் சொல்லுவதேபோல, நவீன யுத்தத்தில் என்னென்ன அதிசயங்களெல்லாம்தான் சாத்தியமோ! நாம் என்ன கண்டோம்?

நீகஸ் 'கரடி': துரதிர்ஷ்டம் பிடித்த எதியோபியாவைத் தாக்கிப் பிடித்த இதாலி சிதைந்தது; முஸோலினி வீழ்ந்தார். அஞ்ஞாத வாசம் புரியும் எதியோபியச் சக்கரவர்த்தி நீகஸுக்கு இதிலே ஆனந்தம் பொங்குவது சகஜம். தனக்குக் கொடுமையிழைத்தோர் நலியும்போது, யாருக்குத்தான் மகிழ்ச்சி வராது? கொள்ளைக்காரர்களை ஒழித்துப் புதிய சர்வதேச ஒழுங்கை நிலைநாட்டும் கைங்கர்யத்தில், எதியோபியா தன் பங்கு பணியைப் புரியும் என்று நீகஸ் உறுதி கூறுகிருர். சந்தோஷம். ஆனுல், மெல்ல ஒரு 'கரடி'யும் விட்டிருக்கிருர். "கடலுக்கு வழி வேண்டும்" என்பதுபோன்ற நியாயமான தன் நோக்கங்களுக்காகவும், சமாதான மகாநாட்டில் எதியோபியா கலந்து கொள்ளவேண்டும் என்கிருர். பழைய யுத்த முடிவில் 'கடலுக்கு வழி' வாங்கிக்கொண்ட போலந்தினுல் தானே இந்த யுத்தம் மூண்டது? அந்தப் 'பாக்கி'யத்தை இந்த யுத்த முடிவில் எதியோபியா பெறவேண்டுமா?

கல்கத்தாவின் அவதி : "சோற்றுப் பஞ்சத்தால், கல்கத்தாவிலே சாவும் பசியும் தாண்டவமாடுகின்றன. அந்தச் செய்திகளுக்குப் பக்கத்திலே மற்ருெரு செய்தியையும் படிக்கிருேம்: அச்சின் பிடிப்பிலிருந்து விடுபடும் நாடுகளுக்கு உணவளிக்க ஐக்கிய நாடுகள் திட்டம் போடுகின்றனவாம்! இது கேலிக்கூத் தல்லவா?" என்று கேட்கிறது 'டெய்லி ஹெரால்டு'. சில தினங்களுக்கு முன்வரையில் கல்கத்தா ஆஸ்பத்திரிகளில் மட்டில், பசியால் வந்தவர் 4,918 பேர்; அதில் மாண்டவர் 1,224 பேர். இது 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகையின் கணக்கு. சோற்றுப் பசி, அண்ணனையும் தங்கையையும், பெற்ருேரையும் பிள்ளைகளையு மெல்லாம் பிரித்து அநேக குடும்பங்களை நாசமாக்கி விட்டதாம். யுத்தத்தின் பெரும் சுமையையும் தாங்கிக் கொண்டிருக்கும் ருஷியாவிலே உணவுச் சேதம் ஏராளமாயிருந்தும், அங்கே கூட இப்படித் தவிப்பு இல்லையாம். இந்தியாவில் மாத்திரம் ஏன் இந்த அவதி?

தமிழுக்கு ஒரு லட்சம்: கோட்டையூர்த் திருவாளர் கே. வி. எ. எல். அழகப்ப செட்டியாரவர்கள், திருவாங்கூர் சர்வ கலாசாலையில் தமிழ் ஆராய்ச்சிக்காக ஒரு லட்ச ரூபாய் நன்கொடை யளித்ததும், ஸர் வேங்கட சுப்பாராவும் லேடி வேங்கடசுப்பாராவும் நடத்திவரும் 'ஸேவாஸாத'னுக்கு 'உமையாள் ஹாஸ்டல்' என்ற பெயருடன் ஒரு போஜன விடுதி கட்டித்தர இசைந்ததும் உயர்ந்த தர்மங்களாகும். இரண்டு தர்மங்களும், திரு. செட்டியாருடைய மகள் திருமதி உமையாளுக்கும் கண்டனூர்த் திருவாளர் வயிரவன் செட்டியார் குமாரன் திரு. ராமநாதனுக்கும் மிக வைபவமாய்க் கோட்டையூரில் நடைபெற்ற திருமணத்தின்போது அறிவிக்கப்பட்டது, அத்திருமணத்துக்குப் பெருஞ் சிறப்பு நல்குவதாகும்.

★



விசித்திரம்!

● *திகைக்கச் செய்கிறது:* ஓர் ஐரோப்பிய ஸினிமா நடிகை, தான் சேகரித்து வைத்துள்ள போட்டோப் படங்களை, தன் சிநேகிதிகளிடம் காட்டிக்கொண்டே சொன்னதாவது: "இது என் முதல் கணவனின் முதல் மனைவியின் படம். இது என் இரண்டாவது கணவனிடம் இரண்டாவது விவாக விலக்குச் செய்துகொண்ட மனைவியின் படம். இது என்னுடைய தற்போதைய கணவனின் முதல் மனைவியிடம் இரண்டாவது விவாக விலக்குச் செய்துகொண்ட புருஷனின் படம்."

* * *

● *தணிக்கை லட்சணம்:* ஒன்றிரண்டு வருஷங்களுக்கு முன், லண்டன்மீது ஜெர்மன் விமானங்கள் பறந்தன. அமெரிக்க 'நியூயார்க் டைம்'ஸின், நிருபர் அந்தப் பத்திரிகைக்கு, "தேம்ஸ் முகத்துவாரத்தின் மேல் நாஜி விமானங்கள் நேற்றிரவு பறந்தன" என்று தந்தி சொல்ல விரும்பினார். "தேம்ஸ் என்ற பிரஸ்தாபமே கூடாது" என்று தடுத்தார் தணிக்கை அதிகாரி. ஆத்திரங்கொண்ட நிருபர், "பின்னே என்ன செய்வது? அமேஜான் நதிமீது நாஜி விமானங்கள் பறந்தன என்று வேணுல் திருத்தி விடுங்களேன்" என்றார். அப்படியே திருத்தி, அந்தத் தணிக்கை அதிகாரிப் பிரகஸ்பதி, தந்தியை அனுப்பி விட்டாராம்!

* * *

● *ஜெர்மானியன் துயரம்:* பீட்டர் டி போல்னே என்ற ஹங்கேரிய ஓவியர், இப்போது லண்டனில் இருக்கிறார். அவர் பிரான்ஸில் இருந்த போது, ஒரு ஜெர்மானியனைச் சந்தித்தாராம். யுத்தத்தின் முடிவு ஜெர்மனிக்கு நாசமே தரப்போகிறது என்று அந்த ஜெர்மானியன் சொன்னானும். "அப்படியானால், ஆங்கிலேயருக்குத்தான் வெற்றி கிடைக்கப் போகிறது என்கிறீர்கள்?" என்றார் கலைஞர். "ஆம், நாங்கள் போரிடத்தான் பிறந்திருக்கிறோம்; ஜயிப்பதற்கல்ல" என்றானும், கண்ணீருடன் ஜெர்மானியன்.

* * *

● *அற்புத மனைவி:* அமெரிக்காவைச் சேர்ந்த அட்லாண்டிக் நகரத்தில், வில்லியம் கொனேவர் என்பவன், தன் மனைவியிடமிருந்து விவாக விலக்கு வேண்டுமென்று கோர்ட்டிலே மனுப் பண்ணிக்கொண்டானும். மனுவில் அவன் கூறும் புகார் இதுதான்: "காலையில் நான் விழித்துக்கொண்டவுடனே, 'நீ இன்னும் சாகவில்லையா?' என்று நாள் தவருமல் என் மனைவி என்னைக் கேட்கிறாள்." சாக வழி தெரியவில்லை; கோர்ட்டுக்கு வந்துவிட்டான்!

* * *

● *தொடரும்:* புதிதாக வந்த இராஸி ஈக்கர் என்ற அமெரிக்க விமான தளபதிக்கு, இங்கிலாந்தில் ஒரு விருந்து நடந்தது. அமெரிக்கர்களின் பெருமைகளையும் பேருதவிகளையும் நகர மேயர் வெகு நேரம் புகழ்ந்தார். கடைசியில் அமெரிக்க தளபதியைப் பதில் சொல்லக் கேட்டுக் கொண்டார்கள். அவர் சொன்னது இரண்டே வாக்கியங்கள் தான்: "நாங்கள் ஏதாவது போர் செய்யுமுன், நான் ஒன்றும் பேசப் போவதே யில்லை. நாங்கள் போனபின்பு, நாங்கள் வந்துவிட்டுப் போனதில் நீங்கள் சந்தோஷமே அடைவீர்கள் என்று நம்புகிறேன்."

கதம்பம்

பாம்பும் தியானமும்: சுவாமி விவேகானந்தருக்கு, பெற்றோர் இட்ட பெயர் நரேந்திரன் என்பதாகும். வாலிபத்திலேயே நரேந்திரருக்கு, தெய்வபக்தி மிக உண்டு. ஒரு சமயம் அவரும் அவருடைய வாலிபத் தோழர் சிலரும், விளையாட்டாக உடம்பெல்லாம் நீறு பூசி, தியானம் செய்வதுபோல் உட்கார்ந்தார்கள். அச்சமயம் ஒரு பாம்பு அங்கே வந்துவிட்டது. மற்றச் சிறுவரெல்லாம் ஓட்டமெடுத்தார்கள். "நரேன், நரேன்! பாம்பு. ஓடி வந்துவிடு" என்று கத்தினார்கள். நரேன் உண்மைச் சமாதியிலே லயித்து மெய் மறந்திருந்தார். அவர் எழுந்திராதது கண்டு, அவருடைய பெற்றோரிடம் அந்தச் சிறுவர்கள் சென்று தெரிவித்தார்கள். அவர்களும் வந்து பாம்பைக் கண்டார்கள். இன்னும் நரேந்திரன் விழிக்கவில்லை. என்ன செய்வதென்று அவர்கள் திகைத்துக்கொண்டிருக்கையில், பாம்பு ஒரு தீங்கும் செய்யாமல் மெல்ல அகன்றது. பின்னால் நரேந்திரர் சமாதி கலைந்து விழிக்கையில், தம் குடும்பத்தார் அனைவரும் திரண்டு அங்கே வந்திருப்பது கண்டு, அதிசயித்தார். பாம்பைப்பற்றி அவர்கள் சொன்னபொழுது, "பாம்பா! அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. இன்னதென்றுஅறியாத ஓர் ஆனந்தம் அல்லவா அனுபவித்துக் கொண்டிருந்தேன்" என்றார் வருங்கால விவேகானந்தர்!

* * *

'ஜவஹர் சப்பாத்தி': புது டில்லியில் பல நாளைக்குமுன் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் ஒன்று நடந்துகொண்டிருந்தது. கூட்டத்திலே யாரோ ஏதோ சொன்னது ஜவஹருக்குப் பிடிக்கவில்லை. ஆத்திரத்தோடு வெளியே கிளம்பினார். ஒரு சில்லறை ஹோட்டலில் நுழைந்து, ஏதோ சிற்றுண்டி உண்ணத் தொடங்கினார். பக்கத்து மேஜையில் வந்து உட்கார்ந்த எவனோ ஒருவன் இவரை உற்றுப் பார்த்தான். "அரே! பண்டிதர்! பண்டிதர் வந்திருக்கிறார்!" என்று கத்தினான். அவ்வளவுதான். ஏகக் கூட்டம் ஜவஹரைச் சூழ்ந்துவிட்டது. விஷயம் இதோடு நின்றுவிட்டால், அது ஒன்றும் விசேஷமில்லை. அந்த ஹோட்டல் முதலாளி, மறுநாள் முதல் ஒரு புதிய பலகாரம் தயாரித்து, விளம்பரம் செய்யலானார். அதற்கு 'ஜவஹர் சப்பாத்தி' என்று பெயர். அந்தச் சப்பாத்தியின்மீது, அழகான பல வர்ண லேபிள் ஒன்று ஒட்டியிருக்கும். அந்த லேபிளில் ஜவஹரின் திருவுருவம் காணப்படும். ஹோட்டலுக்கு அதுமுதல், அமோகமான வியாபாரம்!

* * *

பசியால் வாடும் யானை: பம்பாயின் ஸினிமா முதலாளிகளில் ஒருவரான சோராப் மோடி, 'பிரித்வி வல்லபர்' என்ற படத்தில் நடிப்பதற்காக ஒரு யானையைத் தருவித்தார். அரிசிக் கட்டுப்பாடும் பங்கீடும் பம்பாய்க்கு வந்துவிட்டதால், யானைக்கு உணவு கிடைப்பது திண்டாட்டமாயிற்று. அது பட்டினியால் மெலியத் தொடங்கியது, இந்தச் சமயத்தில். வீர சவர்க்காரின் ஜன்மதின விழா வந்து சேர்ந்தது. சவர்க்காரின் சிஷ்யர்களில் சிலர் சோராப் மோடியிடம் சென்று, சவர்க்கார் ஜயந்திக் கொண்டாட்டத்துக்காக அந்த யானையைக் கொஞ்சம் இரவல் தரும்படி கேட்டார்கள். மோடி மிகவும் சாவதானமாகச் சொன்னதாவது: "யானையை இரவல் தர எனக்கொன்றும் ஆட்சேபமில்லை. ஆனால், அது உங்கள் வீர சவர்க்காரை ஏதோ ஆகாரவஸ்து என்று நினைத்துவிடுமானால், என்னைக் கேட்கக்கூடாது. சம்மதமா?"

* * *

எலி யுத்தம்: ஒரே ஒரு ஜோடி எலிகள், ஆணும் பெண்ணுமாயிருந்

தால் போதும். அந்தத் தம்பதிகள் மூன்றே வருஷகாலத்தில் 625 ஆயிரங்கோடி எலிகளாகப் பெருகிவிடுமாம். பம்பாய்க் கார்ப்பொரேஷனில் இந்த அபாயத்தை எடுத்து விளக்கி, எலிகள்மீது உடனே யுத்தம் தொடங்க வேண்டியதன் அவசியத்தை, யமுனை தாஸ் மேத்தா, சில வாரங்களுக்கு முன் வற்புறுத்தினராம். இந்த 'எலி யுத்த'ப் பிரச்னையை, பம்பாய் நகரத் தந்தைமார் தீவிரமாய் யோசிக்கத் தொடங்கி யுள்ளார்களாம்.

இங்கே எதோ வோர் ஐரோப்பிய காட்டைப்பற்றிய கதை ஞாபகம் வருகிறது. அங்கே ஏராளமான கொசுக்களைக் கண்ட அயல்நாட்டான் ஒருவன், "ஏன் இந்தக் கொசுக்களின் மீது நீங்கள் யுத்தம் தொடங்கவில்லை?" என்று கேட்டானாம்.

"ஓ! தொடங்காமலா இருப்போம்? நன்ருய்த் தொடங்கினேம்" என்ருன் உள்நாட்டான்.

"பின்னே?"

"தெரிய வில்லையா? கொசுக்கள் ஜயித்துவிட்டன."

* * *

சர்க்கரையின் மாறு கோலம்: இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்குச் சர்க்கரையை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று இந்திய சர்க்கார் உத்திரவு போட்டார்கள் அல்லவா? உடனே, தந்திரம் மிகுந்த சில வியாபாரிகள் ஒரு யுக்தி செய்தார்கள். சர்க்கரையை அப்படியே பெப்பர் மிண்டு, மிட்டாய்கள் ஆகிய உருவங்களாகச் செய்து, இராக் முதலிய இடங்களுக்கு 1000 டன் வரை ஏற்றுமதி செய்துவிட்டார்கள். பின்னல் இந்திய சர்க்கார் விழித்துக்கொண்டு விட்டார்களாம். சர்க்கரை எற்றுமதி முழுவதும் இப்போது சர்க்கரைக் கண்டிரோலர் என்ற அதிகாரியின் கைக்கு வந்து விட்டதால், யாரும் எவ்வித மோசடியும் செய்ய முடியாதாம். இது சர்க்காரின் எண்ணம். ஆனல், வியாபாரிகள் என்ன செய்துகொண்டிருக்கிருர்களோ? நமக் கெப்படித் தெரியும்?

* * *

காட்டிலே சிக்கினல்: ஆகாய விமானிகள் காட்டிலே சிக்கிக்கொண்டால், என்ன சாப்பிடுவது? இதற்கு ஒரு சிறந்த யுக்தியைச் சொல்லித் தருகிறது ஓர் அமெரிக்கப் பிரசுரம். குரங்குகள் தின்னும் காய்கனிகளெல்லாம் மனிதனுக்கும் உகந்ததாய்த்தான் இருக்குமாம். ஆகையால், அந்தப் புத்தகம், "குரங்கு எதை யெல்லாம் தின்கிறதோ, அதை யெல்லாம் நீங்களும் தின்னுங்கள். குரங்கையும் தின்னுங்கள்" என்கிறது. என்ன இருந்தாலும், வெறுங் குரங்குக்கும் நாகரிகமடைந்த மனிதனுக்கும் வித்தியாசம் வேண்டாமா? அதற்காகத்தான்போல் இருக்கிறது கடைசி உபதேசம்.

* * *

புலாலின் 'பெருமை': ஆங்கிலப் பேராசிரியர் பெர்னர்ட் ஷா சொல்லுகிருர்: "அமெரிக்கர்கள் தங்கள் உணவிலே மாறுதல் செய்துகொண்டார்களானல், அவர்களுக்கு நலமாகும். புலாலையும் மற்றப் பண்டங்களையும் அவர்கள் மிதமிஞ்சித் தின்கிருர்கள். எனக்கு அவர்கள் உணவுப் பார்ஸல்கள் அனுப்புகிருர்களே, இது என்னிடம் அவர்களுக்குள்ள அன்பைக் காட்டுகிறது. ஆயினும், இதை அவர்கள் நிறுத்திவிட வேண்டும். ஏதோ நாமெல்லாம் பட்டினியால் சாவதாக அவர்கள் நினைப்பதுபோல் அல்லவா இது காட்டுகிறது! பிரிட்டனில் புலால் பங்கீடு மிக்க கச்சிதமாய் நடக்கிறது. ஆயினும், புலாலையே அடியோடு ஒழித்து விடவேண்டும் என்பது என் அபிப்பிராயம். மாட்டிறைச்சியால்தான், இங்கிலாந்து இந்நிலைமைக்கு வந்திருக்கிறது என்பதில் சந்தேகமே யில்லை. ஆனல், அது என்ன நிலைமை என்று பாருங்கள்."

★

வீரத் துறவி

நாமக்கல் வெ. ராமலிங்கம்

ஆண்மை உருக்கொண்ட அந்தணன்—எங்கள்
அண்ணல் விவேகா னந்தனின்
மாண்பை அளந்திட எண்ணினால்—இந்த
மண்ணையும் விண்ணையும் பண்ணலாம்.

காமனைப் போன்ற அழகினான்—பொல்லாக்
காமத்தை வென்று பழகினோன் ;
சோமனைப் போலக் குளிர்ந்தவன்—ஞான
சூரியன் போலக் கிளர்ந்தவன்.

வீரத் துறவறம் நாட்டினான்—திண்ணை
வீணர்வே தாந்தத்தை ஓட்டினான் ;
தீரச் செயல்களை நாடினான்—இந்தத்
தேச நிலைகண்டு வாடினான்.

காமத் தவநெறி காட்டினான்—நல்ல
காரிய வீரியம் ஊட்டினான் ;
மர்மம், பலிதரும் பூசைகள் — ஹிந்து
மதமல்ல என்றுண்மை பேசினான்.

" உலகை வெறுத்துத் துறந்தவர்—தெய்வ
உள்ளக் கருத்தை மறந்தவர்
கலக நடுவிலும் தங்குவேன் " என்று
கர்ஜனை செய்திட்ட சிங்கமாம்.

பெண்ணின் பெருமையைப் போற்றினன்—ஆண்கள்
பேடித் தனங்களைத் தூற்றினன் ;
மண்ணின் சுகங்களை விட்டவன்—ஏழை
மக்களுக்காய்க் கண்ணீர் கொட்டினன்.

ஏழையின் துன்பங்கள் போக்கவும்—அவற்கு
எண்ணும் எழுத்தறி வாக்கவும்
ஊழியம் செய்வது ஒன்றுதான்—தேவை
உண்மைத் துறவறம் என்றுளான்.

தேசத் திருப்பணி ஒன்றையே—உண்மைத்
தெய்வத் திருப்பணி என்றவன் ;
மோசத் துறவுகள் போக்கினன்—பல
மூடப் பழக்கத்தைத் தாக்கினன்.

அடிமை மனசை அகற்றினன்—உயர்
அன்பின் உறுதி புகட்டினன் ;
கொடுமை அகற்றிட முந்திடும்—தவர்
கூட்டத்தை நாட்டுக்குத் தந்தவன்.

ஐம்பது ஆண்டுகள் முன்னமே—செல்வ
அமெரிக்கச் சிக்காகோ தன்னிலே
நம்பெரும் இந்திய நாட்டவர்—கண்ட
ஞானப் பெருமையைக் காட்டினன்.

வெள்ளையர் பாதிரி மாரெலாம்—கேட்டு
வெள்கித் தலைகுனிந் தார்களே !
தெள்ளிய ஞானத்தைப் போதித்தான்—அவர்
திடுக்கிட உண்மைகள் சாதித்தான்.

சத்திய வாழ்க்கையைப் பேசினன்—அருள்
சாந்தத் தவக்கனல் வீசினன் ;
யுத்தக் கொடுமையைச் சிந்திப்போம்—அந்த
உத்தமன் சொன்னதை வந்திப்போம்.

"அவன்
தகப்பனாரைப் போலவே
பலமுள்ளவனாக இருக்கிறான்!
—அவர்களுடைய பலத்திற்கு அளவே இல்லை"

அவர்கள் நல்ல ஜோடிகள், அவர்கள் எப்பொழுதும் பூர்ண பலத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் சந்தோஷத்துடன் திரிவதனால் குறையும் பலத்தை திரும்பவும் தரத்தக்க ஆகாரத்தை தாயார் கொடுக்கிறாள். மிகவும் ருசிகரமானதும், விடமினுடன் கூடியதுமான ஆகாரத்தை அளிக்கிறாள். டால்டாவினால் ஆகாரத்திற்கு சேர்க்கப்படும் புஷ்டியும், வைடமினும் அவர்கள் பலக் குறைவினால் களைப்படையும்படி செய்யாமல் காப்பாற்றுகிறது. ஆகையால் உங்களுடைய ஆகாரங்களை டால்டாவினால் சமையல் செய்யுங்கள். போஜனம் ருசியாகவும் இருக்கும்.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினால் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினால் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.

விடமின் சேர்ந்த **டால்டா** தாவர எண்ணெயால் தயார் செய்யப்பட்டதென்று உத்திரவாத முள்ளது — சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM 22-50 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

நாகரீகமுள்ள
ஆடைகளுக்கு
S.R.B. குப்புசாமி அய்யர் & ஸன்
FORMERLY
S.R. பாலுசாமி அய்யர்
& ஸன்ஸ்
83, நைனியப்பநாயக்கன் தெரு
(போன் 3506) P.T. மதறாஸ்.
230, கீழமாரெட் வீதி,
(போன் 36) மதுரை.

காந்தியும் விவேகானந்தரும்

வெ. சாமிநாத சர்மா

ஐம்பது வருஷங்களுக்கு முன் நடைபெற்ற சம்பவம். இரண்டு பேர், பம்பாய்த் துறை முகத்திலிருந்து கப்பலேறினர்கள். கப்பலேறியபோது, இவர்களை உபசரித்து வழியனுப்பியவர்கள் யார்? நெருங்கிய நண்பர்களும் உறவினர்களு மாகிய ஒருசிலர்தான். இவ்விருவரையும் பற்றிப் பொதுஜனங்களுக்கு ஒன்றுமே தெரியாது. இந்தப் பெரிய மனிதர், அந்த ஊருக்குப் பயணமானர், அந்தப் பெரியார் இந்த ஊருக்கு வந்திறங்கினர் என்று இப்பொழுதைய பத்திரிகைகள் வெளியிடுகின்றனவே, அதைப்போல் அந்தக் காலத்தில் இவ்விருவரும் கப்பலேறியதை எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை. இவ்விருவரும், எந்தப் பத்திரிகை நிருபர்களுக்கும் பேட்டி கொடுத்து, தாங்கள் போகிற இடங்களில் சாதிக்கப் போகிற காரியங்களைச் சவிஸ்தாரமாகச் சொல்லிவிட்டுப் போகவு மில்லை. ஆனல், திரும்பி வந்தபோது இவர்கள் கழுத்திலே எத்தனை மாலைகள் விழுந்தன! என்ன பலமான கைகொட்டு முழக்கம்! இவர்கள் நடக்கிற மாதிரி, பார்க்கிற பார்வை, இவைகளை யெல்லாங்கூடப் பத்திரிகை நிருபர்கள் நுட்பமாகக் கவனித்து எழுதினர்கள்! என்ன மாறுதல் பார்த்தீர்களா?

இவர்கள் போனபோது, யாரும் இவர்களைக் கவனிக்கவில்லை. திரும்பி வந்தபோது, எல்லோருடைய கவனமும் இவர்களிடமே சென்றது. உலகத்தில் இது சாதாரண சம்பவந்தான்போலும்! ஆலம் வித்து எப்பொழுது பூமியில் விழுந்தது என்பதை யாரேனும் கவனிக்கிருர்களா? இல்லை. ஆனல், அதுவே பிற்காலத்தில் பெரிய விருட்சமாகிக் கனியும் நிழலும் கொடுத்து உதவுகிறபோது, அந்த விருட்சத்தை அனைவரும் அண்ணாந்து பார்க்கிருர்கள்; வியந்து பாராட்டுகிருர்கள். அதன் நிழலிலேயே இருந்துவிடவேண்டுமென்றுகூடச் சிலர் தீர்மானிக்கிருர்கள்!

1893-ஆம் வருஷம் மேற்சொன்ன இருவரில் ஒருவர், ஏப்ரல் மாதம், தென்னப்பிரிக்காவுக்குப் பயணமானர். இன்னெருவர், மே மாதம், அமெரிக்காவுக்குப் பயணமானர். ஒருவர், வாழ்க்கையைத் தொடங்கச் சென்ருர்; இன்னெருவர், வாழ்க்கையைத் துறந்து சென்ருர். முன்னவர் ஒரு சாதாரண பாரிஸ்டர்; பின்னவர், ஒரு சாதாரண சந்நியாசி. அப்பொழுது பாரிஸ்டர் காந்திக்கு வயது இருபத்து நான்கு; சந்நியாசி விவேகானந்தருக்கு வயது முப்பது. இரண்டு பேரும் பிரமுகர்களல்ல; முன்பின் தெரியாத நாடுகளுக்குப் புறப்பட்டார்கள். அந்த நாடுக

எங்கேயோ கண்காணுத தேசங்களுக்குப் போயிருந்த போதுதான், இந்த இரு மகான்களையும் நாம் அறியத் தொடங்கினேம். இவ்விருவரையும் பற்றி அச்சி லிருக்கும் ஒரு நூலின் முதல் அத்தியாயம் இந்தக் கட்டுரை. இருவரின் வாழ்க்கை ஆரம்பத்திலும் உள்ள ஓர் ஆச்சர்ய ஒற்றுமையைப் பாருங்கள்!

ளிலோ நிறத்துவேஷம் நிறைய. கறுப்பு நிறத்தவர், காட்டுமிராண்டிகளாகக் கருதப்பட்டார்கள்; நடத்தவும்பட்டார்கள். அப்படிப்பட்ட நாடுகளுக்குச் சென்ற இவர்கள், சிறிது காலங் கழித்துத் தங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பியபோது, அந்த நாட்டு மக்களிடம் பிரியா விடை பெற்றுத் திரும்பினார்கள். தங்கள் தாய்நாட்டு மக்களின் ஆனந்தக் கண்ணீரினால் அபிஷேகம் செய்யப்பட்டார்கள்.

சென்றார்கள், திரும்பினார்கள் என்று சுருக்கமாக இங்கே சொல்லி விட்டோம். ஆனால் சென்று திரும்பிய இந்த இடைக் காலத்தில் இவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள்! என்னென்ன விதமான அவமானங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்! ஏன் என்று கேட்கிறீர்களா? எல்லாம் தாய்நாட்டின் பொருட்டே!

காந்தி தென்னாப்பிரிக்கா போந்து பத்து நாட்கள்கூட ஆகவில்லை. டர்பனிலிருந்து ஜோஹான்னஸ்பர்க் என்ற நகரத்துக்கு ஒரு வழக்கு நிமித்தம் போகவேண்டியிருந்தது. எனவே, முதல் வகுப்புப் பிரயாணியாக, ரெயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். ரெயில், மாரிட்ஸ்பர்க் என்ற ஸ்டேஷனை அடைந்தது. அங்கே திடீரென்று ரெயில்வே அதிகாரிகள் தோன்றி இவரை வண்டியிலிருந்து கீழே இறங்குமாறு கூறினார்கள்; இறக்கியும் விட்டுவிட்டார்கள். இவருடைய படுக்கை முதலிய சாமான்களெல்லாம் வண்டிக்கு வெளியே வீசி எறியப்பட்டன. வண்டியோ, கூவிக்கொண்டு வேகமாகப் போய்விட்டது. பிளாட்பாரத்திலே ஒண்டியாக நிற்கிறார் காந்தி. அப்பொழுது இரவு ஒன்பது மணி. குளிர் நடுக்குகிறது. ஊரோ புதிது. பிளாட்பாரத்தில் போவோர் வருவோரெல்லோரும் இவரை முறைத்து முறைத்துப் பார்க்கிறார்கள். என்ன செய்வது?

இவ்வளவுக்கும் காரணம் என்ன? முதல் வகுப்பில் ஒரு 'கூலி' பிரயாணம் செய்யலாமா என்பதுதான். இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றாலுமென்ன? இந்தியன் இந்தியன்தானே?

காந்தி, சிந்தனையிலாழ்ந்துவிட்டார்: "என் உரிமைகளுக்காக நான் போராடுவதா? அல்லது இந்தியாவுக்குத் திரும்பி விடுவதா? இந்த அவமானங்களையெல்லாம் பொருட்படுத்தாமல், எந்த வழக்கை உத்தேசித்து வந்தேனோ அந்த வழக்கை முடித்துக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்புவதா? என்னுடைய கடமையை முடிக்காமல் திரும்புவதென்பது கோழைத்தனம். இங்கே ஆழ்ந்து பரவியுள்ள நிறத்துவேஷம் என்கிற வியாதியின் வெளிச் சின்னந்தான் நான் அனுபவிக்கிற இந்தச் சங்கடம். இந்த வியாதியை அடியோடு தொலைப்பதும் அதற்காகக் கஷ்டங்களை அனுபவிப்பதும் எனது கடமை." இருள் நிறைந்த இந்த இடத்திலிருந்துகொண்டு இவருடைய அன்பு நிறைந்த உள்ளம் இந்த மாதிரியாகச் சங்கற்பித்துக்கொண்டது. மறு நாள் ரெயிலேறி, சார்லஸ்டவுன் என்ற ஊரை அடைந்தார்.

இதற்குப் பிறகுதான் எத்தனை அவமானங்கள்!

சார்லஸ் டவுனிலிருந்து ஜோஹான்னஸ் பர்க்குக்கு ஒரு கோச் வண்டியில்தான் போக

வேண்டும். அந்தக் காலத்தில் ரெயில் கிடையாது. காசு கொடுத்து டிக்கட் வாங்கி யிருந்தார் காந்தி. ஆனால், மற்றப் பிரயாணிகளுடன் இவர் வண்டிக்குள் உட்கார வைக்கப்படவில்லை. வெள்ளையரின் பக்கத்தில் ஒரு கறுப்பன் உட்காரலாமா? எனவே, வழக்கமாகக் 'கண்டக்டர்' உட்காருகிற இடத்தில், அதாவது வண்டி யோட்டுகிறவனின் பக்கத்தில் உட்கார வைக்கப்பட்டார். 'கண்டக்டர்' பிரயாணிகளுடன் உள்ளே போய் உட்கார்ந்து கொண்டான். வண்டி, சில மைல் தூரம் சென்றது. சென்ற பிறகு, 'கண்டக்டரு'க்கு, வெளியிலே வந்து, காற்று வாட்டமாக உட்கார வேண்டுமென்று ஆசை தோன்றியது. உடனே வண்டியை நிறுத்தி, வண்டியில் ஏறுவதற்குப் படி யிருக்குமே, அந்தப் படியின் மீது அழுக்கடைந்த ஒரு கோணிப் பையைப் போட்டு, 'காந்தி இப்படி வந்து உட்கார்' என்று சொன்னான். முடியாதென்றார் காந்தி. அவ்வளவுதான். கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விழுந்தது. அறைந்ததோடு மட்டு மல்லாமல், அந்தத் துராத்மா, இந்த வருங்கால மகாத்மாவை, கையைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளவும் ஆரம்பித்தான். இவரோ, தம்முடைய மணிக்கட்டு எலும்புகள் முறிந்து போனாலும் போகட்டுமென்று, வண்டியின் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். அவன் பலசாலி; முரடன். இவரோ தேகபலமில்லாதவர்; ஆனால், பொறுமைசாலி. இருவருக்கும் நடைபெறுகிற இந்தக் கைபிடிச் சண்டையை உள்ளே யிருந்த வெள்ளைப் பிரயாணிகள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக்கூட மனம் இரங்கிவிட்டது. "காந்தி எங்களுடன் உள்ளே வந்து உட்காரட்டும்" என்று சொன்னார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்தக் 'கண்டக்டர்', தோல்வியடைந்தவன்போலானான்; சண்டை போடுவதை நிறுத்திக் கொண்டான். ஆனாலும், 'உன்னை ஒரு கை பார்த்துக் கொள்கிறேன்' என்று உருட்டி மிரட்டிக்கொண்டே சென்றான்.

இன்னொரு சம்பவம். அப்பொழுது தென்னாப்பிரிக்கா யூனியனின் தலைநகரான பிரிட்டோரியாவில் காந்தி யிருந்தார். அங்கே விநோதமான இரண்டு சட்டங்கள் அமுலில் இருந்தன. ஒன்று, இந்தியர்கள், இரவு ஒன்பது மணிக்குமேல் வெளியில் எங்கும் நடமாடக் கூடாதென்பது; மற்றொன்று, ரோட்டுகளின் இரு பக்கங்களிலுமுள்ள நடை பாதையின்மீது இந்தியர்கள் செல்லக் கூடாதென்பது. ஒருநாள், அரசாங்கத் தலைவரான க்ரூகர் என்பவர் வசித்துக்கொண்டிருந்த 'பிரசிடெண்ட் வீதி' என்ற தெருவில் நடை பாதையின்மீது சென்றுகொண்டிருந்தார் காந்தி. பிரசிடெண்ட் க்ரூகரின் வீடு வந்தது. வீட்டின் முன்புறத்தில் ஒரு காவற் சேவகன் நின்றுகொண்டிருந்தான். இந்தியர்கள், நடைபாதையில் நடந்து செல்லக்கூடாதல்லவா? இவர் நடை பாதையில் வந்துகொண் டிருப்பதை, அந்த முரடன் பார்த்தான். அதுவும் பிரசிடெண்ட் வீட்டு முன்னே இப்படிச் சட்டத்தை மீறி நடந்து செல்லலாமா? இவரைக் காலால் எட்டி உதைத்து ரோட்டுக்குள் தள்ளிவிட்டான்! அப்பொழுது அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்த காந்தியின் ஆங்கிலேய நண்பர் ஒருவர் அந்தக் காவற் சேவகனின் செயலைக் கண்டு ஆத்

திர மடைந்து, அவன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு காந்தியிடம் கூறினர். காந்தி மறுத்துவிட்டார். "அவனுக்கென்ன தெரியும்? பாவம்! எல்லாக் கறுப்பர்களும் அவனுக்கு ஒன்று தான். என்னுடைய சொந்த அவமானத்துக்குப் பரிகாரந்தேடிக் கொள்ளும்பொருட்டு, நான் எந்தக் கோர்ட்டுக்கும் செல்லத் தயாராயில்லை" என்றார்.

விவேகானந்தருடைய அனுபவங்க ளென்ன? அமெரிக்காவைப் போயடைந்த சில நாட்களுக்குப் பிறகு, சர்வதேச சமய மகாநாட்டை முன்னிட்டு, ஒரு நாள் சிக்காகோ நகரம் சென்றார். சென்ற இடத்தில், மேற்படி மகா நாட்டுக் காரியாலயத்தின் விலாசத்தை எங்கேயோ மறதியாக விட்டு விட்டார். எனவே, மகா நாட்டின் காரியாலயம் எங்கே, எங்கே யென்று பல இடங்களிலும் தேடி யலைந்தார். யாரும் இவருக்குச் சரியான தகவல் சொல்லவில்லை. கறுப்பு மனிதன்தானே? சுயராஜ்ய மில்லாத ஒரு தேசத்தின் மக்கள், அந்நிய நாடுகளில் எவ்வளவு கேவலமாகக் கருதப்படுகிறார்கள் என்பதை இவர் அப்பொழுதே தெரிந்து கொண்டுவிட்டார்.

வீதிகள் தோறும் அலைந்தார் விவேகானந்தர். ஹோட்டல்களுக்குச் சென்று தங்குவதற்கு இடங் கேட்டால், கறுப்பு மனிதனுக்கு இடமில்லை யென்பதைச் சொல்லாமல் சொல்லி வெளியே அனுப்பி விடுகிறார்கள். என்ன செய்வார்? கை கால்கள் சோர்ந்து போயின. இரவு வந்து விட்டது. நிறத்திமிர் பிடித்தவர்களுடைய இருதயம்போல், எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. சில்லென்று காற்று வேறே அடிக்கிறது. குளிரோ தாங்க முடியவில்லை. நேரே ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கே ஒரு மூலையில் பெரிய காலி மரப் பெட்டி யொன்று கிடந்தது. அதற்குள் சென்று படுத்துக் கொண்டார். படுத்ததுதான் தெரியும் இவருக்கு. ஒரே தூக்கம்.

காலையில் எழுந்தார். தேகத்திலே சோர்வு; வயிற்றிலே பசி. மறுபடியும் நகர் வலம் வந்தார். ஏதேனும் ஆகாரம் கிடைக்குமா என்று வீடுதோறும் நுழைந்து நுழைந்து பார்த்தார். ஆகாரம் கிடைக்கவில்லை. பரிகாசப் பேச்சுக்களும் அவமானங்களுமே கிடைத்தன. சிக்காகோ பட்டணத்திலே, கோடிக்கணக்கில் செல்வம் புரளுகிற அந்தக் குபேர புரியிலே, நம் விவேகானந்தருக்கு, உலகத்திலுள்ள சர்வமான பேருடைய வயிற்றுப்பசியையும் மட்டுமல்ல, ஆத்மப்பசியையும் தீர்த்து வைக்க வேண்டு மென்ற ஒரே லட்சியத்துக்காக வாழ்ந்த மகானுக்கு ஒருபிடி சோறு கிடைக்கவில்லை; ஒரு துண்டு ரொட்டி கொடுப்பாரில்லை. இந்தியா, அடிமை நாடா யிருப்பதற்கு, இந்த ஒரு தண்டனை போதாதா?

கடைசியில், 'மெய் சோர்ந்து வேறொரு சொல்லும் கூறாமல்' பாதையோரமாகப் போய் ஓரிடத்தில் உட்கார்ந்துவிட்டார் விவேகானந்தர். 'கடவுளே! இதுவும் உன் திருவுளச் சம்மதமோ' என்று இவருடைய தூய உள்ளம் ஏங்கி நின்றது. அப்பொழுது, திடீரென்று, இவர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு எதிரே, ஒரு மாளிகையின் வாயிற் கதவு திறந்தது. அங்கிருந்து ஒரு பெண்ணரசி, இவர் அருகே வந்து, "ஐயா! தாங்கள் சர்வசமய மகாநாட்டுக்குப் பிரதிநிதியாக வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். "ஆம்" என்றார் இவர். உடனே

அந்த அம்மையார், இவரைத் தமது மாளிகைக்கு அழைத்துக் கொண்டுபோய் உபசாரம் செய்தார்; ஆகாரம் அளித்தார். அந்த அன்னபூரணி வாழ்க!

இங்ஙனம் இருவரும் அந்நிய நாடுகளில் அநேகவிதமான கஷ்ட நிஷ்டுரங்கள் பட்டுக்கொண்டிருந்த காலத்தில் இவர்களைப் பற்றி நாம் யாவரும் நினைக்கக் கூட இல்லை. ஆனால், இவர்களென்னவோ, தங்கள் தாய்நாட்டு மக்களின் நினைவுடையவர்களாகவே இருந்தார்கள். ஒரு சமயம் விவேகானந்தருக்குச் சிக்காக்கோ நகரில் ஒருதனவானின் மாளிகையில் ஆடம்பரமான விருந்தொன்று நடைபெற்றது. விருந்தன்றுஇரவு இவர் அங்கேயே தங்கினர். இவருக்கென்று தனியான அறை, மெத்தென்ற படுக்கை முதலிய எல்லாச் சௌகரியங்களையும் அந்தப் பெரிய மனிதர் செய்து கொடுத்தார். விவேகானந்தரும் அந்த அறைக்குச் சென்று பஞ்சணைமீது படுத்துக்கொண்டார். ஆனால், இவருக்கு அது முள் படுக்கையாக இருந்தது. தூக்கமே வரவில்லை. தம் தாய்நாட்டு மக்களின் வறிய கோலம் இவர் முன்னே வந்து நின்றது. கண்கள் நீர் பெருக்கின. கதறினர்: "தாயே! என் ஜன்மபூமி, சொல்லொணுத வறுமையிலே அழுந்திக் கிடக்கிறபோது, எனக்குப் பெயர் எதற்கு? புகழ் எதற்கு? இவைகளைப்பற்றி எனக்காவதென்ன? இந்தியாவின் பாமர மக்களை யார் கைதூக்கி விடப் போகிறார்கள்? அவர்களுக்கு யார் சோறு கொடுக்கப் போகிறார்கள்? மாதா! அவர்களுக்கு நான் எப்படி உதவி செய்வதென்று எனக்கு வழி காட்டு."

விவேகானந்தரின் உள்ளம் எந்த நிலையிலே நின்றது பார்த்தீர்களா? இவர் எதற்காக அமெரிக்கா சென்றார்? இவரே, ஒரு கடிதத்தில் காரணங் கூறுகிறார்: "என்னுடைய ஆவலைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவோ அல்லது புகழுக்காகவோ, நான் இந்த நாட்டுக்கு வரவில்லை. இந்தியாவிலுள்ள ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்கு இங்கே ஏதேனும் வழி ஏற்படுமா என்று பார்ப்பதற்காகவே வந்தேன்." ஆனால், இதை அப்பொழுது—ஐம்பது வருஷங்களுக்கு முன்னால்—நாம் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை.

காந்தியும் விவேகானந்தரும் முறையே தென்னப்பிரிக்காவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்ற விஷயத்தில் ஒரு வித்தியாசம் உண்டு. இருவரும் போகிறபோது, சிறிதுகாலம் அங்கே தங்கிவிட்டுத் திரும்பி விடவேண்டுமென்ற எண்ணத்துடனேயே போனார்கள். ஆனால், விவேகானந்தருக்குத்தான் அது சாத்தியமாயிற்று. காந்தியோ, தென்னப்பிரிக்காவிலேயே சுமார் இருபது வருஷ காலத்துக்குமேல் நிரந்தரமாகத் தங்கும்படி நேரிட்டது. விவேகானந்தர், வெளிநாடுகளுக்குச்சென்று இந்தியர்களின் பரம்பரைக்கும் நாகரிகத்துக்கும் ஒரு பெருமையை வாங்கிக் கொடுத்தார். காந்தியோ, வெளிநாடுகளுக்கு வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் சென்றிருந்த இந்தியர்களுக்குத் தன்மதிப்புணர்ச்சியை ஊட்டினர். காந்தி, தென்னப்பிரிக்கா செல்வதற்கு முன்னர், அங்கிருந்த இந்தியர்கள், அடிமைகளைப்போலவே நடத்தப்பட்டார்கள். இந்தியர்களும் அப்படியே நடந்துகொண்டார்கள். லட்சக் கணக்கில் பணஞ் சம்பாதித்த வியாபாரிகள்கூட, 'பணஞ் சம்பாதிக்க வந்த இடத்தில் மானத்தைப்

பார்த்தால் முடியுமா?' என்கிற மாதிரியாகக் கேட்டார்கள். காந்தியின் மனித உள்ளம் இதைக் கேட்டு வெகுண்டு எழுந்தது. 'மானமழிந்து வாழாமை முன்னினிதே' என்பது சத்தியவாசகமல்லவா? முதலில் ஒரு வருஷ ஒப்பந்தத்தின்பேரில் வக்கீலாகச் சென்ற காந்தி, அங்கிருந்த இந்தியர்களின் மானத்தைக் காப்பாற்றும்பொருட்டு, அங்கேயே இருபது வருஷ காலம் தங்கினர். சென்றபோது ஒரு வக்கீலாகச் சென்ருர். அங்கே, இந்தியர்களின் கட்சியை எடுத்துச் சொல்லும் வக்கீலாக வாழ்ந்தார். இந்தியாவுக்குத்திரும்புகிறபோது, ஒரு வெற்றி வீரராகத் திரும்பினர்.

காந்தியும் விவேகானந்தரும் வெளிநாடுகளில் சென்று வெற்றிச் சங்கு ஊதிய பிறகுதான், அவர்களுடைய பெருமையை நாம் உணர்ந்து கொண்டோம். அவர்கள் திரும்பி வந்தபோது, ஜே கோஷம் போட்டோம். இதற்கு நமது அறியாமை காரணமென்று சொல்வார்கள். அப்படிச் சொல்வது ஒருசிலருடைய சம்பிரதாயமுங்கூட. ஆனல்,உண்மையில் நமது அடிமைத்தனந்தான் காரணம். எந்த ஜாதி, அடிமைக் குழியிலே விழுந்து கிடக்கிறதோ, அது தன்னையே மறந்துவிடுகிறது. ஆள்வோரின் பாதுகாப்பிலே அது தன் சுய உணர்வை இழந்து கிடக்கிறது. அந்த நிலையிலே, தன்னைப்பற்றிய ஒரு தாழ்வான எண்ணம், 'அந்நியர்களுடைய நாகரிகத்திலே ஒரு மோகம், எப்பொழுதும் ஒருவித அச்சம், புதுமை போலித்தனம் பகட்டு முதலியவைகளிலே மேலெழுந்த வாரியான ஒரு நம்பிக்கை—ஆகிய இந்தத் தன்மைகளெல்லாம் குடிகொண்டுவிடுகின்றன. இவைகளிலிருந்து அந்த ஜாதியைக் கைதூக்கிவிட்டு, அதற்குச் சுய உணர்வை உண்டுபண்ணுவதென்பது லேசான காரியமா? அந்தக் காரியத்தை யார் செய்ய முடியும்? அயலார் வந்து செய்ய முடியுமா? அயலார், அதிலும் நல்லெண்ண முடையவர்கள், எட்டியிருந்து அநுதாபம் காட்டலாம். ஆனல், யார் அந்த ஜாதியிலேயே ஒருவராகப் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருகிருர்களோ, யாருக்குத் தங்கள் ஜாதி இப்படிக் கேவலமான ஸ்திதியிலிருக்கிறதே யென்று இருதயத்திலிருந்து ரத்தம் வடிகிறதோ, யார் விருப்பு வெறுப்பில்லாமல் பலனை எதிர்பாராமல் செய்ய வேண்டிய கடமையைச் செய்துகொண்டு போவதிலேயே திருப்தியடைகிருர்களோ அவர்கள்தான் அந்த ஜாதியைக் கைதூக்கிவிட முடியும். அப்படிக் கைதூக்கிவிடுகிற முயற்சியிலே, அவர்கள், தங்கள் சுய ஜாதியினராலேயே எள்ளி நகையாடப் படலாம்; எண்ணிறந்த இம்சைகளுக்கும் உட்படுத்தப் படலாம். ஆனல், அவர்கள், இவைகளை யெல்லாம் லட்சியம் செய்வதில்லை; செய்யவும் மாட்டார்கள். தூங்கிக்கொண் டிருப்பவர்களைத் தட்டி எழுப்புவதற்காகச் சதா விழித்துக்கொண்டிருப்பதும், சுமந்து செல்கிறவர்களின் சுமையை இறக்கி வைப்பதற்காகக் காத்துக்கொண் டிருப்பதும், தீமைசெய்தவர்களுக்கு நன்மை செய்துகொண் டிருப்பதும் இவர்களுடைய அன்ருட வேலைகளா யிருக்கின்றன. இவர்களைத்தான் மகான்களென்று போற்றுகிருேம்.

காந்தியும் விவேகானந்தரும் மகான்க ளல்லரோ? பெரியார்க ளல்லரோ?

★

சுவாமி விவேகானந்தர்

ஏ உயர்வகுப்பு இந்திய மக்களே!

நீங்கள் ஆர்ய வம்சத்தில் பிறந்த பெருமையை எவ்வளவோ கொண்டாடிக் கொண்டிருக்கலாம்; புராதன இந்தியாவின் மகிமைகளை இரவும் பகலும் பாடிப் பரவலாம்; உங்கள் பிறப்பின் பெருமை என்ற தோகையை விரித்து மயில்போல் ஆடலாம். ஆனால், நீக்கள் உண்மையிலே உயிர்வாழ்வதாகவா நினைக்கிறீர்கள்? நீங்கள் வெறும் பஞ்சடைத்த பொம்மைகள்-பதினாயிர வருஷம் பழசான பொம்மைகள்!

உங்கள் மூதாதையர் எவர்களை 'நடைப்பிணங்கள்' என்று இழித்துரைத்தார்களோ அவர்களிடமே, இந்தியாவில் இன்னுமின்று மிஞ்சியுள்ள ஏதோ சொற்ப ஜீவன் காணப்படுகிறது; நீங்கள் தான் உண்மையான 'நடைப்பிணங்க'ளா யிருக்கிறீர்கள்! உங்கள் வீடுகளும் உங்கள் பண்டங்களும், ஜீவனற்றுப் பழமையாகி, பொருட்காட்சிச் சரக்குகள் போல் காண்கின்றன! உங்கள் பழக்க வழக்கங்களையும் நடைகளையும் வாழ்க்கை முறைகளையும் கூட நேரே காணும் ஒருவனுக்கு, ஏதோவொரு பாட்டி கதையைக் கேட்பது போன்ற நினைப்புத்தான் வருகிறது! உங்களிடம் வந்து நெருங்கிப் பழகிய ஒருவன் கூட, வீடு திரும்பும் போது, ஏதோவொரு சித்திரக் காட்சிச் சாலையில் உள்ள வர்ணப் படங்களைப் பார்த்து வந்தது போலவே உணர்ச்சி கொள்ளுகிறான்!

மாயை சூழ்ந்த இவ்வுலகில், ஏ உயர் வகுப்பு மக்களே! நீங்கள் தான் உண்மையிலே மாயங்களாக, விளங்கா மர்மமாக, கானல் நீராக, இருக்கிறீர்கள்! நீங்கள் இறந்த காலத்தின் பிரதிநிதிகள்; அதன் நானாவித அம்சங்களையும் போட்டுக் குழப்பிய குழப்பத்தின் பிரதிநிதிகள்! அந்தக் குழப்பமே, அஜீர்ணத்தினால் வரும் பயங்கரக் கனவு போல், இன்று உங்களை அலட்டிக் கொண்டிருக்கிறது.

நீங்கள் வெறும் சூன்யம்; வருங்காலத்தின் அநாமதேயங்கள்; கனவுலகில் வாழும் உருவெளிகள். நீங்கள் ஏன் இன்னும்

அது யாரால், எங்கே சமையப் போகிறது- வரப்போகும் இந்தியா? பழமையின் ஞான பொக்கிஷங்களை வைத்துக்கொண்டிருந்தும் ஜீவனற்றுக்கிடக்கும் உயர் வகுப்பு மக்களாலா? அல்ல, அல்ல. உழைப்பாளிகளால்தான் அது நிர்மாணமாகப் போகிறது என்கிறார் தீர்க்காதரிசியான விவேகானந்த சுவாமிகள்.

இங்கே தங்கி வட்டமிடுகிறீர்கள்! சதையற்று, குருதியற்று, இறந்த கால இந்தியாவின் சவ எலும்புக் கூடுகளான நீங்கள் ஏன் நொடியிலே பொடிந்து மண்ணாகிக் காற்றிலே பறந்து மறையாமலிருக்கிறீர்கள்?

ஆ! உங்கள் எலும்பு விரல்களிலே, உங்கள் முன்னோர் சேகரித்து வைத்த பொக்கிஷமான மதிப்பரிய மாணிக்க மோதிரங்கள் மாட்டியிருக்கின்றன! நாற்றமெடுத்த சவமான உங்கள் மார்பிலே எண்ணற்ற புராதனப் புதையல்கள் அணிந்திருக்கின்றன! இதுவரையில் அவைகளைப் பிறரிடம் ஒப்படைக்க, உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கல்வியும் அறிவொளியும் பரந்த இந்நாட்களிலே, அவைகளை உங்கள் வார்சுகளிடம் கொடுத்துவிடுங்கள்; அதிவிரைவிலே கொடுத்து விடுங்கள்! நீங்கள் சூன்யத்தோடு சூன்யமாகி, மறைந்து, உங்கள் இடத்திலே நவஇந்தியா உதயமாக வழிவிடுங்கள்.

மேழி பிடித்த குடியானவனின் குடிசையிலே, செம்படவன், சக்கிலி, தோட்டிகளின் குச்சில்களிலே, அந்த நவஇந்தியா உதயமாகட்டும். பலசரக்கு வியாபாரியின் கடையிலும், ஆப்பக்காரியின் அடுப்பிலும் அது உதயமாகட்டும். தொழிற்சாலையிலும், கடைகளிலும், சந்தைகளிலும் அது உதயமாகட்டும். வனங்களிலும் நந்தவனங்களிலும், குன்றுகளிலும் பசிய மலைகளிலும் அது உதயமாகட்டும்.

இறந்த காலத்தின் எலும்புக் கூடுகளே! இதோ உங்கள் முன்னே, உங்களின் வார்சுகள்-வருங்கால இந்தியாவுக்குரியவர்கள்-நிற்கிறார்கள். உங்களால் எத்தனை விரைவில் முடியுமோ அத்தனை விரைவாக, உங்கள் புதையல்களையும் மாணிக்க ஆபரணங்களையும் அவர்களிடம் வீசி எறிந்துவிடுங்கள். நீங்களோ காற்றிலே மறைந்து விடுங்கள்; திரும்பத் தலைகாட்டாதீர்கள். ஆனால், உங்கள் செவிகளை மட்டில் திறந்து வைத்திருங்கள்; நீங்கள் மறைந்த நொடியிலேயே, மறுமலர்ச்சி இந்தியா துவங்கிய களியாட்ட கோஷம், பல கோடி இடிகளென அகிலமெங்கும் அதிரும் எதிரொலியுடன் முழங்குவதைக் கேட்பீர்கள்: 'குருநாதனுக்கு ஜே!'

★

விக்கிரக வணக்கம்

ராஜபுதனத்தில், மங்கள் சிங் என்ற மகாராஜாவை, சுவாமி விவேகானந்தர் சந்தித்தார். மகாராஜா கேட்டார்: "சுவாமி! எனக்கு விக்ரகவணக்கத்தில் நம்பிக்கை யில்லை. மரத்தையும், மண்ணையும், செம்பையும் நான் வணங்கேன். இதனால் நான் மறுமையில் துன்புறுவேனா?"

பக்கத்திலே மகாராஜாவின் படமொன்றை, சுவாமிகள் கண்டார். திவானைப் பார்த்து, "இதன் மீது துப்புங்கள்" என்றார். திவான் நடுங்கினார், "துப்புங்கள்! துப்புங்கள்!" என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தினார் சுவாமிகள்.

திவான் பதைபதைத்து, "சுவாமி என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்? மகாராஜாவின் திரு உரு அல்லவா இது?" என்றார்.

சுவாமிகள் மகாராஜாவை நோக்கித் திரும்பி, "பாருங்கள், மகாராஜா! இது ஒரு பொருளில் நீங்கள் அல்ல; மற்றொரு பொருளில் நீங்களே. இதைப் பார்க்கையில், உங்கள் நினைவு உங்கள் ஊழியருக்கு வருகிறது. இதுபோல் தான் விக்கிரக வணக்கமும்" என்றார்.

மகாராஜா மனம் மாறி, "எனக்குக் கண் திறந்தீர்கள்" என்று கூறி, சுவாமியை வணங்கினார்.

அகோர வெயிலில் குளிர்ச்சி தருவது

கார்டில்

தினசரி கார்டில் உபயோகியுங்கள். அது தலைசிறந்தது

அகோர வெயிலால் உண்டாகும் எரிச்சலிலிருந்து தடுத்துக்கொள்ள கார்டில் பவுடரை தினசரி உபயோகியுங்கள். முதல்தடவை போட்டுக் கொண்ட உடனே கார்டில் பவுடர் குளிர்ச்சி தருகிறது. முப்பது வருஷங்களுக்கு மேலாக கார்டில் பொதுஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இன்றும் அன்று போலவே அது அகோர உஷ்ணத்தைப் போக்கும்

- சாதனமாயுள்ளது -

★

குழந்தைகளுக்கு கார்டில்

குழந்தைகள் பராமரிப்பில் கார்டில் பவுடர் தலைசிறந்தது. ஏனெனில் சுபாவமான வாசனை கலப்பற்ற அந்த பவுடரில் குழந்தையின் மெல்லிய தேகத்துக்கு எரிச்சல் தரும் பொருள் ஒன்றும் கிடையாது. இத்துடன் வேறொரு பவுடர் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. வெயில் கொடுமையையும் போக்கி சொரசொரப்பான சருமத்தை

— மழமழப்பாக்குகிறது —

பவுடர் தூவுவதற்கு வசதியான மேல்மூடியுடன் கூடிய

பெரிய ஸைஸ் டின் ஒன்று ரூ. 2

ஸ்பென்ஸர் அண்டு கோ., லிமிடெட்

சென்னை

மானுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

SPENCER & CO., LTD., MADRAS

'அசோகா' பொட்டணங்களைப் பார்த்ததும் அவருக்கு 'டீ' ஞாபகம் கூடப் போய்விட்டது. தாம்பூலத்துக்கு அவசரப் படுகிறார் போலிருக்கிறது. உத்தம மனைவி 'டீ'யை ஞாபகப்படுத்துவது இயற்கைதானே?

REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர் நெ. 1506

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

பீதாம்பரையர்

'அலங்கலில் தோன்றும் பொய்மை அரவு', அவர் பாடும் பாட்டு. அந்த 'அரவு' தான், அவருடைய வேடிக்கையும். மந்திரமில்லை; மாயமல்லை. ஆனால், அந்த விந்தையும் வியப்பும்தான் என்ன!

—'ஸரஸி'

ஊருக்கு ஒரு பீதாம்பரையர் வந்தார். கோடி வீட்டுத் திண்ணையில் அவர் உட்கார்ந்திருப்பதாக, ஒவ்வொரு வீட்டுக்கும் செய்தி எட்டியது. உடனே நான்—அப்போது சிறு பையனான நான்—எனது வானர சைன்யத்துடன் கிளம்பினேன்.

சிறுவயதில், என்னைச் சுற்றி, எப்போதுமே ஒரு சிறிய வானர சைன்யம் உண்டு. இங்கே என் குழந்தைப் பருவத்தில் ஒரு கிழவனார் எனக்குச் சூட்டிய ஒரு பட்டம் ஞாபகத்துக்கு வருகிறது. இப்பொழுது கூட அதைச் சொல்ல, எனக்குக் கொஞ்சம் வெட்கமாய்த்தான் இருக்கிறது. வெட்கம் இரண்டு விதங்களில்—ஒன்று, என்ன மோசமான பட்டம் என்ற எண்ணம்; மற்றது, அந்தப் பட்டம் வாங்கிய நாமா இப்படி இருக்கிறோம் என்ற வருத்தம். அப்படி என்ன விசேஷமான பட்டம் என்று கேட்பீர்கள். ஒன்றுமில்லை; 'மந்திரிக் குரங்கு' என்ற பரிணாம ரீதியான பட்டம்! இன்னொரு பையனுக்கு 'ராஜாக் குரங்கு' என்பது கிழவனார் சூட்டிய பட்டம். எல்லாப் பையன்களும் நான் சொன்னபடி ஆடுவார்கள்—'ராஜாக் குரங்கு' உள்பட. இதோ இந்த 'நடை வண்டி'யில் அதோ அந்த எருமைக் கன்றைக் கட்டி வண்டி சவாரி செய் என்று 'ராஜாக் குரங்கு'க்கு ஒருமுறை நான் யோசனை சொல்ல, அவன் அப்படியே செய்து மூன்று குட்டிக் கரணங்கள் அடித்துப் பல் உடைய, அவனுடைய அருமை அம்மாள் என்னிடம் குஸ்திக்கு வர, நான் ஓட்டமாய் ஓடிய ஒரு நாள் சம்பவமும், எனக்கு மரம் ஏறத் தைரியமில்லாவிட்டாலும் ஊரிலுள்ள பையன்களையெல்லாம் கொய்யா மரங்களைக் காலி செய்யும்படி செய்து பலனில் நானும் பங்குகொண்ட பல நாட்களும் எனக்கு இன்றும் நினைவிருக்கின்றன. ஆனால், இந்தப் பீதாம்பரையர் வந்தது அந்த ஊரில் அல்ல; வேறே ஊர். என்றாலும், அங்கேயும் ஒரு சிறிய 'படை' என்னிடம் திரண்டுதானிருந்தது. படையுடன், பீதாம்பரையரைப் பார்க்கப் புறப்பட்டேன்.

பீதாம்பரையர் நல்ல வாலிபம். செக்கச்செவேல் என்றிருந்த மேனி. வைதீகத் திருக்கோலம், விபூதி, உருத்திராக்கங்கள், கச்சிதமாய், அவ்வவற்றிற்குரிய அங்கங்களில் துளக்கமறத் துலங்கின. மேலே ஒரு செம்பட்டை, அரையுங் குறையுமாய் அவர் போர்த்தியிருந்ததிலும், ஒரு லாகவம் காணப்பட்டது. கையிலே, கம்பராமாயணம்............கம்பனுக்கு

இப்போதுதான் யோகம் என்று நினையாதீர்கள்; அப்போது கிராம கிராமாந்தரங்களில் இருந்த கம்பன், இப்போது மெள்ளப் பட்டணம் பார்க்க வந்திருக்கிறான். அவ்வளவுதான் விஷயம். கிராமத்துச் 'சரக்கு'கள் பட்டணத்துச் சந்தைக்கு வந்தால், என்னாகும்? கலப்படம் மலியும். ஆனால், அந்தப் பிரச்னை நமக்கெதற்கு இங்கே? நம் பீதாம்பரையர் என்ன செய்துகொண் டிருந்தார் என்றல்லவா சொல்ல வந்தேன். அவர் கம்ப ராமாயணப் பிரசங்கம்தான் செய்துகொண் டிருந்தார். 'அலங்கலில் தோன்றும் பொய்மை அரவென .....' என்ற மாயா விளக்கத்தை விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது எனக்கு அது ஒன்றும் புரியவில்லை. இப்போது புரிந்ததா என்றால், 'இப்போதைக் கப்போதே மேல்' என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆயிற்று; தெய்வ வணக்கம் ஆயிற்று. அடுத்த பாட்டு, பிறகு, அதற்கும் அடுத்த பாட்டு. இப்படியாக, மூன்று, நான்கு பாட்டுக்களைப் படித்து வியாக்கியானம் செய்தார் பீதாம்பரையர். வாசாமகோசரமாக வர்ஷித்து விட்டார். நல்ல வியாகரண பண்டிதரான சாம்பசிவ சாஸ்திரிகளே திறந்த வாய் மூடாமல், மகா வியப்புடன் அந்தப் பிரசங்க மாரியைக் கேட்டுக்கொண் டிருந்தார். எனக்கும் ஆச்சர்யந்தான் - பிரசங்கத்தில் அல்ல; ஊரெல்லாம் தம் புலமைக்கு வணங்கி மரியாதை செலுத்தி வரும் சாஸ்திரிகளே மயங்கிய காட்சியைக் கண்டு ஆச்சர்யம். ஆனால், என் படை ஆச்சர்யப்படவில்லை · அது என்னைப் பின்வாங்குமாறு முடுக்கிக்கொண்டு மிருந்தது. கக்கரிப் பந்தலைப் படை யெடுத்தாலும் ஏதாவது பயனுண்டு என்று அதன் எண்ணமா யிருந்திருக்கலாம். ஆயினும், நான் இன்னும் கொஞ்சம் காத்திருந்தேன், இந்தக் கம்ப ராமாயணம் எங்கே தான் போய் முடிகிறது எனப் பார்க்கலா மென்று.

அது வெகு சீக்கிரத்திலேயே முடிந்து விட்டது. நாலாவது பாட்டில் பாதியோடு, பீதாம்பரையர் நிறுத்திக் கொண்டு, தலையை நிமிர்ந்து, "இப்படியே போகிறது" என்று பாத நாட்டிய அபிநய தோரணையில், எல்லையற்ற அகண்டத்தைக் குறிப்பிடும் முத்திரை போல, தமது லளிதமான கையை வானை நோக்கி எறிட்டுத் தூக்கிக் காட்டினார். கம்ப ராமாயணம் கால் தலை காண முடியாப் பெருங் கடல் என்றும், அதில் கை சளைக்காமல் என்றென்றும் தாம் நீந்திக் கொண்டே யிருக்க முடியுமென்றும், ஆனால் அது எதிரே யிருப்போருக்குக் கஷ்டமாகுமே என்ற கருணையினாலேயே தாம் நிறுத்தவேண்டி யிருப்பதாகவும் தொனித்தது அவர் குரல்......... அப்பாடா! பிரசங்கம் முடிந்தது!

பின்பு, பீதாம்பரையர், ஊர் யோக க்ஷேம விசாரணைகளில் இறங்கினார். அவருடைய தாத்தாவுக்கும் இந்த ஊரிலிருந்த தாத்தாக்களுக்கும் இருந்த சம்பந்தம், ஸ்தல மூர்த்தியின் மகிமை, நெல் விளைச்சல் இப்படியாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு, மாலையிலே தமது வித்தையைக் கொஞ்சம் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று, அவர் கேட்டுக் கொண்டார். முதல் வீட்டுக்காரரான சாஸ்திரிகளும் அதற்கு இசைந்தார். பீதாம்பரையர் ஸ்நானத்துக்கு எழுந்தருளினார்.

அடுத்த காட்சி, எங்கள் வீட்டுத் திண்ணையிலே நடந்தது.

"அடடா! என்ன போங்கள்! பீதாம்பர வேடிக்கை என்றால், வெறும் கூத்தாடித்தனம் என்று அல்லவா நாம் நினைக்கிறோம். ஆனால், அவரிடம் என்ன வித்பத்தி நிறைந்திருக்கிறது! அடடா! அவர் கம்பராமாயணம் சொன்னால் இன்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கலாம்; அவ்வளவு அற்புதம்........." என்று புகழ்ந்தார் சாஸ்திரியார்.

தலையை ஆட்டினார் என் சிற்றன்னையின் கணவர்: "சரி; சாயங்காலம் ஆடச் சொல்லி, ஏதாவது கொடுத்து விட்டால் போகிறது. விஷயமெல்லாம் இதற்குத்தானே?"

ஆம்; அதற்குத்தான். 'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும்......' நாம் செய்வதெல்லாம் 'நாழி அரிசிக்கே' தானே?

மாலையில், டண் டண் டணார், டண் டண் டணார் என்ற ஓசை தெருக் கோடியிலே கேட்டதும், எல்லாருக்கும் முன்னே நானும் என் படையும் ஆஜராகி விட்டோம். கூட்டமும் நன்றாகவே திரண்டது. பீதாம்பரையரும் அவருடைய சிஷ்யர்களும் பல வித்தைகள் காட்டினார்கள். எல்லாம் எனக்கு ஞாபகத்தில் இல்லை. பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் என்ற கதையில் இந்திர ஜாலம் என்றோ மகேந்திர ஜாலம் என்றோ வருகிற கதையைப் படித்திருந்த எனக்கு, ஐயரின் இந்த வித்தைகளில் ஒன்றோ இரண்டோதான் சற்று ஆச்சர்யமாக இருந்தது. மற்றவை சாதாரணமாகவே தோன்றின.

மாத்திரைக் கோலை வைத்துக் கொண்டு, கோலிக் குண்டுகளை ஒரு கிண்ணத்திலிருந்து மறு கிண்ணத்துக்கு, ஐயர் போகச் செய்தார். அவருடைய சீடனோ, வாயால் குடித்த தண்ணீரைக் காதால் விட்டான். குட்டிச் சீடன் அபூர்வமான அந்தர்கள் அடித்தான். சிக்கிச் சிடுக்காக்கிக் கசக்கி ஒரே வாயாய் மென்று விழுங்கிய நூல், பச்சை, சிவப்பு, மஞ்சள், ஊதா, நீலம், கறுப்பு முதலிய பல வர்ணங்களில் நெடு நீளமாய் இழுக்க இழுக்க வெளி வந்தது. பூமிக்குள் புதைத்த மோதிரம் எலுமிச்சம் பழத்துக் குள்ளிருந்து வந்து குதித்தது. சீட்டுக்கள், வளையங்கள், இன்னும் பல தளவாடங்கள் ஆகியவைகளைக் கொண்டும், ஐயரின் கோஷ்டியார் பல வேடிக்கைகள் செய்தார்கள்.

பிறகு, நான்கு சிறு கம்பங்களை ஐயர் நட்டார். மேலே ஒரு விதானம் கட்டி, நாலுபுறமும் திரையிட்டு மூடினார். ஒரு புறத்தில் திரையைத் திறந்து, வித்தையாடிகளில் ஒருவனை, ஒரு கம்பத்தில் கயிற்றால் கட்டி, கடைசி முடிச்சை யார் வேண்டுமானாலும் போடச் சொன்னார். பின்பு கையிரண்டையும் சேர்த்து விலங்கிட்டுப் பூட்டிச் சாவியை எங்களிடம் கொடுத்துவிட்டார். என்னவோ மந்திரம் உச்சரிப்பவர் போல ஏதேதோ சொல்லி, திரையை மூடிமூடித் திறந்தார். ஒவ்வொரு தடவை திறக்கும் போதும், கட்டுக்கட்டி விலங்கிட்ட வித்தையாடி, கட்டவிழாமல், கம்பத்துக்குக் கம்பம் மாறி நின்றான்.

இன்னும் வித்தையாடி திரைக்குள்தான் இருக்கிறான். திரை மூடியபடி இருக்கிறது. உள்

ளிருக்கும் வித்தை யாடிக்கும் வெளியே இருக்கும் பீதாம்ப ரையருக்கும் தர்க்கம் நடக்கிறது.

"அடே, வா வா! வெளியே வா."

"நான் மாட்டேன்."

"ஏன் மாட்டாய்?"

"பறக்கப் போகிறேன்."

"எவ்விடத்துக்கு?"

"டில்லிப் பட்டணத்துக்கு."

"அடடே! எங்களை விட்டுப் போய்விடாதே."

பதில் இல்லை.

"அட தம்பீ! மோசமா செய்து விட்டாய்!"

ஈன சுரத்தில் பதில் வருகிறது: "நான் இப்போது திருவாரூருக்கு மேலே பறந்து கொண்டிருக்கி றேன். நொடியில் திரும்பி வரு கிறேன். வரும் வரையில் திரை யைத் திறக்கவேண்டாம். திறந் தால், பறந்தேபோவேன்."

"ஐயையோ! அப்படிச் செய்துவிடாதே. வா, வா. கீழே வா."

"வருவேன். ஆனால், ரொம் பத் தாகமா யிருக்கிறது."

"சுத்த ஜலம் ஒரு செம்பு வேண்டுமா?"

"வேண்டாம்."

"இளநீர் ஒரு டஜன் வேண் டுமா?"

"வேண்டாம்."

"மோர் ஒரு படி வேண் டுமா?"

"வேண்டாம்."

"பால் ஒரு குடம் வேண் டுமா?"

"வேண்டாம்."

"உன் தாகத்துக்கு, பின் என்னதான் வேண்டும்?"

"சிவப்பா யிருக்குமே, அது வேண்டும்."

"ரத்தமா?"

"ஆமாம்."

"ஆடு வெட்டவா?"

"ஐயோ வேண்டாம்."

"கோழி அறுக்கவா?"

"சை! வேண்டாம்."

"எதுதான் வேண்டும்? சொல் லித் தொலை."

"நர பலி."

எங்கள் அத்தனை பேரையும் தூக்கி வாரிப் போட்டது. பீதாம்பரையர் மட்டில் துளிக் கூட மனங்கலங்க வில்லை. டமா ரத்தைப் பலமாக அடிக்கச் சொன்னார். குட்டிச் சிடனைத் திரைக்கு முன்னே கொண்டு வந்து நிறுத்தினர்.

"தம்பீ! மேலே போன அண் ணனுக்காக உன் உயிரைக் கொடுப்பாயா?"

"ஆஹா! கொடுக்கிறேன். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு" என்று வீரதீரமாய்ச் சொல்லிய சிறுவன், கம்பீரமாய் மார்பைத் திறந்து காட்டினன்.

பீதாம்பரையரும் உறையி லிருந்து ஒரு கத்தியை எடுத்து விறுவிறு என்று தீட்டினர். டும்டுடும்டும், டும்டுடும்டும் என்று அலறியது முரசம். கூட்டத்தி லிருந்த அனைவரும் பரபரப்

போடு பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென்று ஒரு மூலையிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"அட பாவி! விடு என்னை!"

"அட இழுக்காதே, ஐயா!"

"ஐயோ, இதென்ன மோசம்! என்னைச் சுற்றிக் கட்டிக்கொண்டிருக்கிறானே!"

"நானா கட்டினேன்? என்னைத்தான் கட்டி விலங்கிட்டிருக்கிறதே!"

இந்தக் கலவரம் நடந்த திசையிலே, பலர் சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அங்கே பார்த்தால், திரைக்குள் இருந்த வித்தையாடி, கட்டும் விலங்குமாய் வெளியே நிற்கிறான். அவனுடைய கட்டிலே, கம்பத்துக்குப் பதிலாக, வேடிக்கை பார்க்கவந்த ஓர் அப்பாவி மனிதன் மாட்டிக்கொண்டிருக்கிறான்! இப்படி ஒருவருக்கும் தெரியாமல், மாயமாய் வித்தையாடி வெளியே வந்துவிட்டான்!

இந்த அரிய வித்தைக்குப் பிறகு, ஐயரின் பெரிய வித்தையான வாயுஸ்தம்பம் நடைபெற்றது. நாலு கம்பங்களுக்கும் நடுவே ஒரு சிறிய கழி நடப்பட்டது. அதன் பக்கத்தில் முகத்தை விலக்கி உடம்பெல்லாம் அழகிய பட்டினால் மூடி, ஐயர் கால் நீட்டிப் படுத்துக்கொண்டார். சேஷ சயனப் பெருமாள்போல் ஒரு கையைத் தலைக்கு முட்டுக் கொடுத்து, மறு கையால் தரையில் நட்டிருந்த சிறு கழியின் அடியை வருடிக்கொண்டு, கண்ணை மூடி, சுவாஸ பந்தனம் செய்வதுபோல் காணப்பட்டார். திரை விடப்பட்டது.

சில நிமிஷங் கழித்து, பிரதம சீடன், திரையை அகற்றினான். என்ன ஆச்சர்யம்! ஐயர் தரைக்குமேல் இரண்டடி, உயர்ந்து, அந்தரத்தில் அநாயாசமாகப் பஞ்சணைமீது படுத்தவர் மாதிரி கால் நீட்டி உறங்குகிறார். தரைக்கும் அவருக்கும் தொடர்பே யில்லை. சிறு கழியின் அடியை விட்டு, இப்போது அதன் முடியைக் கைப் பிடித்திருக்கிறார். இந்த அற்ப ஆதாரத்தை அல்லாமல் வேறேதுமில்லை; ஆகாச சயனம் என்றே சொல்லவேண்டும். பிரமித்துப் பரம மௌனத்துடன், அந்த அற்புதக் காட்சியை அனைவரும் கண்ணாரக் கண்டோம். ஒரு வினாடி சென்று, இரு வினாடியும் கழிந்தது. திரை மூடி, மீண்டும் திறக்கப்பட்டது. முன்போலவே ஐயர், தரைக்கு வந்திருந்தார். ஆனால், கண் விழிக்கவில்லை; சுவாஸ பந்தனமும் தளரவில்லை. ஐயரின் முகத்திலே சீடர்கள் பரபரவென்று தண்ணீரை அடித்து, மூர்ச்சை தெளிவித்தார்கள். கண்ணைத் திறந்த ஐயர், எதுமே நடவாதது போல, மௌனப் புன்னகையுடன், எழுந்து உட்கார்ந்தார். வித்தை முடிந்தது. எனக்குமட்டில் எல்லாம் ஒரே தந்திரங்களாகவே தோன்றின. ஏன் நாமும் செய்யலாகாது என்றும் எண்ணினேன்.

வீட்டுக்குச் சென்றோம். எனது வானரசைன்யத்தைக் கொண்டு, சீட்டுக்கட்டு, கோலிக் குண்டுகள், கொட்டாங்கச்சிகள், கோலாட்டக்கழி ஆகிய உபகரணங்களைத் தருவித்தேன். கோலாட்ட மாத்திரைக்கோலின் சகாயத்தோடு, கோலிக் குண்டுகளைக் கொட்டாங்கச்சிகளுக்குள் ஆச்சரியமாய்ஒன்றிலிருந் தொன்றுக்கு மாற்றிக் காட்டினேன்.

சீட்டுக்கட்டிலே கடிகார வித்தை முதலியவைகளைச் செய்து காட்டினேன். அந்தர்கள் என்னால் போடமுடியாது. உடல் வணங்கி வேலை செய்வது எப்போதுமே என் வழக்கமில்லை. அது காந்தி தர்மத்துக்கும் பொது உடைமைத் தத்துவத்துக்கும் விரோதமோ, என்னவோ, நான் அறியேன். ஆனால், என் தந்தை எனக்கு வகுத்த தர்மம் அதுதான். என் சிறு விரலை அசைக்கக்கூட அவர் சம்மதியார். ஆகையால், பிற பையன்களை, அந்தர் அடிக்கச் செய்தேன். அதன்பின், என் வித்தைகளைப் பெரியவர்களுக்கு முன்பு செய்து காட்டத் தொடங்கினேன். அவர்கள் ஓரளவு ஆச்சர்யப்பட்டார்கள். ஆனால், பரிகாசமும் செய்தார்கள்.

"பீதாம்பரையர் இப்படித் தான் செய்தாரோ? கோலிக் குண்டுகளைக் கைக்குள் ஒளிக்கிறாயே. அவர் மந்திர மல்லவா செய்தார்?"

"மந்திரமுமில்லை, மாயமுமில்லை. எல்லாம் வெறும் தந்திர தான்."

"தந்திரமா? எங்கே, உன்னை இந்தக் கம்பத்தில் கட்டுகிறேன்; அந்தக் கம்பத்தில் போய் நில் பார்ப்போம்."

"வித்தையாடியைக் கட்டியது போல், என்னையும் பின்புறமாகவே கயிற்றை விட்டுக் கட்டுங்கள். தளர்ந்த விலங்கையும் போடுங்கள். கையை இடுக்கால் இழுத்துக் கழற்றி, மற்றொரு கம்பத்திடம் போய்த் திரும்பவும் மாட்டிக் கொள்கிறேன்."

"கம்பத்துக்குக் கம்பம் போனதுதான் இப்படித் தந்திரம் என்கிறாய். அத்தனை ஜனங்களும் பார்த்துக் கொண்டிருக்க ஒருவருக்கும் தெரியாமல் திரைக்குள் இருந்தவன் மாயமாய் வெளியே வந்தானே; அதெப்படி?"

ஆம், அதுதான் எனக்கும் புரியவில்லை. மை வேலையாயிருக்குமோ; மந்திரமாய்த்தான் இருக்குமோ? உள்ளுக்குள்ளே பலவிதமாக யோசித்தேன். என்றாலும், "எல்லாம் தந்திரம்தான்" என்று ஒரே யடியாய்ச் சாதித்தேன்.

"அதென்னடாப்பா! எப்படி என்று சொல்லு."

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

"அதுவாவது போகட்டும். ஒரே ஒரு சிறு கழியின் முனையைத் தொட்டுக்கொண்டு, ஆகாசத்தில் அவர் படுத்திருந்தாரே; அதற்கென்ன சொல்லுகிறாய்?"

அதுவும் எனக்குப் புரியவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. நான் ஏதோ வேலையாக, பக்கத்து ஊர்க் கோயில் மானேஜரைப் பார்க்கச் சென்றேன். அந்த வீட்டுத் திண்ணையிலே, உட்கார்ந்திருந்தார் பீதாம்பரையர். அதே கம்பராமாயணத்தில், அதே சுந்தர காண்டத்தில், அதே 'அலங்கலில் தோன்றும் பொய்மை' அரவினைப் பற்றி, அதே பிரசங்கம்தான் ஆரம்பமாகியிருந்தது. என்ன பொருத்தம்! 'பொய்மை அரவு'தானே பீதாம்பர ஜால வேடிக்கை?

அங்கேயும் அதே மூன்றரைப் பாட்டுகளுக்குப் பிறகு, அதே 'இப்படியே போகிறது' என்ற அகண்டாபினய முத்திரையோடு, பிரசங்கத்தை முடித்தார் பீதாம்பரையர். பிரசங்கத்தில் நேற்றைக்கும் இன்றைக்கும் எள்

ளளவும் மாறுதல் இல்லை. எனக்கு அது புளித்துப்போன சரக்கு; ஆனால், கோயில் மானேஜரோ அங்காந்து, பெருவியப்புடன், அதைச் செவிமடுத்துப் பூரித்தார். 'ஆ ஹா! என்ன வித்பத்தி!' என்று அவரும் வாய்விட்டுப் புகழ்ந்தார். ஆனால், பீதாம்பரையருக்கு ஐந்தாவது பாட்டுத் தெரியுமா? அதை யார் கேட்பது? நான் சிறுவன்; கேட்பேனானால் அதிகப் பிரசங்கித்தனமாகும். கேட்கவில்லை; முடிவு மாத்திரம் செய்து கொண்டேன்: ஐந்தாவது பாட்டு அவருக்குத் தெரியவே தெரியாது!

அன்று மாலை அந்த ஊரிலேயும் வித்தை நடந்தது. எனது வானர சைன்யத்துடன் நானும் சென்றேன். முதல் நாள் நடந்த சிறிய வித்தைகள் எல்லாம் அன்றும் நடந்தன. அவைகளில் நாங்கள் அதிக கவனம் செலுத்தவில்லை. திரை கட்டும் கட்டம் வந்தது. வெகு ஜாக்கிரதையாக, என் படையைப் பல கூறுகளாகப் பிரித்து, திரைக்கு நான்கு திசைகளிலும் காவல் போட்டேன். கட்டுக்கட்டிய வித்தையாடி கம்பத்துக்குக் கம்பம் மாறினான். என்றாலும், யாருமறியாமல் வெளியே வரவேண்டுமே? அதற்காக, நேற்றுப் பூர்த்தியாகாத 'சிறுத்தொண்டர்' நாடகம் இன்றும் ஆரம்பமாயிற்று. "நர பலியா வேண்டும்? இதோ குத்துகிறேன், பார்; வெட்டுகிறேன், பார்" என்று ஆர்ப்பரித்தார் ஐயர். நேற்று வேடிக்கை பாராத ஜனங்களெல்லாம், 'அண்ணனுக்காக உயிரை விட வந்த' சிறுவனை, வெகு கவலையோடு, வைத்த கண் எடாமல்தான் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், என் காவல் படைகள் மட்டும், வைத்த கண் வைத்தபடி திரையையே கவனித்தன. அவர்களின் கவனத்தைத் தம்மிடம் இழுக்க, ஐயர் எவ்வளவோ பாடுபட்டார். பலிக்கவில்லை. கட்டுக் கட்டிய வித்தையாடி, வேறு வழியில்லாமல், என் படைகளின் முன்னிலையிலே தலைகுனிந்து, ஜனங்கள் கைகொட்டி நகைக்க, பகிரங்கமாய் ஓடிவந்தான். ரகஸ்யத்தை நாங்கள் கண்டு பிடித்துவிட்டோம். அன்றிரவு வீட்டுக்குச் சென்று பெரியவர்களிடம் இதைத் தெரிவித்தோம்.

"இருக்கட்டும். அந்த வாயு ஸ்தம்பத்துக்கு என்ன சொல்லுகிறீர்கள்?"

வாயு ஸ்தம்பமாவது, ஜல ஸ்தம்பமாவது! எல்லாம் ஒரே மாதிரி தந்திரம்தான் என்று எனக்குத் தோன்றியது. ஆனால், இன்றுவரையில் எனக்கு அது எப்படி என்றுமட்டில் புரியவில்லை. வாயு ஸ்தம்பம் எவ்வாறு செய்தார்? மற்ற வித்தைகளின் மர்மம் தெரிந்து விட்டதால், அவை எனக்கு மறந்துகூடப் போய்விட்டன. ஆனால், அற்புதமான அந்த வாயு ஸ்தம்பக் காட்சி இன்றும் என் கண்ணெதிரே நிற்கிறது. 'வாழ்வோர் வாழ்வென்றுரைக்கும் இந்த வர்ணத் திரையைத் தூக்காதே' என்று பாடினார் ஓர் ஆங்கிலப் புலவர். அந்த வர்ணத் திரையைத் தூக்க முயன்றால், உண்மையை நாம் கண்டு விடலாம்; கண்டு விடுகிறோம். ஆனால், கண்டடையும் பயன் என்ன? வெறும் ஏமாற்றம்தான்; சில சமயம் பயங்கரமும்கூட வரும். சத்தியம் ஏமாற்றத்திலும் பயங்கரத்திலுமா இருக்கிறது? அழகிலும் இன்பத்திலு மில்லையா?

★

நான் கண்ட தமிழ்நாடு

வ. ரா.

எனக்கு வயது எட்டு இருக்கும்.

உத்தமதானபுரம் திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து எனக்கு 'பிரமோஷன்'. எங்கள் ஊர்ப் பக்கத்திலேயே இருந்த 'பெஞ்சு' பள்ளிக்கூடத்துக்கு என்னைக் கொண்டுபோய், என் பாட்டனார் சேர்த்தார். திண்ணைப் பள்ளியில், மண்தான் ஆசனம்; அங்கே இங்கிலீஷ் சொல்லிக் கொடுப்பதில்லை. 'பெஞ்சு' பள்ளியில், ஆசனம் பெஞ்சு என்று சொல்லவும் வேண்டுமா? இங்கே இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்தார்கள்.

எங்கள் ஊரிலிருந்து இந்தப் பள்ளிக்கு இரண்டு மைல் தூரம் இருக்கும். சில சமயங்களில் கால் நடைதான்; பெரும்பாலும் வண்டியிலே போவேன். எங்களூரிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் காருகுடி என்று ஒரு கிராமம். அங்கே நான் காணும் காட்சியை, என்ன சொன்னாலும் போதாது.

சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன், கப்பி ரோட்டுகள் ரொம்பவும் குறைவு; மண்பாதைதான். தஞ்சாவூர் ஜில்லாவில், வடபாகத்தில், மண்ணில் மணல் குறைவாயும் 'களிவாய்' அதிகமாகவும் இருக்கும். எனவே, வயல்களில் மாடுகள் உழும் பொழுது, கால்கள் களிவாய் உளையில் மாட்டிக்கொண்டு, ரொம்பவும் கஷ்டப்படும். உழவு, ஒருசால் ஓட்டுமுன், உழுபவர்கள் மிகுதியும் தொந்திரவு பட்டுப் போய்விடுவார்கள்.

நஞ்சைக் கழனிகளில் மட்டும் களி என்று எண்ணிவிட வேண்டாம். ரஸ்தாக்களிலும் களிமண்தான். எனவே, ஆவணி மாதக் கடைசியிலிருந்து கார்த்திகை மாதம் முடியும் வரையில். இந்த ரோட்டுகள் இருக்கும் பரிதாப நிலையைக் கண்டால், வண்டி சவாரி வேண்டவே வேண்டாம் என்று தோன்றும். ஆனால், இந்த மாதங்களிலேதான், கனத்த நெல் வியாபாரம்.

எங்கள் ஊரிலிருந்து தஞ்சாவூர் ஒன்பது மைல். தஞ்சாவூர் நெல் மண்டிகளுக்குத்தான், அறுவடையாகி விற்பனையான நெல் எல்லாம் போய்ச் சேரவேண்டும். தினந்தோறும், சுமார் முந்நூறு வண்டிகளுக்குக் குறையாமல் எங்கள் ரஸ்தாவின் வழியாகப் போகும். ஆனால், மழையோ விடா மழை! பாதையோ களிமண் பாதை! மாடுகள் என்ன செய்யும்? சக்கரங்கள் களி உளையில் குடம் வரையில் பதிந்து அகப்பட்டுக் கொண்டுவிடும்.

தமிழர் எல்லாரும்தான் தமிழ் நாட்டைப் பிறந்தது முதல் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், வ. ரா. பார்க்கும் விதமே வேறு. சின்ன விஷயம் என்று நம் கண்ணை விட்டு ஒதுங்கும் விஷயமெல்லாம் எவ்வளவு பெரியவை என்று, அவர் சொல்லும் போதுதான் நமக்கு விளங்குகிறது. நம் அடிமைத்தனம் தீர, நாம் லண்டனுக்கா போகவேண்டும்? நம் உள்ளூரிலே செய்ய வேண்டிய வேலைகள் எத்தனையோ இல்லையா? வ. ரா. வின் கிராமத்து ரஸ்தாவைப் பற்றிய 'கதை', எல்லா ஊர்க் கதையுமே அல்லவா?

எங்கள் ஊரிலிருந்து சாதாரண மாக மூன்று மணி நேரத்தில் தஞ் சைக்குச் செல்லும் வண்டிகள், எட்டு மணி நேரத்தில்கூட, போய்ச் சேரமாட்டா. காருகுடி என்று ஒரு கிராமத்தைக் குறிப் பிட்டேனே, அங்கே பெரிய உளை. அந்த உளையில், ஒவ்வொரு வண்டியாக, பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பது அசுர வேலையாகும். சக்கரங் களின் ஒரு கால் மேட்டிலிருக் கும்; இன்னொரு கால் உளையில் மாட்டிக் கொண்டு கிடக்கும். மாட்டை அதட்டி ஓட்டினுல், வண்டி குடைக் கவிழ்ந்து போனு லும் போகும்.

இந்த அவஸ்தையைப் பார்த்து, நான் ரொம்பவும் வருத்தப்படு வேன். மழை காலத்திலே, நெல் வண்டிகள், கண்டிப்பாய், தின சரி, மூந்நூறுக்குக் குறையாமல் போகும்பொழுது, இந்த வண் டிக்காரர்கள் எல்லாரும் சேர்ந்து, அந்தக் காலத்துக்கு என்ருவது பாதையைச் செப்பனிட்டு வைக் கக்கூடாதா? இவர்கள் பிரமாத மாகச் செப்பனிட வேண்டியது ஒன்றுமே இல்லை. களிமண் அதிகமா யிருக்கும் உளைகளில் மணலைக் கொண்டுவந்து கொட்ட ஏற்பாடு செய்தால் போதும். மணலுக்கும் ரொம்ப தூரம் போகத் தேவையில்லை. பக்கத் திலே, காவிரி ஆற்றில், ஏராள மாக மணல் கிடைக்கும் - நூறு கஜ தூரத்துக்குள்.

பாதையை, கண்மூடிக் கண் திறப் பதற்குள் செப்பனிடக்கூடிய வசதிகள் இருக்க, வண்டிக்காரர் களுக்கும் மற்றவர்களுக்கும், ஏன் இந்த யோசனை தோன்ற வில்லை என்று நான் திகைத்துப் போவேன். வருஷா வருஷம், இந்தத் திருக்கூத்தைப் பார்த்து, என் மனம் உடைந்துபோகும். கடைசியாக, விநோதத்தைக் கேளுங்கள். கள் 'கண்டிராட்டு' நாடார் ஒருவர், மணல் கொண்டு வந்து கொட்டி, பாதையை ஒழுங்குபடுத்த ஏற்பாடு செய் தார். கலால் வருமானத்தால் தான் கல்வி நடைபெறுகிறது என்று சர்க்கார் சொன்னுல், அதில் நம்மவர்களுக்கு ஏன் கோபம் வரவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. . . .

மூலாதாரப் பொருளான நெல்லை வாங்கி விற்கிற முதலாளி களுக்கும் அவர்களைச் சேர்ந்த வர்களுக்கும் பாதையைச் செப்ப னிட அக்கரை ஏற்படவில்லை. கள் 'கண்டிராட்டு' எடுத்தவருக்கு அக்கரை ஏற்பட்டது. இதை எந்த தெய்வத்தினிடம் போய்ச் சொல்லி முறையிட்டுக் கொள்ளு கிறது என்றுதான் தெரியவில்லை. கள்ளைப்பரப்ப அக்கரை! நெல்லைப் பரப்ப அசிரத்தை! 'ஐயகோ!' என்று புலவர்கள் ஏன் வருந்த மாட்டார்கள்?

உளையில் அகப்பட்டுக் கொள் ளும் வண்டிகளை, பத்துப்பேர்கள் சேர்ந்தால், அப்படியே தூக்கி வைத்துவிடலாம். அப்படிச் செய்ய மாட்டார்கள். மாடு களுக்கு விழும் அடிகளை எண்ணி முடியாது. மாடுகளின் 'தாய் தகப்பன்' பரம்பரையைப்பற்றி விநோதமான வசை மொழிகள் தோன்றும். ஆளுக்கு ஒரு விசித் திரமான வசை மொழி.

எங்கள் 'பெஞ்சு' பள்ளியில், குமாரசாமி பிள்ளை என்று அருமையான வாத்தியார் இருந் தார். அவர் மகா வைத்தியநாத ஐயரின் அண்ணன் ராமசாமி சிவனிடம் தமிழ்ப்பாடம் கேட்ட வர். பிள்ளை அவர்களின் குணங் களையும் உடல் சுத்தத்தையும்

வர்ணிப்பதென்ருல், நாட்களும் சொற்களும் போதமாட்டா. ஒருநாள், சேறுபடிந்த என் உடையைப் பார்த்துவிட்டு, 'ஏ! ராமா! வருகிற வழியிலே, உங்க ளூர் நெல்வண்டிச் சக்கரத்திலே தோளைக் கொடுத்து, தள்ளி ஞயோ' என்று பாதி கேலி யாகக் கேட்டார்.

கேவலமான பாதை என்று உலகம் அறிந்த சங்கதியாகப் போனுலும், பாதையை, என் பொறுப்பாளிகள் செப்பனிட வில்லை என்பதை நினைக்க, எனக்கு வருத்தம் உண்டாகும். 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்பது தற்போதைய கூச்சல் தானே! இந்தக் கூச்சல்கூட இல்லாதது அந்தக் காலம்!

மூன்று மாத காலம், பாதை நரகம்தான். ஆனல், சித்திரை மாதத்தில், குறிப்பிட்ட ஒரு நாளில் அதாவது சப்தஸ்தானம் (ஏழு ஊர்) என்ற திருவிழா நாளில், பாதைகளைப் பார்க்க வேண்டுமே! எங்கும் அலங்காரம்! திரள் திரள்களாகக் கூட்டங்கள்! பஜனை செட்டுகள் மட்டும் குறைந்தது ஆயிரம் இருக்கும்.

'தேவ தேவ தேவ மகா'

என்று, விடாமல் புலம்பும் பஜனையிலிருந்து, உயர்ந்த நாதக்கட்டுடன் சங்கீதக் கச்சேரியைப் போல நடக்கும் பஜனை வரையிலும் இந்தத் திருவிழாவில் காணலாம். சிராத்ததினத் தன்றைக்குக் கூட. அதிகப்படியாக அரிசிப் பங்கீடு செய்யமுடியாது என்று சர்க்கார் அதிகாரி சொல்லும் காலம் இது! ஆனல், நாற்பது ஆண்டுகளுக்குமுன், 'ஏழு ஊர்'த் திருவிழாவில், சுமார் மூன்று லட்சம் பேர்கள் கலந்து கொள்ளுவார்கள்.

தெற்கே திருநெல்வேலியிலிருந்தும் வடக்கே சென்னையிலிருந்தும் இந்த விழாவுக்கு ஆயிரக் கணக்கானவர்கள் வருவார்கள். அந்த நாட்களில், ஹோட்டல்கள் அதிகமாகக் கிடையாது. ஆனல், விழாவுக்கு வந்த ஒருத்தராவது பட்டினி கிடந்ததில்லை. அப்படிச் சொன்னுல் மட்டும் போதாது. போடுகிற ஆகாரத்தை, கொடுக்கிற பழவகைகளை, சாப்பிட வயிறு காணவில்லையே என்று சொல்லும்படியாக, ஆகார விநியோகங்கள் நடைபெறும்.

ஒருமனப்பட்டு ஒரு காரியத்தைச் செய்தால், அது எவ்வளவு அழகாகவும் திறமையுடனும் நடைபெறும் என்பது சப்தஸ்தானத் திருவிழாவில் எனக்கு நன்ருகத் தெரிந்தது. திருவிழாக்கள், பொழுது போக்குக்காக வேண்டியதுதான். மகத்தான வேலையைச் செய்தவன், அலுப்படையா திருக்க, பொழுது போக்கை விரும்பினல், அதற்கு அர்த்தம் உண்டு. ஆனல், வம்பர்களும் சோம்பேறிகளும் பொழுது போக்கைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமே இல்லை. இந்த நாட்டுக்கு, திருவிழாக்களும் இதைப்போலவே என்பது என் கருத்து.

என்ன செயற்கரிய காரியம் செய்து முடித்துவிட்டதற்காக, திருவிழா வேண்டும்? அல்டூஸ் ஹக்ஸ்லி என்ற இங்கிலீஷ் ஆசிரியர், வேடிக்கையாக ஒன்றைக் குறிப்பிடுகிருர். அதைக் கேளுங்கள்:

அவர் காசியில் இருந்தாராம். அன்றைக்கு, சூரிய கிரகணமாம். கங்கையில் ஸ்நானம் செய்து தர்ப்பணம் செய்து, சூரியனை ராகுவின் பிடிப்பிலிருந்து விடுதலை

செய்வதற்காக, லக்ஷக் கணக் கானவர்கள், பக்கத்தில் பதின் காத தூரத்திலிருந்து, அரிசி, விறகு முதலிய சாமான்களோடு காசிக்கு வந்தார்களாம்!

இதைப் பார்த்த ஹக்ஸ்லி, "என்ன விநோதமான மக்கள்! தாங்கள் இங்கிலீஷ்காரர்களுக்கு அடிமைகளாக இருப்பது தெரிய வில்லையே! சூரியனை விடுவிக்க லக்ஷக்கணக்கில் குவியும் மக்க ளில் பாதிப்பேர்கள் சேர்ந்து நல்லமுறையில் உழைத்தால், ஹிந்துஸ்தானம் எக்காலத் துக்கோ முன்னமே விடுதலை அடைந்திருக்குமே!" என்று நகைக்கிறார்.

"நம் நாட்டு உயர்ந்த காரியங் களைக்கூட இப்படித்தான் அந் நியர்கள் கேலி செய்வார்கள்" என்று நம்மில் பெரும்பாலோர் இன்னமும் மனப்பால் குடித் துக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு.

'இக்கரை கடந்திடின் அக்கரையே
இருப்பது சிதம்பரச் சர்க்கரையே'

என்று பஜனை செய்துகொண்டே போனால், சர்க்கரை கிடைக் குமா? அரிசி, விறகு கிடைக் குமா? சித்திரக் குள்ளன் ஜப் பானியன் நம்மை விட்டுவிட்டுப் போய்விடுவானா? நம்மை அடக்கி யாளும் அமெரி பெரியார் போன்றவர்கள், தங்கள் காரியம் பலிப்பதற்காக, 'என்ன அருமை யான பஜனை!' என்று தட்டிக் கொடுப்பதுபோல, ஏமாற்று வேலை செய்வார்கள்.

இது நம்மவர்களுக்குத் தெரிய வேண்டாமா?

★

சவுக்கும் உதையும்

பிரம்மசமாஜ ஸ்தாபகரான கேசவசந்திர ஸென், நம்மை விட்டுப் பிரிந்த நம்முடைய பழைய சீடர்களிடமிருந்தே, வசை மொழிகளை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டி யிருந்தது. அப்படி வசை மொழி அர்ச்சனை செய்தவர்களில் ஒருவர் பண்டித சிவநாத சாஸ்திரி என்பவர். ஆனால், இந்த யாரிடமும் கேசவசந்திர ஸென்னுக்கு மனத்திலே குரோதம் கிடையாது.

ஒரு சமயம் தற்செயலாய்க் கேசவசந்திரரும் சிவநாதரும் ரயிலில் ஒரே கம்பார்ட்மெண்டில் பிரயாணம் செய்ய நேர்ந்தது.

சிவநாத சாஸ்திரியிடம் சாப்பிட ஏதுமில்லாததைக் கண்ட கேசவ சந்திரர், தம்மிடம் இருந்த உணவைச் சாஸ்திரிக்குக் கொடுத்தார். எவ்வித மனஸ்தாபமும் இல்லாதவர் போலவே, அவருடன் சம்பாஷணையும் புரிந்தார். ஆனால், தாம் மட்டில் கொஞ்சம் இஞ்சியுடன் ஜலந் தெளித்துப் பிசிறிய கொள்ளைத் தின்றுகொண்டிருந்தார். வேறு எதுவும் சாப்பிட மறுத்துவிட்டார்.

இதைக் கண்ட சாஸ்திரியார், "ஏன் வேறொன்றும் சாப்பிட மாட்டே னென்கிறீர்கள்?" என்று கேட்டார்.

கேசவ சந்திரர் சிரித்துக்கொண்டே வேடிக்கையாய், "உங்கள் சவுக்கடிகளையெல்லாம் வாங்கிக்கொண்டே, பிரம்ம சமாஜ வண்டியை நான் இழுத்துச் செல்லவேண்டியிருக்கிறது. அதனால்தான், குதிரையைப் போல் கொள்ளைத் தின்கிறேன்" என்றார்.

சாஸ்திரியாரும் சளைக்கவில்லை. "எங்களை ஒவ்வொரு சமயம் நீங் கள் உதைக்கும் உதை பொறுக்காமல்தான், நாங்களும் சவுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது" என்று சொல்லி நகைத்தார்.

ரசத்திலே தேர்ச்சி கொள்

பாரதிதாசன்

அருவியின் வீழ்ச்சி போல நெஞ்சிலிருந்து கவிதை சலசலவென்று பெருகி உருவாக வேண்டும். கவிதையை உருவாக்க வேண்டுமே என்பதற்காக நலிந்து சொற்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கமாட்டார் பாரதியார்.

எழுதிக்கொண்டே போவார் பாரதியார். "கவிதை நின்றுவிட்டது" என்று கூறி, அந்த ஏட்டை அப்படியே எடுத்து வைத்துவிடுவார்; மறு நாளோ மறுமாதமோ கூட, அந்தக் கவிதையின் மற்றப் பகுதியானது விட்ட இடத்திலிருந்து சுரப்பதுண்டு.

புதிய ஆத்திசூடி எழுதத் துவக்கினார். அது "யௌவனம் காத்தல் செய்" என்பது வரைக்கும் ஓடியது. பிறகு நின்றது. அதை அப்படியே எடுத்து வைத்துவிட்டார்.

மறு நாள்.

நானும் பாரதியாரும் அதிகாலையில் எழுந்துவிட்டோம். பாரதியார் உள்ளத்தைக் காலை மகிழ்ச்சி தோளைக் குலுக்கிற்று. அவர் சொன்னார்: "சுப்புரத்தினம்! மனிதர் வீடு பிடிக்கவில்லை. இயற்கையின் வீட்டில் உலாவ வேண்டும். எங்கே போகலாம்?" என்று.

நான், "வாழைக்குளம் தாண்டி அடர்ந்த தென்னந் தோப்பும் நீர் ஊற்றும் உண்டு; நிலமும் தூய்மையாய் இருக்கும்" என்றேன். புறப்பட்டோம்.

தெரு முனையை அடைந்தவுடன், பினாகபாணி குழந்தையின் சாவு எதிரில் வந்தது. இறந்த குழந்தையுடன் போகிற பினாகபாணி, எங்களை எதிரிற் கண்டு கும்பிடும் போட்டுவிட்டார். மெதுவான குரலில் பாரதியார் என்னிடம் "என்ன" என்றார். இந்த "என்ன" என்பதன் விரிவுரை என்னவென்றால், 'திடீரென்று இப்படிப்பட்ட தொல்லையில் அகப்பட்டுக் கொண்டோமே, போய்த்தான் தீர வேண்டுமா?' என்பதாம்.

கவிதை உலகு இப்போது ஒத்து வராது; வழக்க உலகில் இறங்கித்தான் ஆகவேண்டும். அதனால், நான் பாரதியாரை நோக்கி, "ஆம்; போய்த்தான் ஆகவேண்டும் இடுகாடுமட்டும்" என்றேன்.

பாரதியார் பிண வீட்டுக்குப் போக விரும்பமாட்டார். இரக்கமில்லாதது காரணமல்ல. அடிமை நாட்டாரின் குழி விழுந்த கண்களில், துன்பத் துளிகளையும் காண அவரால் பொறுக்க முடியாது.

மண வீட்டுக்குப் பாரதியார் இரண்டுதடவை கூடப் போவார். சாப்பிடுவதற் கல்ல. அரிதாக மகிழ்ச்சி யடைந்த மக்களோடு

நாடெங்கும் முன்னையெல்லாம்விடச் சிறப்பாக, பாரதிவிழாக் கொண்டாடப்பட்டது. பாரதியின் கவிதைக்கு, வரவர மதிப்பு ஓங்கிவருகிறது. இதன் ரகஸ்யமென்ன? அவர் கவிதை, உள்ளத்திலிருந்து பிறக்கும் பிறப்பு. அதற்கோர் உதாரணம் தருகிறார், பாரதியை நேரிலறிந்து, பாரதி வழிபற்றி இந்நாள் இனிய கவிகளைப் பாடி வரும் பாரதிதாசன்.

அளவளாவப் பாரதியாருக்கு விருப்பம் அதிகம்.

கூட்டத்தோடு நானும் பாரதியாரும் நடந்து கொண்டிருந்தோம்.

மெதுவான குரலில் பாரதியார் என்னிடம், "மிக்க தொலைவோ?" என்று கேட்டார். நான், "வாழைக்குளம்; தென்னந்தோப்பு; நீரூற்று; அருகில்தான் பாப்பம்மா கோயில்" என்றேன். பாரதியார் கொஞ்சம் அமைதி அடைந்தார்.

குழந்தை புதைக்கப்படுகிறது. அருகில் சிலர் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வேறு பலர் இருவர் மூவராக நிழல் கண்ட இடத்தில் நின்று பேசுகிறார்கள்.

பாரதியாரை, நாராயணசாமி முதலி, தனியாக அழைத்துச் சென்று, அங்கிருக்கும் பாப்பம்மா கோயிலின் பழய வரலாற்றைப் புளுகிக்கொண்டிருந்தான். எனக்கு அவன் சங்கதி பிடிக்காது. நான் உட்கார இடம் தேடிக் கொண்டிருந்தேன்.

சிதைந்த மல்லிகைச் செடி; அதில் ஒரே ஒரு மிலாரில்தான் உயிர் இருந்தது. அந்த உயிருள்ள மிலாரும் தரையைத் தழுவியிருந்தது. இலைகள் ஒளிப்பச்சை; இடைக்கிடை நேற்று மலர்ந்த பூக்கள், மலரவேண்டிய காய் அரும்புகள்!

மல்லிகைச் செடியின் அண்டையில், மேல் துண்டை விரித்துப் போட்டுப் படுத்துக் கொண்டேன்.

காலை எட்டரை மணி! இளவெயிலின் மெல்லிய தங்கக் கதிர்கள், சிறு காற்றில் ஆடும் பச்சிலை மேல் மின்னிக் கொண்டிருந்தன. சிற்றரும்பும் பூவும் சிரித்துக் கொண்டிருந்தன, இடுகாட்டில்.

பசியும் இளவெயிலின் குத்தலும் எனக்குத் தெரியவில்லை.

பாரதியார் வந்தார். குடிக்கத் தண்ணீருக்கு என்ன செய்வது என்றார். இளநீர் தேடிச் சென்றேன். ஒரு காய்தான் அகப்பட்டது. சீவிப் பொத்தலிட்டபடி எடுத்துவந்தேன். "நீ சாப்பிட்டாயா?" என்று கேட்டார். "காய் அகப்படுவது அரிதாயிருக்கிறது. எனக்குத் தாகமில்லை" என்றேன். ஆவலாய்க் குடித்து வெறுங்காயைக் கீழே போட்டார்.

பாரதியார் கூறுகிறார்: "சுப்புரத்னம்! உனக்கு இளநீர்க் காயில்லை. அதுமட்டுமல்லாமல் உன் மல்லிகைச் செடியிலிருந்த பூக்களையும், அரும்புகளையும், பறித்துக்கொண்டு போய்விட்டான் அதோ அந்தக் கல்லின்மேல் போட!"

உயிர் ததும்பும் அழகைவிடப் பாப்பம்மா கோயில் சாமி சிறந்ததில்லை என்பது பாரதியார் எண்ணம்! அவரது இந்தக் கருத்தை, நான் புரிந்துகொள்ள முடியவில்லை.

நான் கேட்டேன் "அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று.

"நீ மல்லிகையின் மணத்தையும் அழகையும் சுவைத்திருந்தாய். நான் பார்த்தேன். அப்போது என் நெஞ்சு பெற்ற இன்பத்தின் அளவை நீ கணக்கெடுக்கவில்லை; எடை தெரியவில்லை உனக்கு. ரசத்திலே தேர்ச்சி கொள்!" என்றார். "யௌவனம் காத்தல் செய்" என்று நிறுத்திய புதிய ஆத்திசூடியின் அடுத்த

வாக்கியமாகவும், எனக்கொரு பாடமாகவும் இதைக் கூறினர். நான் "போகலாம்!" என்றேன்.

'ரசத்திலே தேர்ச்சிகொள்' என்று அவர் கூறியவுடன், "சுப்புரத்னம்! நமது ஆத்திசூடி விட்ட இடத்திலிருந்து தொடங்குகிறது" என்று கூறி, "ராஜசம் பயில். போகலாமா?" என்றும் கூறினர். நான் "போகலாம்!" என்றேன்.

பாரதியார் "நீதி தவறேல். ருசி பல வென்றுணர்" என்று கூறிக்கொண்டே, ஊரில் நுழைவதற்குள் "வெளவுதல் நீக்கு" எனப் புதிய ஆத்திசூடியை முடித்துத் தீர்த்தார்.

★

முடியாத காரியம்

சில சமயம் சென்னையிலிருந்து சில வாலிபர்கள் என்னிடம் வந்து, நாஸ்திகத்தைப்பற்றிப் பேசுகிருர்கள். நாஸ்திகனுக ஒரு ஹிந்து மாற முடியும் என்று என்னல் நம்பமுடியவில்லை. அவன் ஐரோப்பியப் புத்தகங்களைப் படிக்கலாம்; தன்னை ஓர் உலகாயதவாதி என்று எண்ணி மனப்பால் குடிக்கலாம். ஆனல், இதைக் கவனியுங்கள்: அதெல்லாம் ஐந்தே மாதம்தான் நிலைக்கும். நாஸ்திகம், உங்கள் ரத்தத்திலே இல்லை; நாஸ்திகனய் மாறுவது உங்களால் சாத்தியமில்லாத காரியம். அதைச் செய்ய முயற்சிக்காதீர்கள். சிறு பையனயிருந்தபோது, ஒரு சமயம் நான் அதைச் செய்ய முயன்றேன். முடியவில்லை. வாழ்வு, குறுகலானது; ஆத்மா அழிவற்றது, நிலையானது; சாவு நிச்சயம். ஆகையால், ஒரு பேரிலட்சியத்தை மேற்கொண்டு, உங்கள் முழு வாழ்வையும் அதற்கே செலவழியுங்கள்.

—சுவாமி விவேகானந்தர்.

வீரத் துறவி

பளிச்சென்ற உருவம்; மஞ்சளும் காவிவர்ணமும் கலந்த உடை; மேகம் சூழ்ந்ததுபோலிருந்த சிக்காகோவில், ஒளிவிடும் இந்திய சூரியனைப்போல் அவர் வந்து நின்றர்; சிங்கம்போன்ற தலை; கூரிய கண்கள்; பரபரப்பான உதடுகள்; சுறுசுறுப்பான நடை—இவைதான் சுவாமி விவேகானந்தரை முதன் முதலாக நான் பார்த்தவுடன், என் மனதில் பதிந்தன. சர்வமத மகாநாட்டின் பிரதிநிதிகளுக்கு என்று ஒதுக்கிவைக்கப்பட்ட ஓர் அறையில், அவரை நான் சந்தித்தேன். அவரை ஒரு துறவி என்று அவர்கள் அழைத்தார்கள். நியாயமே. ஆனல், அவர் ஒரு வீரத் துறவி. முதலிலே பார்த்தவுடன், ஒரு போர்வீரனுகவே அவர் நமக்குத் தோன்றுகிருர். இத்தகைய உத்தம புத்திரனைப் பெற்றெடுத்துத் தன் தூதனய் அனுப்பிய இந்தியா, கர்வம் பிடித்தலையும் மேனட்டுக்கு முன்னே வெட்கப்படத் தேவையில்லை.

—அன்னி பெஸண்ட்

ஜட்ஜியின் யுக்தி

அறைக்குள் ஜூரர்கள் புகுந்துவிட்டால், வெகு நேரம் ஆகிவிடுவதைச் சகிக்காமல், ஒக்லஹாமாவில் உள்ள ஒரு ஜட்ஜி, நூதனமான ஏற்பாடு ஒன்றைச் செய்தார். அதாவது, ஜூரர்களின் அறையில், செளகர்யக் குறைவான நாற்காலிகளைப் போடச் சொன்னர். ஜூரர்கள் முன்னைவிட ஒருமணி நேரம் சீக்கிரமாக வெளிவந்தார்கள். பிறகு, நாற்காலிகளையே அகற்றிவிடச் செய்தார். அப்போது இன்னும் சீக்கிரமாக ஜூரர்கள் வெளிப்பட்டார்கள். அப்புறம், ஜட்ஜி, ஜூரர்களின் அறையிலுள்ள ஜன்னல் கதவுகளையெல்லாம் மூடி ஆணிபோட்டு அறைந்துவிடச் சொன்னர். ஜூரர்கள் மனேவேகம் வாயுவேகமாய் வெளிவந்து முடிவுசொல்லத் தொடங்கிவிட்டார்கள். செளகர்யம் குறையக் குறைய, வேலையும் துரிதப்பட்டு விட்டது!

வாழும் வழி

தேசிக விநாயகம் பிள்ளை

சித்தார்த்தன் சுஜாதை அளித்த அமுதை உண்டு தெளிந்தவுடன் அவளை நோக்கி,

‘மாதே, நீவெறும் வாழ்க்கை யினுலிவ்
வுலகி னின்பம் உண்மையாக
அடைகின் றனேயோ? அறியச் சொல்வாய்.
பெற்ற வாழ்க்கையும் பேணிய அன்பும்,
புவியி லுனக்குப் போதுமோ, அம்மா?’

என்று வினவினன். அதற்கு அவள் பின்வருமாறு மறுமொழி கூறுகின்றள்:

‘எவர்க்கும் எவர்க்கும் இவ்வுல கதனில்
என்று மென்றும் எங்கணு மெங்கணும்
நன்மை விதைத்தால் நன்மையே விளையும்,
தீமை விதைத்தால் தீமையே விளையும்.
கரும்பில் வேம்பு காய்ப்பது முண்டோ?
வேம்பில் கரும்பு விளைவது முண்டோ?
வெறுப்பா லாவது வீண்பகை யேயாம்;
அன்பா லனைவரும் நண்பரே யாவர்.
அருளா லுலகம் அனைத்தையு மாளலாம்
பொறுமையா லிந்தப் புவிமீ தென்றும்
அழியா வமைதி அடைவது மெளிதாம்.
இறந்த பின்னரும் இதுபோ லின்னெரு
நற்கா லந்தான் நண்ணுத லரிதோ?
இதனினும் சிறந்த இனிய காலம்
அணுகு மென்பதில் ஐயமே யில்லை.
நிலத்தில் விழுந்த நெல்விதை யொன்று

வாய்த்து வளர்ந்து மணிநெல் லேம்பது
தாங்கும் கதிரைத் தருவது மில்லையோ?
தேம்பொழி சோலைச் செண்பகத் தருவில்
மலரின் அழகும் மணமும் நிறமும்
முகிழ்க்கும் சிறிய முகையுள் ளடங்கி
வசந்தம் வரவெளி வருவது மில்லையோ?
ஆயினும்,
தாங்கொணுத் துயரும் தரணியில் உண்டென,
ஐயனே, யானும் அறிவேன்; அறிவேன்.
என்கண் காண இச்சிறு மதலை
மடிந்து வீழின் வாழ்வனே, ஐயா?
கணவன் காலம் கழியுமக் கடைநாள்
நித்தம் நித்தம் நிகழ்வது போலென்,
மடிமீ தவர்தம் முடியினை யேந்தி
ஈமக் கட்டையில் யானு மிருப்பேன்.
வானுற ஓங்கி வளருந் தீயில்
மூச்சு முட்ட மூடும் புகையில்
மயக்கம் கொள்ளேன், மகிழ்ச்சி அடைவேன்.
கணவன் உயிர்போங் காலையி லவரைப்
பற்றித் தொடரும் பத்தினிப் பெண்டிர்
கோதி வளர்த்த கூந்தலின் மயிர்கள்
எத்தனை யுண்டோ அத்தனை கோடி
ஆண்டுகள் அவரும் அழியாச் சொர்க்கம்
வாழ்குவ ரென்று மறைகள் கூறிடும்;
ஆதலின், சிறிதும் அஞ்சிடேனையா.
அஞ்சிடே னுயினும், அருட்பெருங் கடலே,
உண்ண உணவும் உடுக்கத் துணியும்
இல்லையாகி இரந்திடு வோரும்,
நோயில் விழுந்து நொந்து நொந்து
பாயில் கிடந்து பரிதவிப் போரும்,
தீய நெறியில் திரிந்து பொல்லாப்
பாதக ராகிப் பழிசெய் வோரும்,
உலகில் உண்டெனும் உண்மை மறவேன்.
என்வாழ் வென்றும் இனிய வாழ்வாம்;
நன்மையை நிதமும் நாடி நிற்பேன்.
இயன்றதை எண்ணி இனிது முடிப்பேன்.
வேண்டிய யாவும் விதிமுறை செய்வேன்.
வரும்விதி வரினும், வருவது முற்றும்
நன்மையே வருமென நம்பி வாழ்வேன்'
என்று மறுமொழி இயம்பினள்
சுஜாதை என்னும் சுகுண சுந்தரியே.

★

அவளுடைய குரலிசையில் ஓர் மாயசக்தி !
அவளுடைய அசைவில் ஓர் இன்னிசை !
கோடிக்கணக்கான மக்களின்
உள்ளங்களை கொள்ளை
கொண்டதுடன் அவைகளில்
ஓர் நிரந்தர ஸ்தானத்தையும்
பெற்றிருக்கிறாள்...............
அவள் !

சக்தியின் புதிய புத்தகங்கள்

காந்தியடிகளின் எழுபத்தைந்தாவது பிறந்த நாளாகிய அக்டோபர் இரண்டாம் தேதி வெளிவருகிறது.

காந்தியும் விவேகானந்தரும்	1 8 0
காந்தியும் ஜவஹரும்	0 8 0

இவ்விரண்டும் வெ. சாமிநாத சர்மா எழுதிய பரிசிலனை நூல்கள்.

சத்திய வேட்கை	0 6 0

ஆலிவ் ஷ்ரீனர் என்ற ஆப்ரிக்கா தேசத்துப் பெண்மணியால் எழுதப்பெற்ற ஒரு சிறு கதை.

ருஷ்யக் கதைகள்	4 0 0

ருஷ்யப் பேராசிரியர் பலரின் கதைகளைத் தொகுத்துத் தமிழாக்கப்பெற்றிருக்கிறது. தமிழாக்கியவர் எம். எல். சபரிராஜன்.

நிழல்கள்	1 8 0

ஆசிரியர் அ. சீனிவாசராகவன் எழுதிய துன்பியல் நாடகம்.

அனைத்திற்கும் தபாற்செலவு தனி

அச்சிலிருக்கும் நூல்கள் :

மகாகவி பாரதி : வ. ரா., காய்கறித் தோட்டம் : மு. அருணாசலம்., வள்ளுவர் தந்த இன்பம் : ராய. சொ., இந்திய சுயராஜ்யம் : காந்தியடிகள் (பாலி சு. நெல்லயப்பர் தமிழாக்கியது)., திருமலைப் பள்ளு : பதிப்பாசிரியர் மு. அருணாசலம், அரசியல்: பிளேட்டோ, (வெ. சாமிநாத சர்மா தமிழாக்கியது).

மற்ற பதிப்பாளரின் ஏனைய நூல்களும் எங்களிடம் கிடைக்கும்

சக்தி காரியாலயம்

261, சைனாபசார், சென்னை ★ வடக்கு வெளிவீதி, மதுரை

குடும்பக் காட்சி

ஸரோஜா ராமமூர்த்தி

விடியற்காலம். மணி நான்கு. சிலு சிலு என்று காற்று அடிக்கிறது. பக்கத்தில் மாட்டுக் கொட்டிலில் 'ஹய், ஹய்' என்று மாட்டை அதட்டி வைக்கோல் போட்டுக் கொண்டிருக்கிறான் இடையன். 'டும் டும்' 'பி பீ' என்று பஜனை மடத்தில் நாதசுரத்தின் ஆரம்ப சுருதி கேட்கிறது. சாரதை தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டாள். பக்கத்தில் அயர்ந்த தூக்கத்திலிருக்கும் கணவனின் முகத்தைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, முந்திய இரவு அவன் சொன்ன வார்த்தையை ஞாபகப் படுத்திக் கொண்டாள். "என்ன இருந்தாலும் நீ சுத்தச் சோம்பேறிதான். அதில் சந்தேகமேயில்லை, சாரதா" என்று சொன்னான் ரகுநாதன். அந்த வார்த்தை அவள் மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது. சலிப்புடன் திரும்பிப் படுத்துக் கொண்டாள். ரகு தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான்.

ரகு: தூக்கமெல்லாம் முடிந்து விட்டதா? ராத்திரி தூங்கினாயா? இல்லை, நான் சொன்னதை நினைத்துக் கொண்டு தூங்காமல் அழுதுகொண்டிருந்தாயோ?

சாரதை: (சலித்த மனத்துடன்) ஆமாம், தூங்கினேன். இல்லை. உங்களுக்கு என்னைப் பற்றி ரொம்ப அக்கறை! (பேச்சு நிதானமான குரலில்தான் ஆரம்பமாயிற்று.)

ரகு: எடுத்ததற்கெல்லாம் ஏன் கோபித்துக் கொள்ளுகிறாய், சாரதா? பஜனை மடத்தில் நாதசுரம் வாசிக்கிறானே, என்ன என்று தெரியுமா?

சாரதை: நான் கண்டு வைத்தேன் அதையெல்லாம்! வேறு வேலை கீலை இல்லாமல் சோபாவில்தானே என்னை உட்கார்த்தி வைத்திருக்கிறது?

ரகு: (வேறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொள்கிறான்) சரி, சரி.

'அரும்பு கோணிடின் அதன் மணம் குன்றுமோ?' என்று பாடினார் ஒரு புலவர். குன்றாது. ஆனால், மனது கோணிவிட்டால், எல்லாம் கோணிவிடுகிறது. அது நிமிரும் போது, எல்லாம் நிமிர்கிறது. ஒரு குடும்பத்தில் ஒருநாள் வாழ்வில் அந்த உணர்ச்சி விசித்திரங்களை இங்கே நாம் காண்கிறோம். இது ஏதோ ஒரு வீட்டில் அல்ல; எல்லா வீடுகளிலும்தான் நடப்பது.

உனக்குச் சிடு சிடுப்புத்தான் அதிகமாய் இருக்கிறதே தவிர, வேறு எதற்கும் துப்பைக் காணோம். சதா இந்த......

சாரதை விடுவிடென்று எழுந்து கொல்லையில் போகிருள். வேலைக்காரி வீரம்மா ஜலம் தெளித்துப் பெருக்கிக் கொண்டிருக்கிருள். ரகுவின் மேலிருந்த கோபம், அவள் மேல் திரும்புகிறது.

வீரம்மா : ஏம்மா! இவ்வளவு சீக்கிரம் எழுந்து என்ன பண்ணப் போறீங்க?

சாரதை : (அவளைத் திரும்பி முறைத்துப் பார்க்கிருள்) ஆமாம், நீ வேலை செய்கிற சவரணைக்கு நான் எட்டுமணி வரையில் தூங்கலாம். ஏண்டி? அந்த வென்னீர்த் தவலையைத் தேய்த்து எத்தனை யுகமாச்சு? என்னடி வேலை செய்கிருய்? தண்டச் சம்பளம் இரண்டு ரூபாய். அதற்கு வேறு ஐயரிடம் சிபாரிசு.

வீரம்மா : (திகைத்து நிற்கிருள்) ஐயோ அம்மாடி! என்ன கோவம்மா இது? நேத்திக்கி விளக்கு வைக்கிற வரைக்கும் உழைச்சுட்டுத்தானே, அம்மா, வீட்டுக்குப் போனேன்? நான் மனுஷியா மாடா?

உள்ளே ரகுவின் நித்திரை நன்ருய்க் கலைந்து விடுகிறது. எழுந்து பரபரப்புடன் கொல்லையில் வருகிருன்.

ரகு : ஏனிப்படிக் கத்துகிறீர்கள்? இது வீடா, சந்தையா? சே, சே, சாரதா? கொஞ்சங் கூட நன்ருய் இல்லை.

வீரம்மா : ஏஞ்சாமி! நீங்க தான் சொல்லுங்கோ, நான் செய்யாமெ யார் செய்ருங்கன்னு! அம்மாவுக்கு இம்பிட்டுக் கோவமா, சாமி?

சாரதா : ஏண்டி! இட்டவள் மூதேவி என்கிற கதையாய் நான் பொல்லாதவள், ஐயர் நல்லவரோ. இந்தாருங்கோ, எங்க விஷயத்துக் கெல்லாம் வந்து தலையிடாதீங்கோ.

ரகு பதில் பேசாமல் மௌனமாய் உள்ளே போய்விடுகிருன். காலை ஒன்பது மணி. ஆபீஸுக்காக அவசர அவசரமாய்ச் சமையல் ஆகிறது. முந்திய நாள் தபாலில் சேர்க்கச் சொல்லிச் சாரதாவிடம் ரகு கொடுத்து விட்டுப் போன கவர் அப்படியே மேஜை மேல் கிடக்கிறது. அதை எடுத்துக்கொண்டு சமையலறைப் பக்கம் ரகு வருகிருன்.

ரகு : சாரதா! என் மேல் கோபித்துக் கொள்ளுகிருயே தவிர, நீ செய்யும் வேலை உன் கண்ணில் படவில்லை. இந்தக் கவரை......

சாரதா : (திரும்பிப் பார்க்கிருள்) அடடா! மறந்துபோய் விட்டேனே. பாழும் வீட்டில் உழைக்கத்தானே பொழுதிருக்கிறது?

வேறு பதில் சொல்ல முடியாமல் சாரதா திகைக்கிருள். ரகு அவசர அவசரமாய்த் தபாலாபீஸுக்குக் கிளம்புகிருன். சாரதா தெருவில் வந்து பார்த்துவிட்டு, அவனைக் கூப்பிடுகிருள்.

சாரதை : ஆபீஸ் போகும் அவசரத்தில் இதென்ன வேலை? தபாலாபீஸ் கிட்டேயா இருக்கிறது?

ரகு : உன்னிடம் சொன்னல் தான், நீ செய்வதில்லையே. சிரமத்துடன் சிரமமாய், நானே செய்து விடுகிறேன்.

சாரதா : வேண்டாம். நான் வீரம்மாளைப் போடச் சொல்லு

கிறேன். அதை இப்படிக் கொடுங்கள்.

ரகு அதை அவளிடம் கொடுத்துவிட்டுச் சாப்பிட உட்காருகிருன்.

சாரதை: (பரிமாறிக் கொண்டே) என்ன! சாயந்திரம் வரும்போது, கதம்பம் வாங்கிண்டு வரேளா?

ரகு: (சுடுகிற சாதத்தை வாயால் ஊதிக் கொண்டே) முடிந்தால் பார்க்கிறேன். சேத்துப்பட்டிலே எந்தக் கதம்பம் விற்கிறது?

சாரதை: (ஒருவிதக் கேலியுடன்) எனக்கென்ருல், ஊரே அஸ்தமித்துவிடும் இல்லையா?

ரகு மௌனம் சாதிக்கிருன். மணி ஒன்பதே முக்காலுக்கு மேல் ஆகிறது. அவசர அவசரமாய்க் கோட்டை மாட்டிக் கொண்டு கிளம்புகிருன். சாரதை வெற்றிலையுடன் வருகிருள்.

ரகு: பாக்கு மட்டும் கொடு. சாவகாசமில்லை எனக்கு.

சாரதைக்குப் புருஷனின் அவசரத்தைக் கண்டவுடன், வருத்தமேற்படுகிறது. காலையில் என்ன என்னவோ சொன்னவைகளையெல்லாம் நினைத்து வருத்தப்படுகிருள். கண்ணில் ஜலம் ததும்புகிறது. ரகு ரயிலைப் பிடிப்பதற்காக, "போய் வருகிறேன்" என்று அவசரமாய்ச் சொல்லி விட்டு ஒடுகிருன்.

பிற்பகல் மூன்று மணி. சாரதையின் சிநேகிதிகள் வருகிருர்கள்.

பங்கஜம்: காரியமெல்லாம் ஆகி விட்டதா? சமையல் அறையில் என்ன குடைந்துகொண்டிருக்கிருய்?

சாரதை: வாருங்கள். ஒன்றுமில்லை. ஒழித்துப் பெருக்கிக் கொண்டிருந்தேன். பொழுது போகமாட்டேன் என்கிறது. எதையாவது செய்ய வேண்டுமோ இல்லையோ. காலையில் ஒன்பது மணிக்குள்தான் அவாளுக்குச் சிடு சிடுக்காமல் ஒன்றையும் செய்துபோட நமக்கு ஒழியவில்லை.

ராதை: எனக்கும்தான் ஆத்திரமாய் வருகிறது. அவசரத்தில் நாம் செய்யும் வேலையில் குறுக்கே ஏதாவது சொல்ல வந்து விடுகிருர்கள்.

பங்கஜம்: அவர்களுக்கும் நம்முடைய காரியத்தில் பங்கெடுத்துக்கொள்ள எப்பொழுதுதான் ஒழிவு? நமக்குத்தான் பொறுமை அவசியம்.

ராதை: என்னல் முடிந்த வரையில் பொறுமையாய்த்தான் இருக்கிறேன். நமக்கும் ஆத்திரம் வந்துவிட்டால், என்ன பண்ணுகிறது. என் பெண் இருக்கே அது அந்தச் சமயத்தில் கைவிடாமல் கத்துகிறது. அவர் பேப்பர் படிக்கும் ஸ்வாரஸ்யத்தில் அதை அருகில் கூப்பிடுவதில்லை.

சாரதை மௌனம்சாதிக்கிருள். சிநேகிதிகள் மூவரும் சென்ற பின்பு, அவள் மனம் பலவிதத்திலும் குழப்பமடைகிறது. மணி ஐந்தடிக்கிறது. அன்று சனிக்கிழமை! 'அவர் சீக்கிரம் வந்து விடுவார்' என்று சந்தோஷத்துடன், பக்ஷணம் செய்ய ஆரம்பிக்கிருள். பூரியைப் பொரித்துச் சர்க்கரைப் பாகில் போட்டுக் கொண்டிருக்கிருள். நெற்றியில் முத்து முத்தாய் வியர்வை அரும்

பிக்கொண் டிருக்கிறது. ரகு வருகிருன்.

ரகு: (அவள் பக்கத்தில் வந்து உட்காருகிருன்) இதெல்லாம் என்ன நச்சு வேலை, வெயில் வேளையில்? வியர்த்துச் சொட்டுகிறதே. விசிறட்டுமா?

சாரதை: (குனிந்த தலையுடன்) வேண்டாம். உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமே என்று பண்ணுகிறேன். இன்னென்று தரட்டுமா?

ரகு: (ஜேபியி லிருந்து கதம்பத்தை எடுக்கிருன்) இந்தா! ஆசைப்பட்டாயே. முதலில் தலை பின்னி வைத்துக் கொள்.

வீரம்மா வருகிருள்.

சாரதை: அடுக்கில் சாதம் போட்டிருக்கிறேன். சாப்பிட்டு விட்டு வேலை செய்.

ரகு: ஏது? ரொம்பக் 'குஷி'யாயிருக்கிருயே. பூரியும் ஜோராயிருக்கிறது. ராத்திரிக்கு இதுவும் பாலுமே போதும். சிரமப்பட்டுச் சமைக்காதே.

சாரதை: (வெட்கத்துடன்) ஆமாம், ஸ்தோத்திரம் பண்ணுவதில் கெட்டிக்காராள்தான்.

ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொள்கிருர்கள்.

★

அமெரிக்கர் கதிகலங்கச் செய்தார்

சிகாக்கோ சர்வமத மகா நாட்டில் சுவாமி விவேகானந்தர் பேசிய போது, அந்த மகா நாட்டைக் கூட்டியவர்கள், தாங்கள் ஒரு நெப்போலியனை யன்ரே சமாளிக்க வேண்டியிருக்கிறது என்று கண்டார்கள். 'ரட்சிப்படையாதவர்' என்று கிருஸ்தவர் மதிக்கும் ஒருவர் இதோ வந்து நிற்கிருர். ஆனல், நாட்டிலுள்ள சகல பாதிரிகளும் கிருஸ்தவப் பிரசாரகர்களும் சேர்ந்து அறிந்திருக்கக் கூடியதைவிட மிக அதிகமாக, மதம், வேதாந்தம் முதலிய விஷயங்களை இவர் அறிந்திருக்கிருர். மனமொத்த முறையிலே, மதம் என்பது, இப்போதுதான் முதன் முதலாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் இதுவரை கனவும் கண்டிராத மேலான தத்துவம், மதத்திலே இருப்பதை அவர்கள் கண்டார்கள்; வாதம் என்பது சாத்தியமே இல்லாது போயிற்று. எலியை வைத்துக் கொண்டு பூனை விளையாடுவதைப் போல, பாதிரிகளைச் சுவாமி விளையாடி விட்டார். அவர்கள் கதி கலங்கி விட்டார்கள். ஆனல், காரியம் முடிந்து விட்டது; விதை விதைத்தாகிவிட்டது. அமெரிக்கர்கள் யோசிக்கத் தொடங்கினர்கள்; தங்களுக்குத் தாங்களே சொல்லிக்கொண்டார்கள்: "இந்த மனிதரோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம் பாதிரிகளுக்கு மதத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதே; அவர்களையா இத்தகைய மனிதர்களுக்குப் போதனை செய்ய அனுப்புவது? இல்லை, அனுப்பக் கூடாது."

—லிஹங் சாங் (சின அறிஞர்)

அபாயம், ஜாக்கிரதை!

கீழே சொல்லப்படும் ஐந்தையும் பற்றி ஜாக்கிரதையாய் இரு:

1. சதா காலமும் ஏதாவது பேசிக்கொண்டிருக்கும் வாயாடி.
2. கபடமுள்ள மனிதன்.
3. துளசிதளத்தைக் காதில் சொருகிக்கொண்டு, தன் பக்தியை விளம்பரம் செய்யும் மனிதன்.
4. நீளமாய் முக்காடு போட்டு முகத்தை மூடிக்கொண்டிருக்கும் ஸ்திரீ.
5. புல் பூண்டுகள் வளர்ந்து கவிந்திருக்கும் தேக்கமான குட்டையிலுள்ள தேகாரோக்கியத்துக்கு முற்றிலும் கேடான குளிர்ந்த ஜலம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்



மணல்வீடு

ஜைனேந்திர குமார்

எங்கும் அமைதி நிலவியிருந்தது.

சந்தியா காலம். மங்கல் ஒளியைக் காட்டியவாறு சிரித்துக் கொண்டிருந்தது கங்கைக் கரை. ஒரு சிறுவனையும் சிறுமியையும் தவிர, வேறு யாரையும் காணோம். அவர்கள் இருவரும் உலகத்தையே மறந்தவர்கள் போல, விளையாட்டில் மெய்மறந்திருந்தார்கள்.

சிறுவன் எங்கேயிருந்தோ ஒரு தடியைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து, அதை நீர்மேல் அடித்துக் கொண்டிருந்தான். தண்ணீர் நாலாபுறமும் சிதறியது. சிறுமி ஒரு கால்மேல் மணலை வாரி வாரிப் போட்டு, சின்ன அடுப்பு ஒன்று கட்ட முயன்று கொண்டிருந்தாள்.

வேலைக்கு நடுவில் பலமுறை அடுப்பைப் பார்த்து, "இதோ பார், சரியாக வரவில்லையோ, ஒரே உதையில் உதைத்துத் தள்ளி விடுவேன்" என்று அவள் சொல்லிக் கொண்டாள். பின்பு வெகு அன்பாக மணலை ஒழுங்குபடுத்தி அடுப்பு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டாள். அப்போது அவளுடைய சின்னஞ் சிறிய மனதிலே பலவிதமான எண்ணங்கள் ஓடின: "இதற்குமேல் ஒரு குடிசை போடுவேன். அது எனக்கு. மனோகரனுக்கு ?...... .... அவனுக்குக் குடிசையில் இடமில்லை. அவன் வாசலில் நின்றுகொண்டே இருப்பான். வெகு நேரத்துக்குப்பின், கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சுவான். அப்போதுதான் நான் அவனுக்கு உள்ளே இடங் கொடுப்பேன்."

அங்கே, மனோகரன் நீரில் விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு காரணமும் இல்லாமல், அவன் மேல் ஒரு போர் தொடங்கப் போவது யாருக்குத் தெரியும்?

சிறுமி யோசனை செய்தாள்: "மனோகரன் நல்ல பையன்தான். ஆனால், வம்புக்காரன். குறும்பு பண்ணிக்கொண்டே இருப்பான். இப்போது மாத்திரம் வம்புக்கு வரட்டும், இந்தக் குடிசையில் இடங்கொடுக்க மாட்டேன்."

அவளுடைய பெயர் சுரபாலா; வயது எழு. மனோஹரன் அவளை விட இரண்டு வயது மூத்தவன்.

அவளுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று:

குழந்தைகளின் விளையாட்டு; அதிலே ஒரு மனத்தாங்கல்! கேடு செய்தவனிடம் சிறுமி எப்படிப் பழி வாங்குகிறாள்! இந்த உணர்ச்சிச் சித்திரத்தை ஹிந்தியிலிருந்து **மீலி சபரிராஜன்** இங்கே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்.

"ஆமாம், அடுப்புச் சூடாக இருக்குமே, அதன்மேல் மனோஹரன் எப்படிக் குடியிருப்பான்? எனக்கென்ன? நான் எப்படியாவது இருந்து கொள்ளுவேன். ஆனால், அவன் வெந்து போவானே !............அவனிடம் சொல்லிப் பார்க்கிறேன்:'அடுப்பு நிரம்பச் சூடாய் இருக்கிறது. நீ உள்ளே வராதே. வந்தால் வெந்து போவாய்' என்று...... அவன் கேட்கா விட்டால்? அவன் என்னருகே உட்கார வந்தால்............? 'நில், நானும் வெளியில் வந்து விடுகிறேன்' என்று சொல்லுவேன்............ அவன் பிடிவாதம் பண்ணினால்? நிச்சயமாய்ப் பிடிவாதம் பண்ணுவான்.........ஆனால், நான் அவனை விடமாட்டேன். 'அடே, முட்டாள், வெந்து போவாய்' என்று சொல்லுவேன்."

இதை எல்லாம் நினைக்கும் போது, அவளுக்கு ஆனந்தம் உண்டாயிற்று.

மேலும் இரண்டொரு பிடி மணலை அள்ளி, அடுப்பின்மேல் வைத்தாள். இப்போது வேலை முடிந்தது. பெற்ற தாய் புதிதாகப் பிறந்த குழந்தையை எவ்வளவு ஜாக்கிரதையாகப் படுக்க வைக்கிறாளோ அதே போல, காலை மெதுவாக, மிக மெதுவாக, சுரபாலா வெளியே எடுத்தாள். கால் ஆதாரமாக இருந்தபோது, அடுப்பு நன்றாகத்தான் இருந்தது. அதை வெளியில் எடுத்தால் அடுப்புக் கீழே விழாதிருக்க வேண்டுமல்லவா! அவள் காலை வெளியே எடுத்த பின்னாலுங்கூட, அடுப்புக் கலையாமல் நின்றது. அவள் சந்தோஷ மிகுதியால் குதிக்கத் தொடங்கினாள்.

உடனே மனோஹரனை அழைத்துக்கொண்டு வந்து, இந்த அற்புதமான சிருஷ்டியைக் காட்ட வேண்டுமென்று, அவளுக்கு ஆவலுண்டாயிற்று. அந்த மூடனோ அங்கே தண்ணீரில் விளையாடிக் கொண்டிருக்கிறான். இங்கே எவ்வளவு அழகாக வேலை நடந்திருக்கிறது! அவனுக்கு இதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. இவ்வளவு பெரிய அடுப்பை, அவன் எங்கும் பார்த்திருக்கமாட்டான்.

இப்போது அவளுக்கு மற்றொரு யோசனை வந்தது. 'அடுப்பின்மேல் குடிசை போட்டுவிட்டு, அப்புறம் அழைத்தால் நல்லது' என்று அவள் நினைத்தாள். அவள் ஒரு பிடி மணலை எடுத்து, அதை அடுப்பின் மேல் மெதுவாக வைத்தாள். பின்பு மற்றொரு பிடி, மேலும் ஒரு பிடி, நாலு கைப்பிடி மணலை வைத்தாயிற்று. இப்போது குடிசையும் ஒருவாறு அமைந்தது.

அவள் விலகி நின்று, அந்த அற்புத சிருஷ்டியை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தாள். ஏதோ ஒரு குறை இருப்பதுபோல் தோன்றியது அவளுக்கு. புகை எந்த வழியாகப் போகும்? அருகே கிடந்த ஒரு துரும்பை எடுத்து இரண்டிடங்களில் துளை செய்தாள். முடிந்தது; உலகத்தின் அற்புத வஸ்துத் தயாராகிவிட்டது!

"மனோஹரனை அழைத்துக் கொண்டு வந்து, இந்த அற்புதமான வேலைப்பாட்டைக் காட்டுகிறேன். ஆனால், கொஞ்சம் பொறு, இன்னும் ஒரு முறை பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று தனக்குத் தானே முணுமுணுத்த அவள், மீண்டும் விலகி நின்று, வாயைத் திறந்தவாறு அடுப்பைப் பார்த்துப் பார்த்துப்

புளகாங்கிதம் அடைந்து கொண்டிருந்தாள்.

மனோகரனுக்குத் திடீரென்று சுரபாலாவின் ஞாபகம் வந்தது. தடியைக் கங்கையில் வீசி எறிந்துவிட்டு, திரும்பிப் பார்த்தான். சுரபாலா தேவி, தன்னுடைய சிருஷ்டியில் மெய் மறந்திருந்தாள். அவன் மெதுவாக அவளருகே வந்து ஒரே உதையால் அந்த மணல் வீட்டைச் சின்னா பின்னம் செய்தான்!

சுரபாலா திடுக்கிட்டுப் போனாள். அவளுடைய முகத்தில் இருள் சூழ்ந்தது. அவளுக்கு முன்பு சொர்க்கம் இருந்தது. அந்தச் சொர்க்கத்தைப் படைத்த அவள், துணைக்கு ஓர் ஆளை அழைத்துக்கொண்டு வந்து, அதன் பேரழகைப் பருக விரும்பினாள். அந்த ஆள் வந்தான். வந்து ஓர் உதை கொடுத்தான். எல்லாம் காலியாயிற்று - அவளுக்கு மிகவும் துக்கம் உண்டாயிற்று.

ஞானியான எவரேனும் அங்கே இருந்திருந்தால், சிறுமியை நோக்கி இவ்வாறு சொல்லியிருப்பார்கள்: "இந்த உலகம் கணப்பொழுதில் நாசமாய்ப் போகும் தன்மையது. இதில் இன்பம் என்ன, துன்பம் என்ன? உயிர்களும் பொருள்களும் எதிலிருந்து உற்பத்தியாகின்றனவோ, அதையே இறுதியில் அடைகின்றன. இதில் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது? உலகம் நீர்க்குமிழி போல; என்றாவது ஒரு நாள் அது நீரில் மறைந்து போகும். ஏ, மூடப் பெண்ணே, தெரிந்து கொள்..."

ஆனால், அந்தச் சிறுமியின் துரதிர்ஷ்டமோ, என்னவோ—அந்நேரம் கங்கைக் கரையில் அவளுக்கு உபதேசம் செய்ய யாருமில்லை. மனோஹரன், தான் செய்த காரியத்தை நினைத்து இப்போது வருந்தினான். யாரோ அவனை மனதுக்குள்ளாகத் திட்டுவது போலிருந்தது. ஆனாலும், அவன் சமாளித்துக்கொண்டு, "சுரோ, கோபமா?" என்றான்.

சுரபாலா பேசாதிருந்தாள்.

"இதற்கெல்லாம் கோபிப்பதா?"

அவள் அசையவில்லை.

"சுரி, சுரீ.........ஓ சுரீ......"

ஊஹூம், அவளுடைய கோபத்தை மாற்ற முடியவில்லை. ஹரனின் குரல் நடுங்கியது.

"சுரீ.........ஓ சுரீ.........நான் மனோஹரன் இல்லையா, உன் மனோஹரன்? என்னை ஏன் இப்படிக் கொல்லுகிறாய்?"

அவள் திரும்பிக்கூடப் பார்க்காமல் "நான் உன்னோடு பேச மாட்டேன்" என்றாள்.

மனோஹரனுக்கு வருத்தம் உண்டாயிற்று. அவன் சுரபாலாவை நோக்கி, "சுரீ, மனோஹரன் இதோ உன் பின்னால் நிற்கிறான். அவன் மகா கெட்டவன். அவனோடு பேச வேண்டாம். ஆனால், அவன் மேலே மணலை வாரி ஏன் வீசக் கூடாது? கன்னத்தில் ஓர் அறை கொடு. இனிமேல் குற்றம் பண்ண மாட்டான்" என்றான்.

"பேசாமல் இருக்கிறாயா, இல்லையா?" என்று அதட்டினாள் சுரபாலா.

"பேசாமல் இருக்கிறேன்...... ஆனால், பார்க்கக்கூட மாட்டாயா?"

"ஊஹூம், பார்க்க மாட்டேன்."

"சரி, பார்க்காதே. பார்க்க வேண்டாம். இனிமேல் உன் எதிரிலேயே வரவில்லை."

"பேசாமலிரு என்று சொல்ல வில்லையா?—வாயை மூடு."

"சரி, நான் பேசவில்லை. இங் கேயே உட்கார்ந்து விடுகிறேன். நீ பேசும்வரை, நான் இங்கிருந்து எழுந்திருக்கப் போவதில்லை—போ."

மனோஹரன் பேசாமல் கீழே உட்கார்ந்தான். சற்று நேரத்துக் குப் பின், சுரபாலா தோற்றுப் போய், "என் அடுப்பை ஏன் உதைத்தாயாம்?........இப்போது பண்ணிக் கொடு" என்றாள்.

"அதற்கென்ன, பண்ணிக் கொடுக்கிறேன்."

"அதே மாதிரி இருக்க வேண் டும்."

"அதைவிட நன்றாகப் பண்ணிக் கொடுக்கிறேன்."

"கூரை—புகை போக வழி—எல்லாம் செய்ய வேண்டும்."

"அதற்கென்ன, என்னென்ன மாதிரி வேண்டுமோ சொல்லு! செய்து கொடுக்கிறேன்."

"நான் சொல்ல மாட்டேன். நீ ஏன் உதைத்தாய்? நீயே செய்."

"சரி, இங்கே பார்."

"பார்க்க முடியாது. முதலில் வேலையைப் பார்."

மனோஹரன் வேலையை ஒரு வாறு முடித்துவிட்டு, சுரபாலா வின் பக்கம் திரும்பி, "முடிந்தது" என்றான்.

"முடிந்ததா?"

"ஆம்."

"புகை போக வழி விட்டிருக் கிறாயா? கூரை போட்டாச்சா?"

"அதெல்லாம் எப்படிப் பண்ணுவேன்? நீ சொல்லு, செய்கிறேன்."

"முதலில் செய், அப்புறம் சொல்லுகிறேன்."

சற்று நேரங் கழித்தபின், "முடிந்தது" என்றான் மனோ ஹரன்.

"எங்கே, பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே, திரும்பிப் பார்த்தாள் சுரபாலா. அடுத்த நிமிஷம் அடுப்பை அவள் ஓங்கி ஓர் உதை கொடுத்தாள்; அது சரிந்து விழுந்து மணலோடு மண லாயிற்று.

சந்தோஷ மிகுதியால், அவள் கூத்தாடத் தொடங்கினாள். அவ ளுடைய மனதில் இப்போது தான் நிம்மதி ஏற்பட்டது. அவ ளுடைய ஆனந்தத்தில், மனோஹர னும் கலந்துகொண்டான்.

★

பலவானின் ஆயுதம்

அஹிம்சை, ஒரு பலசாலியினுடைய ஆயுதம்; ஒரு வீரனுடைய ஆயுதம். கடவுளிடத்தில் உண்மையான பக்தி கொண்டிருக்கிற எவனும், வாளை உபயோகிக்கும் பலத்தைப் பெற்றவனாயிருந்தும், அதை உப யோகிக்கமாட்டான். ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் கடவுளின் பிம்பமே என்பதை அவன் தெரிந்து கொண்டிருக்கிறான்.

—மகாத்மா காந்தி.

ஒப்பற்ற ஆயுதம்

மகாத்மா காந்தி

ஆன்ம சக்தியே வலிமையுடையது என்ற எனது போதனை, தற்சமயத்துக்குப் பயனில்லாதது போலத் தோன்றினாலும், முற்றிலும் வீண்போகாதென்றே நான் நிச்சயமாய் நம்புகிறேன். 'எறும்பூரக் கல்லும் தேயும்' என்பது பழமொழி யல்லவா? இன்று வெறும் மனக்கோட்டையாகத் தோன்றும் கருத்து, நாளைக்குச் செயல் முறையில் பொருத்தமானதாகத் தோன்றவும் கூடும். இது என்னுடைய நம்பிக்கை. சரித்திரத்தில் இந்த மாதிரி உதாரணங்கள் எத்தனையோ காணலாம். ஆன்ம சக்தி என்ற பதத்தொடர், இன்று ஒரு பொருளில்லாத தொடராக நம் மாணவர்களுக்குக் காணப்படுகிறது. நாம் எத்தகைய இழி நிலைக்கு வந்துவிட்டோம் என்பதையே, இது காட்டுகிறது. ஏனென்றால், நம் மாணவர்களுக்கு, உயிரோடொட்டிய விஷயங்கள், நிரந்தரமான உண்மைகள் ஆகிய யாவும் செயல் முறைக்கு வராத வெறும் கற்பனைகளாகத் தோற்றுகின்றன; அற்பமான லௌகீக விஷயங்களை மட்டுமே பொருத்தமானவையாக அவர்கள் கருதுகிறார்கள். இதைவிடத் துக்ககரமான விஷயம் வேறு என்ன வேண்டும்?

வெறும் எண்ணிக்கைப் பலத்தினால் ஒரு பயனுமில்லை என்பதை ஒவ்வொரு நாளும் நாம் கண் முன்னாகக் கண்டு வருகிறோம். இந்தியாவிலுள்ள முப்பது கோடி மக்களை இன்று ஒரு லட்சத்துக்கும் குறைவான ஆங்கிலேயர் ஆளுகிறார்கள். வெறும் எண்ணிக்கையினால் பயனில்லை என்ற கூற்றுக்கு இதைவிடப் பெரிய அத்தாட்சி வேறென்ன வேண்டும்? ஒரு சிங்கத்தைக் கண்டாலே, ஆயிரக்கணக்கான ஆடுகள் ஓட்டம் பிடிக்கின்றன. இதற்குக் காரணம் தெளிவாகத் தெரிகிறது. ஆடுகள் தங்கள் பலவீனத்தை உணர்ந்திருக்கின்றன; சிங்கம் தன் பலத்தை உணர்ந்திருக்கிறது. தனக்குப் பலம் இருக்கிறதென்பதைச் சிங்கம் அறிந்திருப்பதனாலே, ஆட்டு மந்தையின் எண்ணிக்கைப் பலத்தை அது வென்று விடுகிறது. இந்த உவமைப்படி, ஆன்ம சக்தி என்பது அப்படி ஒன்றும் வீண் பிரமையோ கற்

'மாணவருக்கு' என்ற பெயருடன், மகாத்மா காந்தியின் அரிய கட்டுரைகள் பலவற்றைத் திரட்டி ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது ஒரு புத்தகம். அதை அப்படியே அழகான தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வருகிறார்கள் **புதுமைப் பதிப்பகத்தார்**. அதிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கட்டுரை இது.

பணியோ அல்ல, சத்தான உண்மைதான் என்று முடிவு கட்ட முடியாதா ?

எண்ணிக்கைப் பலத்தைக் குறைத்துக் கூறுவது என் கருத்தல்ல ; அதற்கும் உபயோகம் இருக்கிறது. ஆனால், உள்ளிருந்து இயங்கும் ஆன்ம சக்தியின் வலிமை கொண்டே, அது உபயோகமானதாய் இருக்க முடியும். யானை எவ்வளவு பெரியது ? ஆனால், அதன் மிருதுவான பாகத்தில் லட்சக்கணக்கான எறும்புகள் ஒன்று சேர்ந்து அரிப்பதனாலே, அவை அந்த யானையைக் கொன்றுவிடுதலும் கூடும். எறும்புகளுக்கு உடம்புகள் வெவ்வேறாக இருந்தபோதிலும், உணர்ச்சி அளவிலே அனைவரும் ஒன்றுதான் என்ற நினைவு, அதாவது, அந்த எறும்புகளின் ஆன்ம சக்தியே அவைகளுக்கு அப்படிப்பட்ட, வெல்ல முடியாத பலத்தைத் தந்திருக்கிறது. நமக்கும் அப்படித்தான். எறும்புகளுக்கு உள்ள உணர்ச்சி போல, நமக்கும், இந்திய மக்கள் எல்லோரும் ஒன்றுதான் என்ற உணர்ச்சி ஏற்பட்டு விட்டதானால், அந்தக் கணமே நாமும் பிறரால் எதிர்த்து நிற்க முடியாத வலிமை பொருந்தியவர்களாகி, நம்மைப் பிணித்திருக்கும் தளையை அறுத்தெறிந்து விடலாம்.

நம் தேசியப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் தொகை மிகவும் சொற்பமாயிருப்பினும், உண்மையான தியாகமும் சேவையும் செய்யவேண்டுமென்ற உணர்ச்சியோடு, தங்கள் லட்சியத்தில் உறுதியான நம்பிக்கையும் அவர்களுக்கிருக்குமானால், அரசாங்கக் கல்வி ஸ்தாபனங்களில் படிக்கும் மாணவர் அனைவரும் சேர்ந்து இந்த நாட்டுக்குச் செய்யக்கூடிய தொண்டைவிடப் பலமடங்கு மேலான தொண்டை, அவர்கள் செய்ய முடியுமென்பதே எனது உறுதியான நம்பிக்கை. உயர்ந்த உள்ளப் பண்பு, தொகையின் பெருக்கத்தை விடச் சிறப்பு வாய்ந்தது என்ற கொள்கை மிகவும் ஆதாரபூர்வமானது. ஏனென்றால், அது செயல்முறையில் உண்மையாயிருக்கிறது. செயல் முறையில் சரியென்று நிரூபிக்க முடியாத விஷயமெதுவும் கொள்கையில் சரியாக இருக்கமுடியாதென்றே நான் முடிவு கட்டுகிறேன்.

பூமி பந்தைப்போல் உருண்டையானதென்றும், தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறதென்றும் இத்தாலிய வானநூல்வல்லவரான கலிலியோ முதன் முதலில் கண்டு பிடித்துச் சொன்னபோது, அவரை வெறும் கற்பனைக்காரரென்றும் கனவு காண்கிறவரென்றும் உலகமெல்லாம் கேலி செய்தது. ஆனால், இன்று, கலிலியோ சொன்னதுதான் உண்மை என்பதை நாம் அறிவோம். கலிலியோவின் கருத்தை ஏற்காமல், பூமி அசையாது அப்படியே நிற்பதென்றும், ஒரு தட்டுப் போல் தட்டை வடிவம் உடையதென்றும் நம்பியவர்களே அறியாமை என்ற இருளிலே மயங்கி நிற்கிறார்களென வும் நாம் அறிவோம்.

தற்காலக் கல்வியானது ஆன்ம தத்துவத்திலிருந்து நமது பார்வையை வேறு வழியில் திருப்புகிறது ; ஆகவே, ஆன்ம பலத்தால் என்னென்ன காரியங்களைச் செய்தல் கூடும் என்பதை நாம் உணர்வதில்லை ; இதன் பயனாக நமது பார்வையானது, எப்போது பார்த்தாலும், விரைவிலே தோன்றி மறைந்து போகிற

சொற்ப வாழ்வுள்ள உலகியல் சக்தியிலேயே பதிந்திருக்கிறது. உண்மையிலேயே இது, மனோ பாவம் அற்றுப்போன அறிவின் மந்த நிலையைத்தான் புலப்படுத்து கிறது.

ஆனால், நான் நம்பிக்கையோடு, பொறுமையாக வாழ்கிறேன். நான் சொல்லுகிற கருத்தே சரி என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. இது வறட்டு நம்பிக்கை அல்ல; என்னுடைய அனுபவத்தாலும் என் தோழர்களின் அனுபவத்தாலும் உறுதிபெற்ற நம்பிக்கை. இவ்விரு கொள்கைகளையும் மாணவர் ஒவ்வொருவரும் பொறுமையோடும் விருப்பு வெறுப்பில்லாமலும் தாமே ஆராய்வாரானால், மெய்யானவை என்று நேருக்கு நேராகக் கண்டு கொள்வார்கள்:

1. வெறும் தொகைப் பெருக்கத்தில் பயனில்லை; எண்ணிக்கைப் பலம் ஒரு பலமாகாது.

2. ஆன்ம பலம் அல்லாத வேறு எந்தப் பலமும் சொற்ப வாழ்வுடையது; வீணானது.

மேலே சொன்ன இரண்டு கொள்கைகளும் சரி யென்றால், ஒவ்வொரு மாணவரும் தம்மை ஒழுங்குபெற நிறுத்தி, தூய்மைப் படுத்திக்கொண்டு, ஆன்ம பலம் என்ற ஒப்பற்ற ஆயுதத்தைப் பெறச் சதா முயல வேண்டும் என்பது சொல்லாமலே விளங்குகிறதல்லவா?

★

வீரர்கள் தேவை

அன்பே வெற்றி தரும். நீங்கள் உங்கள் சகோதர மனிதர்களிடம் அன்பு செலுத்துகிறீர்களா? கடவுளை நீங்கள் எங்கே தேடச் செல்கிறீர்கள்? சகல ஏழைகளும் அகதிகளும் பலவீனர்களுமே கடவுள் அல்லவா? முதலிலே அவர்களை ஏன் வணங்கலாகாது? கங்கைக் கரையிலே கிணறுவெட்ட ஏன் போகிறீர்கள்? அன்பின் சர்வ வல்லமையில் நம்பிக்கை கொள்ளுங்கள். உங்களுக்குத் துளியும் தன்னலமில்லையா? இல்லையானால், உங்களை யாராலும் வெல்லமுடியாது. ஒழுக்கமே எங்கும் மேம்பாடடைகிறது. கடலடியிலே அமுங்கிக்கிடக்கும் இந்தக் குழந்தைகளை, ஆண்டவன் காப்பாற்றுவான். உங்கள் நாட்டுக்கு வீரர்கள் தேவை. நீங்கள் வீரர்களாயிருங்கள்.

—சுவாமி விவேகானந்தர்

ஜனாதிபதியின் நாடகம்!

தியொடோர் ரூஸ்வெல்ட் என்பவர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், கன்ஸாஸ் என்னும் மாகாணத்திலிருந்து ஒரு தூதுக் கோஷ்டியார் அவரைக் காணவந்தார்கள்.

"களத்திலே வைக்கோல் கொட்டிக்கிடக்கிறது. நான் போய் அதைப் போர் போட்டாகவேண்டும். அவசர ஜோலியாகையால், எனக்கு இங்கே பேச நேரமில்லை. அங்கே நீங்கள் வந்தால், பேசிக்கொண்டே, வேலையைச் செய்வேன்" என்று அவர்களிடம் அவர் தெரிவித்தார்.

தூதுக் கோஷ்டியார், அவ்வாறே களத்துக்குச் சென்றார்கள். ஆனால், அங்கே ஒரு துரும்பு வைக்கோல்கூடக் கீழே கிடக்கவில்லை.

திகைத்த ஜனாதிபதி, தம் வேலையாளை அழைத்து, "என்ன, ஜேம்ஸ்! வைக்கோல் எங்கே?" என்று கேட்டார்.

"நான் மறந்துபூட்டேனுங்க. நேத்து வந்தவங்க பாக்கறத்துக்காக நீங்க போர்போட்டீங்க இல்லியா, அப்படியே இருக்குது அந்த வைக்கோல். திருப்பிக் கலைச்சுப்போட மறந்து பூட்டேனுங்க" என்றான் வேலையாள்!

அந்தண அபிமன்யு

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

குரு குலத்தாரின் அரசாட்சி முடியும் சமயம். குரு க்ஷேத்திரத்திலே பாரத யுத்தம் நடக்கிறது. பதின்மூன்று நாள் போரிலே, துரோணர் சக்கர வியூகம் வகுத்துச் சீறி நிற்கிறார். அர்ச்சுனன் மைந்தன் அபிமன்யு என்பான் தன்னந் தனியே கிளம்புகிறான்; சக்கர வியூகத்தைச் சிதைக்கிறான். துரோணர், கிருபர், கன்னன், அசுவத்தாமன் முதலிய வீராதி வீரரை மடக்குகிறான்; ஒரு கை போய்விடுகிறது; உடலெங்கும் குருதி கொப்புளிக்கிறது. உற்ற துணையுமில்லை; ஏறத்தேருமில்லை; பற்றப்படையுமில்லை. அச் சமயத்திலும், தணியாச் சமர் செய்கிறான்; பகைவர் சேனையைக் கலக்குகிறான்; முடிவில் வீர சுவர்க்கம் செல்லுகிறான்.

மதுரைச் சீமையில் மகிமையுடன் முளைத்த நாயக்கரின் ஆட்சி, சாயும் காலம். சந்தா சாகிப் என்பான் பெரும் படையுடன் வருகிறான்; திண்டுக்கல்லிலே கோர யுத்தம் நடக்கிறது. தளவாய் வெங்கு ஐயர் அச்சேனையுடன் தனிச் சமர் செய்கிறார்; யானை மீதிருந்து அம்பு மழை பொழிகிறார்; காயமெங்கும் பல காயங்கள்; சல்லடைக் கண் போல் புண் புழைகள்; உதிரம் சொரிகிறது. அப்போதும் சளைக்கவில்லை; பாண்டவ அபிமன்னனைப்போல் பராக்கிரமங் காட்டுகிறார். முடிவிலே விதியின்றி வீர சுவர்க்கமும் ஏறுகிறார். இந்த விவரத்தை இங்கே சிறிது பேசுவோம்.

பதினாறும் நூற்றாண்டின் மத்தியிலே மதுரைமா நகரில் நாயக்க மன்னவரின் ஆட்சி முளைக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கம் வரையில், பற்பலர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி செலுத்தி வருகின்றனர். அப்பால் அந்த ஆட்சி சாயுங்காலம் நெருங்குகிறது. விஜயரங்க சொக்கநாத நாயக்கர் 1731-ஆம் ஆண்டில் கண் மூடுகிறார். உடனே அவர் மனைவி—ராணி மீனாட்சி—சிம்மாசனம் ஏறுகிறாள். பங்காரு திருமலை என்பவன் 'நானே பட்

புல் பிடிக்கும் கை வில் பிடிக்கிறது. நாடு நவாப்பின் கைக்குப் போகலாகாதென்ற தேசபக்தி மேலிட்டினால், அந்தண வெங்கு ஐயன் அருஞ்சமர் புரிந்து ஆவியும் துறக்கிறான். ஆயினும், அத்தனை வீரமும் தியாகமும் வீணாகிறது. அது ஒரு சோகக்கதை. எனினும், அதை மறக்கவொண்ணுமோ?

டத்துக்கு உரியவன்' என்று பதைத்து எழுகிறான். அவன் மகன் விஜய குமார முத்து என்னும் குழந்தையை, அவள் சுவீகாரம் செய்து கொள்ளுகிறாள்; அக் குழந்தைக்குப் பிரதியாகத் தானே இருந்து ஆட்சியும் நடத்துகிறாள்.

பங்காரு திருமலைக்கு அந்த ஏற்பாடு பிடிக்கவில்லை. தானே முடிசூடவேண்டும் என்று தண்டைத் திரட்டுகிறான். தலை நகரான திரிசிராப்பள்ளியில் ராணி மீனாட்சி இருக்கிறாள். அரண்மனையும் பொக்கிஷமும் அவள் வசம் இருக்கின்றன. சேனையும் மதுரை நகரும் திருமலையின் கையில் சிக்குகின்றன. அவனுடன் சண்டைக் கெழ, அவள் சித்தங் கொள்ளவில்லை. நாடு சீரழியக் கூடாது என்பதே அவள் சிந்தனை. ஆதலின், சமரஸத்திற்கு வழி யாதென ஆராய்கிறாள். திருமலைக்கோ போரிலேயே நாட்டம் செல்லுகிறது. சேனாதிபதியான தளவாய் வெங்கு ஐயரின் உதவியை அவன் நாடுகிறான். தளவாய் புத்தி சொல்லுகிறார். அதன் விவரம் இது:

"திருமலையே! நீ பெருமதி கொள்ள வேண்டும். விஜயரங்க சொக்கநாதர் காலகதியாகுமுன் கூறிச் சென்றதென்ன? தான் இறந்துபடின், மூத்த மனைவி மீனாட்சி உடன்கட்டை ஏறுதல் ஒண்ணாது; மைந்தனொருவனைச் சுவீகாரம் செய்து கொண்டு, அரசை ஆண்டுவர வேண்டும் என்பதன்றோ? அங்ஙனமே அவள் நடந்திருக்கின்றாள்; உன் மகனையே மன்னவனாக முடிசூட்டியிருக்கின்றாள். இது கண்டு நீ களிப்படைதல் வேண்டும். அவ்வாறின்றிப் போரில் முனைந்தால் நம் அரசு சிதறும். நமது புராதன விஜயநகர ஸாம்ராஜ்யம் சாய்ந்துவிட்டது. தென்னாட்டைத் தினுக்கும் மொகலாய சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக ஆற்காடு நவாப் விளங்குகின்றான். நமது உட்பகை காணின், கப்பத்தோடு அவன் நிற்கமாட்டான்; அரசையே கட்டிக் கொள்ளக் கருதுவான்; தஞ்சாவூரைக் கைப்பற்றிக் கொண்டு விட்டான். வேறு அத்தாட்சி வேண்டுமோ? அனர்த்தம் தேட வேண்டாம். நவாபுக்கு இடங் கொடுக்க வேண்டாம். முந்தையோர் கண்ட அரசு உன் காலத்தில் உன் செயலால் சாய்ந்தழிய வேண்டாம். இதுவே என் பிரார்த்தனை."

அச் சொல் திருமலையின் செவியில் ஏறவில்லை. போரே சிறந்த தென்றான் அப் பங்காரு. இந்நிலையில் ஆறுகாட்டு நவாபின் சேனைகள் தெற்கு நோக்கி வந்தன. கப்பத் தொகையான முப்பது லட்சத்தை வாங்கிச் செல்வதே வெளிப்படையான கருத்து. மனத்துளோ, பாண்டிய நாட்டையே கைப்பற்றிக் கொள்வதேயாம். அச் சேனைக்குத் தலைமை பூண்டவன் நவாபின் மைந்தனான ஸப்தர் அலி என்பவன். துணைவனாக வந்தவனோ நவாபின் மாப்பிள்ளையான சந்தா சாகிப் எனப் படுவான். இவனுக்கோ நவாபு பதவியையும் அபகரித்துக் கொள்ளவேண்டும், குமரி முனைவரையில் தென்னாடு பூராவும் செங்கோல் செலுத்தவும் வேண்டும் என்பதே நோக்கமாகும்.

தஞ்சைப் பக்கம் சந்தா சாகிப் வந்ததுதான் தாமதம். பங்காரு திருமலை, அச் சந்தா சாகிபின் உதவியை நாடுகிறான்; ராணி

மீனுட்சியைத் தொலைக்க வேண்டும் என்கிருன்; முப்பது லட்சம் கப்பம் கட்டவும் வாக்களிக்கிருன். ராணி மீனுட்சிக்கு அத்தகவல் எட்டுகிறது. அன்னியனிடம் சரண்புக, அவளுக்கு மனம் வரவில்லை. அன்னியனது உதவியைக் கோரிய திருமலையை வெறுக்கிருள்; உட் பகையினல் ஊழியுமே என்றும் கவலை கொள்கிருள். இதற்கிடையில், அவள் சோதரரான வேங்கட நாயக்கனும் பெருமாள் நாயக்கனும் சந்தா சாகிபையே சாருகின்றனர்; ஒரு கோடி ரூபா கப்பம் கட்டுவதாகவும் ஒப்பம் கொடுக்கின்றனர். கருதிய கருமம் எளிதில் கை கூடுமென அச்சாகிப் களிப்புக் கொள்கிருன். சுருங்கச் சொன்னல், திரிசிரபுரம் வந்து சேருமுன், சந்தா சாகிப், கவலை வேண்டாமென்று மீனுட்சிக்கு ஆறுதலும் கூறுகிருன்.

அப்போதுதான் தம்பியரின் சூழ்ச்சியை அவள் ஊகித்துணருகிருள். காரியம் தலை மிஞ்சிவிட்டது. என் செய்வாள் அப் பெண்பால்! விதியை நொந்து கொள்ளுகிருள். பங்காரு திருமலையைத் தலை வாங்கிவிட்டால், கலகமேயிராது என்கிருன் சந்தா சாகிப். ஒரு கொலைக்கு உடன்தையானல், ஆயிரம் ஆயிரமாகக் கொலை நிகழுமே என்று அவள் துடிக்கிருள். உடனே சந்தா சாகிப் சும்மா இருந்துவிடுகிருன். நாட்கள் பல செல்லுகின்றன. மதுரைச் சீமையை ஒழுங்குபடுத்தி வருவதாகக் கூறி, சந்தா சாகிப் கிளம்புகிருன். அவனுடன் பெருஞ் சேனையொன்றும் புறப்படுகிறது. அவ்வேளை சந்தா சாகிபின் உட்கருத்தை, தளவாய் வெங்கு ஐயர் உணருகிருர். 'தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக் கொண்டாயே!' என்று திருமலைக்கு அவர் இடித்துக் கூறுகிருர்.

பின்னரே, திருமலைக்குக் கண் திறக்கிறது; புத்தியும் பிறக்கிறது. யாது செய்யலாம், தப்ப உபாயம் உண்டோ என்று வெங்கு ஐயரையே அவன் வினவுகிருன். "சந்தா சாகிபினிடம் பெருஞ் சேனையுளது. நம்மிடமோ ஒரு சிறிய சேனைதான். முதலில் உன்னையும் அப்பால் மீனுட்சியையும் தொலைத்து, அதன்பின், பாண்டி நாட்டைக் கட்டிக் கொள்வதே அவன் நோக்கம். அப்பத்தைப் பங்கிட்டுத்தரக் குரங்கை அழைத்த கதையாகிவிட்டதே" என்று தளவாய் வெங்கு ஐயர் தவிக்கிருர். ஆபத்தில் தலை கொடுக்க வேண்டும் என்று கை யெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிருன் பங்காரு திருமலை. "என் இனத்தாரே முன்னம் நாயக்கவரசைக் காத்தனர், தளவாய்களாக நின்று. நான் தளவாயாக இருக்கையில், நாடு சீர் குலைய, நாயக்கவரசு சாய, உடன்படேன். இதோ போர் முனை போகிறேன். பகைவனை ஒரு கை பார்க்கிறேன்" என்று வஞ்சினங் கூறி, வெங்கு ஐயர் கிளம்புகிருர்.

திண்டுக்கல்லுக்கு அருகே அம்மைய நாயக்கனூரில் இரு பக்கத்துச் சேனைகளும் சந்திக்கின்றன. சந்தாசாகிபின் பக்கத்தில் ஐம்பதாயிரம் வீரர். வெங்கு ஐயரின் பக்கமோ பரிவீரர் ஈராயிரவர்; காலாளர் எண்ணுயிரவர்; கரிவீரர் பதின்மர். வெங்கு ஐயருக்குத் துணையாக அம்மைய நாயக்கன், போடி நாயக்கன் முதலிய பாளையக்காரரும் செல்லுகின்றனர். சண்டை மிக உக்கிரமாகிறது. வெங்கு ஐயரின் போர்த்திறமை கண்டு, சந்தா சாகிப்

திகைக்கிறான்; அவன் வீரரும் நடுக்கம் கொள்ளுகின்றனர். என்றாலும், நாடு பிடிக்கும் ஆசை உற்சாகம் ஊட்டுகிறது; சேனையின் பெருக்கும் தைரியம் ஊட்டுகின்றது. வீரரை உற்சாகப் படுத்துகிறான் சந்தாசாகிப்; பகைவனது சேனை ஐந்தில் ஒரு பங்கே என்று எடுத்துக் காட்டுகிறான்.

சந்தாசாகிபின் வீரர் சலியாது சமர் புரிகின்றனர். வெங்கு ஐயருக்குத் துணையாக வந்த அத்தனை பெயரும் படுகளத்தில் பொன்றி வீழ்கின்றனர். தளவாயும் ஒரு சில நூறு வீரருமே உயிருடன் நிற்கின்றனர். அது கண்டு வெங்கு ஐயருக்கு வீராவேசம் ஓங்குகின்றது. "பாண்டியர் பதி, பழம் பதி, நாயக்கரின் நடுநாயகமான பதி, அன்னியன் கையில் சிக்குவதோ? இதனை நாம் உயிருடனிருந்து காண்பதோ? வீரர்காள்! தண்டிலே போனால் இரண்டில் ஒன்றுதானே? இப்பகை எம்மாத்திரம்? ஒரு கலக்குக் கலக்குவோம். அப்பால் வருவது வருக!" என்று அவர் வீரவாசகம் பேசுகிறார். உடனே மதுரை வீரர் தோள்தட்டி ஆர்க்கின்றனர்; சிங்கநாதஞ் செய்து சமரில் முனைகின்றனர்.

அவ்வளவில் சந்தாசாகிபின் முன்னணித் துருப்புகள் முறிந்து ஓடுகின்றன. பின்னே யிருந்த சந்தா சாகிபும் பேதுறுகின்றான். யானை மீது அம்பாரியில் வீற்றிருந்த வெங்கு ஐயர் நாற்புறமும் அம்புகளை வீசுகிறார்; கணைகள் ஒன்றன்பின் ஒன்றாக விரைந்து செல்லுகின்றன; பகைவரை உயிர் குடித்து அப்பால் போகின்றன. அவரை அணுக முயன்ற அனைவரும் ஆவி துறந்து நிலத்தில் சாய்கின்றனர். மேலும் வீரர் வந்து, வெங்கு ஐயரை நாற்புறமும் வளைந்து கொள்ளப் பார்க்கின்றனர். யானையோ பம்பரம்போல் சுழன்று கொடுக்க, நான்கு திக்கிலும் பாணங்களை வீசுகிறார் வெங்கு ஐயர். சந்தாசாகிபின் வீரரும் அம்பு விடுகின்றனர், குண்டு வீசுகின்றனர், கொக்கரித்து வருகின்றனர்! வந்துமென்ன? வருவோர் அனைவரும் வெதும்பி விழுகின்றனர். எவரும் அவரை நெருங்க இயலவில்லை.

இதற்கிடையில், வெங்கு ஐயருக்கு உடம்பெங்கும் பதினெட்டுப் படுகாயங்கள் ஏற்படுகின்றன. உதிரம் பொங்கி வழிகிறது. மேலும் மேலும் அம்புகளும் வந்து பாய்ந்த வண்ணமாயிருக்கின்றன. அவற்றைப் பறித்தெறியவும் அவருக்கு அவகாசமில்லை. அபிமன்யுவைப் போல் அருஞ்சமர் ஆற்றுகிறார். அவரது யானையும் அண்ட வரும் பகைவரைத் துதிக்கையால் வாரி வீசுகிறது; நெருங்கும் பகைவரை முன்காலில் இட்டுத் தேய்க்கிறது; மேகத்தின் இடிபோல் கர்ஜிக்கிறது. வெங்கு ஐயரின் கையிலிருந்த கணைகள் எல்லாம் தீர்ந்துவிட்டன. பகைவர்மீது பாய்ச்ச, பாணங்கள் இல்லை. உடனே அவர் தம்மீது பாய்ந்துள்ள அம்புகளை ஒன்றுஒன்றாகப் பறித்து, வில்லில் நாண் பூட்டி விடுக்கிறார்.

அந்த அம்புகளும் தீர்ந்து போயின. அப்பால் என்ன செய்வது? அவ்வேளை அவர் ஏறியிருந்த யானை படுகாயமுண்டு கீழே சாய்கிறது. உடனே அவர் கீழே குதித்து, அருகே தோன்றிய பரிவீரனைக் கீழே வீசித் தள்ளி அக்குதிரைமீது ஏறிக் கொண்டு, வாட்போர் புரிகிறார்;

குதிரையைத் தட்டிவிட்டுப் பகைவரைத் துரத்தித் துரத்தி வெட்டிச் சாய்க்கிறார். அக்குதிரையின் காலைப் பகைவர் வெட்டி வீழ்த்துகின்றனர். உடனே அவர் நிலத்தில் குதித்து, வாளை ஓச்சி, வெட்டுப் பழி காண்கிறார். அவ்வாளோ பகைவரின் தந்திரத்தால் இரண்டாக முறிபடுகிறது. அக்கணமே இடுப்பிலிருந்த ஈட்டியை எடுத்து நீட்டுகிறார். அவரை நெருங்க எவரும் அஞ்சுகின்றனர்.

முடிவில் ஈட்டியும் முறிபடுகிறது. தன்னந்தனியே நிற்கிறார். உற்ற துணை யாருமில்லை.; பற்றப் படையுமில்லை. ஆயினும், அருகே கிடந்த துப்பாக்கிக் கட்டையொன்று கொண்டு, ஒரு நாழிகை நேரம் சமர்புரிகிறார். அச் சமரில் ஒரு கை அற்று வீழ்கிறது. அப்போதும் அவர் மனம் சலிக்கவில்லை. உதிரவெள்ளமும் காயங்களின் கடுமையும் அவருடலைச் சலிக்க வைக்கின்றன. அத்தறுவாயிலும் ஆண் சிங்கமே போல் அவர் வீறுடன் நின்று ஒற்றைக் கையால் ஒன்னலரைக் குத்துகிறார்; காலை வீசிப் பகைவரை வீழ்த்துகிறார். எத்துணை நேரம் அந்நிலையில் போர் புரிய இயலும்? கடைசியில் அக்கோமகன் குற்றுயிராய்க் கீழே சாய்கிறார். தொண்டைக் குழியில் உயிர் துடிக்கிறது. "அந்தோ! நாயக்கரின் ஆட்சி அன்னியரின் கைக்கு மாறுவதோ? ஆலவாய்க் கடவுளே! உன் சித்தம் எப்படியோ? என் கடன் கழித்தேன், நிம்மதியுடன் கண் மூடுகிறேன்" என்று கூறுகிறார். உடனே, உடலை விட்டு உயிர் பிரிந்தோடுகிறது.

வீர வெங்கு ஐயர், தளவாய்

வெங்கு ஐயர், புல்லேந்தும் கையராகப் பிறந்தும் வில்லேந்திச் சேவகம் புரிந்தார்; வீரம் விளைத்தார்; வீறுப்புக் காட்டினார்; வீர சுவர்க்கமே புகுந்தார் என்று மதுரைச் சீமையார் மனமார வாழ்த்தினர். வெங்கு ஐயர் பட்டு வீழ்ந்தது கேட்ட பங்காரு திருமலை ஓட்டம் எடுத்தான்; சிவகங்கையிலே உதயத் தேவரிடம் சரண்புகுந்தான். மதுரைப் பதி, நாதனற்றுப் போய்விட்டது. எளிதில் உள்ளே புகுந்தான் சந்தா சாகிபு. நகரைக் கைப்பற்றிக் கொண்டு, ஆனந்தக் களிப்பில் ஆழ்ந்தான்.

அப்பால் சந்தா சாகிப் திரிசிரபுரம் சேர்கிறான் கோலாகலமாக. மீனாட்சிக்கோ உதைப்பு எடுக்கிறது. பாசாங்கெல்லாம் பண்ணிப் பார்க்கிறான் அப் புண்ணியவான். அவன் உட்கருத்தை மீனாட்சி நன்கு கண்டு கொள்கிறாள். அவள் மனம் வெடிக்கிறது, ஆவியும் பிரிகிறது. பல சொல்லி என்ன? மதுரையிலே நாயக்கரின் ஆட்சி முற்றுப் பெறுகிறது. ஆறுகாட்டு நவாபின் கொடி பறக்கத் தொடங்குகிறது. அது வேறு கதை.

★

யாரும் தடுக்கமுடியாது

அமைதியும் உறுதியும் கொண்டு கடவுளுக்குப் பயந்து வாழும் ஒரு ஜாதியார் முன்னேறிச் செல்லுவதை, இந்தப் பூலோகத்திலுள்ள யாரும் தடுக்க முடியாது. உலகத்திலுள்ள சகல ஆயுதங்களையும் காட்டிலும் அஹிம்ஸை மிக்க அதிகமான சக்தி வாய்ந்தது.

—மகாத்மா காந்தி



T.V.S. முன்னிற்கிறது!



T. V. S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 4,000-க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகு நாளைய அனுபவத்தால்தான் T. V. S. இஞ்சினியர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

பிரதான அம்சங்கள்

* **ஸ்டார்டிங் அதிக சுலபம்:** சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
* **மும்முறை வடிகட்டும் வசதி:** சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.
* **சமகனம்:** டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
* **மிகவும் நம்பிக்கையானது:** ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
* **நேர்த்தியான தோற்றம்:** மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்த தோற்றம்

வாங்குமுன் மாதிரிகளைப்

T·V·S

கியாஸ் பிளாண்ட் பாருங்கள்

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்

மதுரை & சென்னை.

TVS.K-7 TM.

புதிய நூல்கள்

நீங்கள் படித்தீர்களா !

இல்லையானால் இன்றே வாங்கிப் படியுங்கள்

இராமகிருஷ்ண மடத்துப் புத்தகங்கள் : விவேகானந்தர் சரித்திரம் ரூ. 1—0—0. ராமகிருஷ்ணர் சரித்திரம் ரூ. 1–12–0. குருதேவர் வாக்கியம் அணா 0—8—0. திருக்கைலாயகிரி யாத்திரை அணா 0—12—0. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேச மொழிகள் ரூ. 2—4—0. திரு அருள் மொழி ரூ. 2—14—0.

அன்பு நிலய வெளியீடு : சிதம்பர கீதம் ரூ. 1—8—0. உயர்ந்த பதிப்பு ரூ. 2—8—0. தேவகானம் ரூ. 1—12—0. உயர்ந்த பதிப்பு ரூ 2—12—0. சிவஞான தீபம் ரூ. 2—4—0. வளையாபதி அகவல் அணா 0—12—0.

கலைமகள் வெளியீடு : கூட்டுக்கு வெளியே : வி. ஸ். காண்டேகர் ரூ. 1—4—0. கருகிய மொட்டு : வி. ஸ். காண்டேகர் ரூ, 3—8—0. நீர்க்குமிழி : F. H. பெயின் ரூ. 1—8—0. பார்வதி : 'சங்கரராம்' ரூ. 3—0—0. புனர் ஜன்மம் : கு. ப. ராஜகோபாலன் ரூ. 2—0—0. கலைமகளின் மற்ற நூல்களும்.

அல்லயன்ஸ் : புயல் ; ரவிந்த்ரநாத் டாகுர் ரூ. 4—0—0. உயர்ந்த பதிப்பு ரூ. 5—0—0. சிசுபாலனம் ராஜாஜி அணா 0—8—0. சரத் சந்திரர் கதைகள் சு. குருசாமி தொகுத்துத் தமிழாக்கியது.

தமிழ்ப் பண்ணை : சுதந்திர முழக்கம் ; வெ. சாமிநாத சர்மா ரூ. 1—12—0. தமிழ்ப் பெரியார் ; வ. ரா., ரூ. 2—8—0. குழந்தை யுள்ளம் : அறிஞர் பலர் எழுதியது அணா 0—8—0. அன்ன விசாரம் : தெ. ச. சொக்கலிங்கம் அணா 0—12—0. திரையும் வாழ்வும் ; ஏ. கே. செட்டியார் ரூ. 1—0—0. பணப் பெருக்கம் : தினமணி கூட்டாசிரியர் வேங்கடராஜுலு அணா 0—8—0.

நவயுகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், புது மலர்ச்சி நூற்பதிப்புக் கழகம், புதுமைப் பதிப்பகம், ஜோதி நிலயம் இவர்களின் நூல்களும் கிடைக்கும்.

சக்தி காரியாலயம்

261, சைனபசார் :: வடக்கு வெளி வீதி
சென்னை மதுரை

அரிய சம்பாஷணை

கி. சந்திரசேகரன்

மேல் நாட்டு அறிஞர்களில் மிகச் சிறந்தவரான டாக்டர் ஜான்ஸன் என்பவரைப் பற்றிய வரலாறு ஒன்றுண்டு. ஒரு சமயம் தம்மிடம் விடாமல் பேசிய ஒருவரைப் பார்த்து, டாக்டர் ஜான்ஸன் பின்வருமாறு சொன்னார்: "ஐயா, என்னையும் தங்களையும் விட்டால், எதைப்பற்றிச் சம்பாஷிப்பது என்று திண்டாடுவீர்கள் போலிருக்கிறதே! எனக்கோ என்னையும் தங்களையும் பற்றியே தங்களிடம் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது."

ஆம், சம்பாஷணை எவ்விதம் இருக்கக் கூடாது என்பதைப் பளிச்சென்று காட்டும் மொழிகளே இவை. மனம் நாடும் உண்மைகளை அலசிப் பார்ப்பதை விட்டு, மனிதர்களையே விஷயமாகக் கொண்டால், சம்பாஷணை சலிப்பைத்தான் ஊட்டும். ஊர் வம்புகளைக் கொட்டி அளப்பது சம்பாஷணை ஆகாது. பேசியவர்கள் மறைந்தாலும், பேச்சின் விஷயங்கள் மறையாதிருப்பதே அரிய சம்பாஷணையின் அறிகுறியாகும்.

அதிலும், இலக்கியம் கசியும் கருத்துக்களை, பண்பாடு படைத்தவர்களால் ரசிக்காமலிருப்பது கடினம். மணி ஓசையின் ஒலி

பேச்சென்றால், எல்லாம் பேச்சாகி விடுமா? மணி ஓசை, நின்ற பின்னும் காதை விட்டகலாதது போல், மனத்தைச் சுற்றிக் கொண்டேயிருக்கும் சம்பாஷணைகளுமுண்டு. அவையே செவிக்கும் மனதுக்கும் விருந்தாகும். அத்தகைய பேச்சொன்று இங்கே விவரிக்கப் படுகிறது.

நீண்ட நாழிகை நம் காதில் கேட்கிறதல்லவா? அதேபோல்தான், ஓர் அழகிய அபிப்பிராயத்தின் உள்ளடங்கிய தொனி விசேஷமும், வெகு காலம் நம்மனத்தைத் தன் பால் வசீகரித்து விடும். சிறு சம்பாஷணையும் சலிப்பில்லாத பெரும் வரமாக ஆவது, அப்பொழுதுதான்.

வாக்கின் சாதுர்யமும், ஒன்றிலிருந்து மற்றொன்றில் சுலபமாகப் பாயும் புத்தி வன்மையும், சம்பாஷணையை மேம்படுத்துவதில் ஐயமில்லை. ஆனால், உலகிலுள்ள யாவருக்கும் கிட்டக் கூடிய குணங்கள் அல்ல அவை. ஒன்று மட்டும் நிச்சயம்; அத்தகைய குணங்கள் நிரம்பிக் கிடக்கா விட்டாலும், நகைச்சுவையும், ஆழ்ந்த கருத்தும், அளவில்லாத இதயப் பண்பும் கொண்ட அரிய சம்பாஷணையைக் கேட்டவர்கள், அதைப் போஷிக்காமல் இருப்பது சிரமந்தான். அம்மாதிரி அனுபவம் ஒருவருக்கு ஏற்பட்டால், அதைக் குறிப்பில் வைப்பதுதான் உசிதம்.

நான் குறிக்கும் அரிய சம்பாஷணையைச் செய்தவர் டி. கே. சி. யாவர். ஒரு நாள் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு மேல் எங்களைப் பார்க்க வந்தார். இன்னும் உணவு கொள்ளவில்லை. எனினும், வயிற்றுக்கு அளிக்கும் உணவைவிட மனதுக்கு உவந்த அரிய கருத்துக்களை உண்டு களிக்கத் தொடங்கி விட்

டார். முக்கியமாக, கம்ப ராமாயணத்தைப் பற்றிப் பேச்சுத் தொடங்கிற்று. அதைப் பற்றி டி. கே. சி. பேசாமல், பின் யார் பேசுவது? ஆனால், கம்பரைப் பற்றி அவர் பேசவில்லை; கம்பர் பாட்டை எப்படி அநுபவிப்பது என்பதைப் பற்றிச் சொன்னார். கம்பர் பாட்டை மெதுவாக ருசித்து வாசித்து விட்டு, வேண்டிய அளவு மட்டும் அவைகளுக்கு அர்த்தம் சொல்வதே நியாயம் என்பது அவர் துணிவு. ஆகையால், உபன்னியாசம் செய்வோர், தங்களுடைய சொந்தக் கற்பனைகளையும் பேச்சு வன்மையையும் பந்தலாகப் பரப்பும் முறையை மெச்சுவதற் கில்லை என்பதை அவர் எப்படி எடுத்துக் காட்டுகிறார், பார்ப்போம்: "பாட்டை நன்றாக, ஒருமுறை, இரண்டு முறை, இல்லை, மூன்று முறையும் பாடி அனுபவித்து விட்டால், கேட்பவர் உள்ளமும் பாட்டில் தன்னாலே ஊன்றி விடும். அப்படிச் செய்யாமல், கம்பரை எங்கேயோ தூரமாக ஒதுக்கி வைத்து விட்டு, நம்முடைய சொல் திறமையையா காட்டுவது? சபையோருக்குப் பாட்டைப்பற்றி என்ன விளங்கும்? அப்படிச் செய்வது, எப்படியிருக்கும்? கனம் முகம்மது உஸ்மான் சாகிப் அவர்கள், எதிரேயுள்ளவர்களுக்கு என்னை அறிமுகப் படுத்துவதற்காக, எழுந்து, என் முன்னே வந்து நின்று கொள்வது போல்தான் இருக்கும்."

நகைச் சுவையை டி. கே. சி. கையாண்ட முறையும், மேலும் அவர் சொன்ன கருத்தின் உண்மையை நினைக்கநினைக்க உள்ளத்தை ஆட்கொண்ட விதமும், எங்கள் மனத்தை விட்டகலாது. பிறருடன் சேர்ந்து அதை அனுபவிப்பது ஒன்றினால் மட்டுமே, எங்கள் மகிழ்ச்சியை முழுவதும் நாங்கள் உணர முடியும்.

கம்பர் பாட்டிலிருந்து கவியை வாசித்தனுபவிக்கும் திறமையைப் பற்றிய சம்பாஷணை எழுந்தது. கவியைக் கண்டவுடன் வேண்டிய அளவு அதில் உற்சாகம் பெற,என் எல்லோருக்கும் முடிவதில்லை? பெரிய கேள்வி தான். அதற்கெல்லாம் எவ்வளவோ பண்பாடும், பழக்கமும் வேண்டாமா? அறிவு, இதயம் இவை பற்றும் விஷயங்களிலேயே, என்றைக்கும் இந்தத் தவிப்புத்தான் என்பதை, டி. கே. சி. உணர்த்துகிறார். அவர் காட்டும் உவமை ஒன்றினால் மட்டுமே நாமும் அதை நம்ப முடிகிறது: "ஒரு பெரிய 'கிரிக்கெட்' ஆட்டத்தில் வெற்றி அடைந்து, முழுத் திறமையையும் காட்டிய ஒருவனை, திரள் திரளாகக் கூடிய ஜனங்கள் எப்படியெல்லாம் ஆரவாரம் செய்து, தோள் மேலெல்லாம் தூக்கிக் கொள்கிறார்கள்! நாம் அதைப் பார்க்கிறோம். ஆனால், அழகிய பாட்டைப் பாடிய கவிஞனை அவ்வளவாக எல்லோராலும் கொண்டாட முடிவதில்லை. என்? உடலுக்கும், உள்ளேயுள்ள ஆன்மாவுக்கும் இருப்பதைப்போன்ற வித்தியாசமேதான் அதன் காரணம். வெளியான திறமையையும், உள்ளே பார்த்துணர வேண்டிய உண்மையையும் எல்லோராலும் ஒரேமாதிரி அனுபவிக்க முடியாது."

பந்தாட்டத்தை ஞாபகப்படுத்திய உவமை சுலபமானதாக நமக்குத் தோன்றும். ஆனால், பெரிய கருத்தை, நம் பழக்கத்தில் சதா உள்ள ஓர் உணர்ச்சியைக்

M211,N36:5
N43:9

காட்டி எளிதாய் விளக்குவதும் புதியமுறை என்பதில் சந்தேக மில்லை. மூளைக்குச் சிறிது வேலை யைத் தந்தபோதிலும், சம்பாஷ ணையை மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வருவதற்குச் சரியான வழிகளில் ஒன்று இது.

கவியை அனுபவிப்பதில், உள்ளடங்கிய பொருள்தான் அடுத்ததாக நாங்கள் பேசிய விஷயம். அதாவது, கவிஞன் தன் கருத்துக்களின் உட்புகுந்து ஆனந்திக்கையில், எவ்விதமெல் லாமோ வார்த்தைகளை உப யோகிக்கிறான். அவனுடைய இதய பாவத்தை அல்லவா நாம் நுகரவேண்டும்? அவனுக்குத் தோன்றுவதெல்லாம் நமக்கு ஏன் தோன்றவில்லை? ஆகையால், அவனிடம் உள்ள உணர்ச்சிப் பெருக்கு உண்மையாகாது என்று சொல்லுவது முறையா? இல்லை. டி. கே. சி. எங்கள் கண்ணெதிரே ஒரு படத்தை வரைந்து விட்டார்: "நம் வீட் டில் குழந்தை கற்கண்டுக் கட்டி யைக் கையில் எடுத்துக்கொண்டு விட்டால், என்ன விதமெல்லாம் கும்மாளம் அடித்துக் கூத்தாடு கிறது! சொல்லமுடியாத அதன் சந்தோஷ உணர்ச்சியை, ஒவ் வோர் அர்த்தமற்ற பேச்சிலும் கூட நாம் காணவில்லையா? ஆனால், அர்த்த மிருக்கத்தான் செய்கிறது என்று, ஊன்றிக் கவனித்தால் நமக்கே புரிகிறது. அதேபோல்தான் ஒரு நல்ல அபிப்பிராயத்தைக் கண்டவுடன், கவியின் சிருஷ்டியில் கவிஞ னுக்கு ஏற்படும் எக்களிப்பும் ஆனந்தமும் அவனுடைய பாட் டில் பிரதிபலிக்காம லிருப்பது கூடாத காரியம். அதை நாம் கவனிக்க வேண்டும். பாட்டில் பாவம் அல்லவா முக்கியம்?"

அரை மணிக்குமேல் சம்பா ஷணை நடக்கவில்லை. ஆனால், இன்று, பல மாதங்களாகியும், அறுசுவை பெற்ற விருந்த தாகவே, அது என் மனதுக்கு விளங்குகிறது. இம்மாதிரி சம்பா ஷணை, நம்முடன் கலந்துவிடு கிறது; நம் உள்ளத்தோடு உள்ளமாய் ஒன்றியும் விடுகிறது, சீக்கிரத்தில். பேசியவர் யாராக இருந்தால் என்ன? பேசியது ஒன்றே போதுமல்லவா?

★

88838

மதமாற்றம் ஆகுமா?

ஒரு கிறிஸ்தவன், ஹிந்து ஆகவேண்டுமென்று நான் விரும்பு கிறேனா? ஒரு ஹிந்து அல்லது பௌத்தன், கிறிஸ்தவனாக வேண்டு மென்றுதான் விரும்புகிறேனா? ஒருபோதும் [illegible]யன் விதையைத் தரையிலே ஊன்றுகிறோம்; மண்ணும் காற்றும் நீரும் அதைச் சூழ்கின்றன. அந்த விதை, மண்ணோ காற்றோ அல்லது நீரோ ஆக மாறிவிடுகிறதா? இல்லை. அது ஒரு செடிதான் ஆகிறது; தனக் கேற்பட்ட சுய தர்மப்படி வளர்ந்து, காற்றையும் மண்ணையும் நீரையும் உட்கொண்டு ஜீரணித்துச் செடியின் சத்தாக மாற்றிச் செடியாகவே வளர் கிறது. சமய விஷயமும் இதுபோலவே யாகும். ஒரு கிருஸ்துவன், ஒரு பௌத்தனோ அல்லது ஹிந்துவோ ஆகக்கூடாது; ஒரு ஹிந்துவும், ஒரு பௌத்தனோ கிறிஸ்தவனோ ஆகக்கூடாது. ஆனால், ஒவ்வொருவனும் மற்றவர்களின் உட்கருத்தை உணர்ந்து ஜீரணித்துக்கொள்ள வேண்டி யதுதான். என்றாலும், தன் தனித் தன்மையையும் சிறப்பையும், தன் வளர்ச்சிக்குரிய சுயதர்மப்படி பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்.



தண்ட நீதி

ப்ரௌட்

ஒரு குடியானவனின் வாத்துப் பண்ணையில், குள்ள நரிகளின் தொந்தரவு சகிக்க முடியவில்லை. கடைசியாக, அந்தக் குடியானவன், ஒரு குள்ள நரியை, பொறி வைத்துப் பிடித்து விட்டான்.

நரி தப்புவதற்காக, பிரம்மப் பிரயத்தனம் செய்வதைக் கண்ட குடியானவன், "அட துஷ்டா! என் வாத்துக்களையா திருடினாய்? அதற்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன், பொறு. அதோ அந்த மரத்திலே உன்னைத் தூக்கில் இட்டுத் தொங்க விடுகிறேன். உன் அண்ணன் தம்பிகள் வந்து பார்க்கட்டும்; இனி மேல் திருடினால் என்ன நடக்கும் என்று அவைகள் தெரிந்து கொள்ளட்டும்" என்று சொன்னான்.

தான் பயமுறுத்தியபடியே செய்வதற்கர்க, தூக்குப் போட அவசியமான கயிற்றையும், அவன் திரிக்கத் தொடங்கி விட்டான்.

இதற்கு முன் எத்தனையோ தடவை கஷ்டமான சமயங்களில், தன் வாய்த் திறமையால் தப்பித்து அனுபவ முடையது அந்த நரி. இந்தத் தடவையும் அது பயன் படுகிறதா என்று பார்க்க, நரி எண்ணியது.

"என் அண்ணன் தம்பிகளை மிரட்டுவதற்காகவா, என்னை நீ தூக்கில் போடப் போகிறாய்? பேஷ்! சத்தியமாய்ச் சொல்லுகிறேன்: இதைக் கண்டு அவைகள், துளிக்கூடச் சட்டை செய்ய மாட்டா. அவைகள் வந்து என்னைப் பார்க்கத் தான் பார்க்கும். ஆனால், மீண்டும் வீடு திரும்புவதற்குள், உன் பொருளையே விருந்துண்டு, கண்டிப்பாய் உனக்கு நஷ்டம் செய்து விட்டுத்தான் போகும்!" என்றது நரி.

"அப்படியானால், அவைகளுக்குப் பாடமாக உன்னைத் தூக்கி விடவில்லை. உனக்காகவே உன்னைத் தூக்கில் போடுகிறேன்- நீ ஓர் அயோக்கியன், துஷ்டன் என்பதற்காக" என்றான் குடியானவன்.

குற்றவாளியை, மனநோய் பிடித்தவனாய்க் கருதி, சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பது ஒரு புதிய கொள்கை. அது கூடாது, அவனைத் தண்டிக்கத்தான் வேண்டுமென்பது பழங்கொள்கை. அந்தத் தண்ட நீதியை நிலைநாட்டும் இந்தக் கதையை **ஜேம்ஸ் ஆந்தனி பிரௌட்** என்பவர் எழுதியுள்ளார். கொள்கை நமக்கு உடன்பாடில்லாமலிருக்கலாம்; ஆயினும், கதை ரஸமாயில்லையா?

"நான் என்ன பண்ணுவேன்? இயற்கையோ, தெய்வமோ என்னை இப்படிப் படைத்து விட்டதே! அது படைத்தபடி தான் நான் இருக்கிறேன். என்னை நானேயா படைத்துக் கொண்டேன்?" என்று கேட்டது நரி.

"நீ ஏன் என் வாத்தைத் திருடினுய்?" என்றுன் குடியானவன்.

"பின்னே, இயற்கை ஏன் என்னை வாத்தின் மேல் பிரியப் படும்படி படைத்திருக்கிறது? நீயும் வாழ்; என்னையும் வாழ விடு. என் பங்கை என்னிடம் கொடுத்து விடு; உன் பங்கை நான் தொடவில்லை. பூராவையும் நீயே வைத்துக் கொண்டு விட்டாயே" என்றது நரி.

"நேர்த்தியாய்த்தான் பேசுகிருய். உன் வாதம் எனக்குப் புரியவில்லை. ஆனல், நீ ஒரு திருடன் என்று மட்டில் எனக்கு நன்ருய்ப் புரிகிறது. ஆகையால், தூக்குத் தண்டனைதான் உனக்குத் தகுதி" என்று பதிலளித்தான் குடியானவன்.

"இவன் பலே மூளைக்காரனுயிருக்கிருன்; வாதத்தினுல் இவனை மடக்க முடியாது. இவனுடைய இருதயமாவது இளகினதா என்று பார்க்கலாம்" என எண்ணியது நரி.

அதன் மேல் நரி சொல்லியதாவது: "சகோதர ஜீவன் ஒன்றின் உயிரைப் பறிக்கிருயே- இது விசித்திர மல்லவா? உயிர் என்பது சாமான்ய விஷய மல்ல. இதனுல் என்ன விளையுமோ? நான் அயோக்கியன் என்கிருய்; நானே இல்லை என்கிறேன். எது உண்மையாயிருந்தாலும் சரிதான்; நீ என்னைத் தூக்கிலிடக் கூடாது. ஏனென்றுல், நான் அயோக்கியன் அல்லவானுல், என்னைத் தூக்கிலிடுவது தகாது; நான் அயோக்கியன்தான் என்ருல், நான் பச்சாதாபப்பட்டு மனம் திருந்த, எனக்குத் தவணை கொடுக்க வேண்டும்."

இப்படிச் சொல்லிய நரி, "ஆள் மாட்டிக் கொண்டான்; இதற்கு என்ன பதில் சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிருன், பார்க்கிறேன்" என்று மனப்பால் குடித்தது.

"இருக்கட்டும்; உன்னை நான் என்னதான் செய்ய வேண்டு மென்கிருய்? சொல்" என்றுன் குடியானவன்.

"என்னை நீ விட்டுவிட வேண்டும்; மாதா மாதம் ஆட்டுக் குட்டியோ, வாத்தோ, ஏதேனும் ஒன்றிரண்டு எனக்குக் கொடுத்து வர வேண்டும்—இது தான் என் அபிப்பிராயம். நீ இப்படிச் செய்து வந்தால், நான் திருடாமலே வாழ்வேன். ஆனல், ஒரு வேளை என்னைப் பற்றி என்னை விட உனக்கே அதிக நன்ருய்த் தெரிந்திருக்கவும் கூடும். நான் அயோக்கியனுகவே இருக்கலாம்; படிப்பில்லாததே அதன் காரணமாயிருக்கலாம். அப்படியானுல், நீ என்னைச் சிறைப்படுத்தி, பராமரித்து, கல்வி போதிக்க வேண்டும். அவ்விதம் செய்தால், கடைசியிலே நான் ஒரு நாயாக மாறிவிடக்கூடும். இல்லையென்று யார் சொல்ல முடியும்?" என்றது நரி.

"ரெம்ப அழகு!" என்று நகைத்த குடியானவன், "எங்களிடம் ஏற்கனவே போதிய நாய்கள் இருக்கின்றன; அளவுக்கு மேலேயே இருக்கின்றன. நீ

தேவையில்லை. அதெல்லாம் சரிப்படாது, ஸ்ரீமான் நரியாரே! உம்முடைய நியாய சாஸ்திரத்தையெல்லாம் மூட்டை கட்டி ஒரு மூலையிலே போடும். அந்த நியாய சாஸ்திரம் எப்படி இருந்தாலும் சரிதான்: உம்மை நான் பிடித்து விட்டேன்; நீர் அதோ அந்த மரத்திலே தொங்கித்தான் தீர வேண்டும். நீர் போனால், உலகத்திலே ஒரு துஷ்டன் குறைவான்'' என்றான்.

''இது சுத்தக் குரோதம் அல்லவா? வஞ்சமல்லவா? கிறிஸ்து தர்மத்துக்கே விரோதமாயிற்றே!'' என்று நரி பிரலாபித்தது.

''இல்லை, நண்பரே!'' என்ற குடியானவன், ''நான் உம்மீது குரோதம் கொள்ளவில்லை; உம்மைப் பழி வாங்கவும் எண்ணவில்லை. ஆனால், நீரும் நானும் சேர்ந்து வாழ முடியாமலிருக்கிறது. உம்மைவிட நானே அதிக முக்கியம் என்று நான் எண்ணுகிறேன். என் கத்தரித் தோட்டத்தில், நெருஞ்சியும் பூடுகளும் முளைத்தால், 'தயவு செய்து கத்தரிச் செடிகளாய் மாறுங்களேன்' என்று அவைகளை நான் மன்றாடிக் கொண்டிருப்பதில்லை; ஒரேயடியாகக் கல்லி யெறிந்து விடுகிறேன், அவ்வளவுதான். அவைகள் மீது எனக்குக் குரோதம் கிடையாது. ஆனால், அவை என் கத்தரித் தோட்டத்தில் முளைத்து எனக்கு இடையூறு விளைக்கலாகாது, அவைகளைத் தொலைத்து விட வேண்டும் என்றே என் மனது துக்குப் படுகிறது. ஆகையால், என்னரிய நண்பரே! உம்மைப் பற்றி எனக்கே வருத்தமாய்த்தான் இருக்கிறது. இருந்தாலும் என்ன செய்வது? நீர் அங்கே தொங்கித்தான் தீர வேண்டும்'' என்றான்.

★

கடவுளைக் கண்டீர்களா?

சுவாமி விவேகானந்தருக்குச் சிறுவயதிலே நரேந்திரன் என்று பெயர். வாலிப நரேந்திரர், பல துறவிகளையும் ஞானிகளையும் வாதுக்கிழுப்பார். ''கடவுளை நீங்கள் கண்டீர்களா?'' என்று அவர் எவரையும் கேட்பார். மகரிஷி தேவேந்திரநாத தாகூரைக்கூட, இதே கேள்வியை அவர் கேட்டார். திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. தட்சணேசுவரத்தில் இருந்த சுவாமி ராமகிருஷ்ணரிடம், நரேந்திரர் சென்றார். அவரிடமும் இந்தக் கேள்விதான்: ''கடவுளைக் கண்டீர்களா?'' ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், மற்றவர்களைப்போல் திணறவில்லை; தயங்கவில்லை; சாக்குப் போக்குகள் கூறவுமில்லை. ''கண்டேன்; நீயும் காண்பதற்கு உதவி புரிவேன்'' என்று அன்போடு அருளினார். நரேந்திரர் வியப்புற்றார். பரமஹம்ஸரின் சிஷ்யருமானார். சுவாமி விவேகானந்தர் என்ற பெயரும் பெற்றார்.

மேதையின் உரிமை

யாரையு மறியாத அன்னியநாடான அமெரிக்காவுக்குச் சுவாமி விவேகானந்தர் போய்ச் சேர்ந்தார். அங்கே ஹார்வர்டு சர்வ கலாசாலையில் கிரீக் புரொபஸரான ஜே. எச். ரைட் என்பவர், சுவாமி சர்வ மத மகாநாட்டுக்கு இந்துமதத்தின் பிரதிநிதியாய் விஜயம் செய்ய வேண்டுமென்று யோசனை சொன்னார். ''அதெப்படி முடியும்? என்னிடம் அதற்கு வேண்டிய அத்தாட்சிப் பத்திரங்கள் எவையுமில்லையே'' என்றெல்லாம் தயங்கினார் சுவாமிகள். சுவாமிகளுடைய மேதையை அறிந்த அந்தப் புரொபஸர், ''சுவாமிகளே, தங்களைக்கூட, அத்தாட்சிப் பத்திரங்கள் கேட்பதாவது! கேட்டால், அது 'ஏ சூரியனே, நீ பிரகாசிப்பதற்கு உனக்கு என்ன உரிமை உண்டு?' என்று கேட்பதைப்போல் அல்லவா இருக்கும்'' என்றார்.

அந்த மோதிரம்

சு. குருசாமி

"விடுங்கள்! நீங்கள் தான். வேறு யார் என் கண்களை மூடுவார்கள்?" என்றாள் சுசீலா.

ஆனால், அவளுடைய கண்களை விசுவநாதன் விடுவதாயில்லை. ஆகையால், சுசீலா பலாத்காரமாகத் தன்னை அவனது பிடியினின்றும் விடுவித்துக்கொண்டு, அவன் கன்னத்தில் ஒரு சிறு செல்ல அடி கொடுத்தாள்.

"கனவான்களே! காலம் கெட்டுவிட்டது. நாம் இந்தப் பெண்களை, என்னவோ ஏதோ என்று நினைத்தோம். பாவம்! ஆடு மாடுகள் போல் சுதந்திரமின்றி இருக்கிறார்களே என்று எண்ணி, 'பெண்கள் விடுதலை' 'பெண்களுக்கு உரிமை' என்று என்னவெல்லாமோ பேசினோம். அதன் பலனைப் பார்த்தீர்களா? புருஷர்களை மனைவிகள் கன்னத்திலடிக்கும் காலமும் வந்து விட்டது! கனவான்களே! இன்னும் ஏன் தூக்கம்? எழுமின்! புருஷர்களின் உரிமைகளைக் காக்க விரைந்து விழிமின்!" என்று விசுவநாதன் ஒரு பிரசங்கம் ஆரம்பித்துவிட்டான்.

மாசற்ற மனத்திலே களங்கத்தை உண்டாக்குகிறது அந்த மோதிரம். ஆம், அதிலே என்ன ஆச்சரியம்? அது ஏன் அவன் விரலில் வந்தது? எப்படி வந்தது? பொறுமை யிழக்க, சந்தேகங் கொள்ள, அதைவிட வேறு காரணமும் வேண்டுமா? சின்னக் கதைதான். ஆனால், உணர்ச்சிகளை எப்படிக் கிளர்கிறது!

"ஐயோ! ஏன் இப்படி என் மானத்தைக் கெடுக்கிறீர்கள்? சத்தம் போடாதீர்கள். யாராவது வந்தால், என்ன நினைப்பார்கள்?" என்று சுசீலா, தன் மெல்லிய கரத்தால் விசுவநாதனின் வாயைப் பொத்தினாள்.

"அண்ணா! பிரசங்கம் நன்றாயிருந்தது" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே, ராமலிங்கம் உள்ளே வந்தான்.

சுசீலா சட்டென்று கணவனை விட்டு விலகித் தலை குனிந்து நின்றாள். அவளுடைய முகம் சிவந்தது.

"உன் கலியாணத்திலாவது நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும், தம்பி. படித்த பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொண்டு நான் படும் பாடு போதும்!"

சுசீலா முன்தானை முனையால் சிரிப்பை மறைத்துக் கொண்டு, ஓடியே போய்விட்டாள்.

"அண்ணா! மீனாட்சி சினிமாவில் இன்று 'வசந்தசேனா' பேசும் படக் காட்சி வந்திருக்கிறது. போகலாமா?"

"இன்று எனக்கு வேலை இருக்கிறது. நீ வேண்டுமென்றால் அம்மாளையும் சுசீலாவையும் அழைத்துக் கொண்டு போய் விட்டு வா."

"அப்படியானால், எல்லோரும் நாளைக்குப் போகலாம், அண்ணா."

"நானே என் செளகரியம் எப்படி யிருக்கிறதோ. ரெவின்யூ போர்டு மெம்பர்கள் வந்திருக்கிறார்கள். ஆபீஸ் மேற் பார்வை நடக்கிறது. ஆகையால், நீங்கள் போய்விட்டு வாருங்கள்."

"அப்புறம் நீங்கள்?"

"எனக்கென்ன? நான் என்றைக்காவது பார்த்துக் கொள்வேன்."

2

ஒருநாள் மாலே மேஜைக்கருகே நாற்காலியில் உட்கார்ந்து, விசுவநாதன், ஏதோ ஆபீஸ் காகிதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். அரைப் பரிட்சை மார்க்குகள் குறிக்கப்பட்ட 'ப்ராக்ரஸ்' ரிப்போர்ட்டை விசுவநாதனிடத்தில் நீட்டி, "அண்ணு இதில் கையெழுத்து" என்ருன் ராமலிங்கம்.

அதைக் கையில் வாங்கும் பொழுது, தற்செயலாக விசுவநாதனுடைய பார்வை, தம்பியின் விரல்கள்மீது ஜொலித்த தன் மனைவியின் மோதிரத்தின் மேல் விழுந்தது. அங்கே அதைக் கண்டதும், அவன் திடுக்கிட்டான். அவனுடைய மனம் என்னவெல்லாமோ யோசிக்க ஆரம்பித்தது. தன்னுடைய கண்களேயே அவனல் நம்ப முடியவில்லே. அப்படியே நாற்காலியில் சாய்ந்துவிட்டான்.

விசுவநாதன் இவ்வாறு பராமுகமா யிருப்பதைக் கண்டதும், "அண்ணு! கையெழுத்து" என்று ஞாபகமூட்டினன் ராமலிங்கம்.

"இரண்டு பாடங்களில் ஒரிலக்க மார்க்கு வாங்கியிருக்கிருய்; உனக்குக் கையெழுத்து வேறேயா போட்டவேண்டும்?" என்று எரிந்துவிழுந்தான் விசுவநாதன்.

ராமலிங்கம் திகிலடைந்தான். "அண்ணு! எனக்குக் கணக்கு வராது என்பதுதான் தங்களுக்குத் தெரியுமே?"

"வராது! ஒழுங்காய்ப் படித்தால் ஏனடா வராது?"

"இதற்காகத்தான் நான் முன்னமேயே 'பிரைவேட்' வைக்க வேண்டுமென்று சொன்னேன்."

"பள்ளிக்கூடத்துக்கு மாதம் ஐந்தரை ரூபாய் அழுவது போதாதென்று, இனிமேல் 'பிரைவேட்'டுக்கு வேறே மாதம் பத்து ரூபாய் கொடுக்கவேண்டுமாம்! ஏனடா மடையா? ரூபாய் என்ன கொட்டிக் கிடக்கிறதென்று நினைத்தாயோ?"

ராமலிங்கம் பிரமித்து விட்டான். சகோதரனின் நாவினின்றும் இம்மாதிரி கடுஞ்சொற்களே அவன் ஒருபோதுங் கேட்டதேயில்லே. "ஓர் எட்டணுவாவது கொடுங்கள், அண்ணு! இரண்டு குயர் நோட்டு ஒன்று வாங்கி, இனிமேல் தினந்தோறும் ஒழுங்காக வீட்டில் கணக்குப் போடுகிறேன்."

"ஒரு பைசாக்கூடக் கிடையாது. நீ படித்து மண்ணேப் போட்டாய்" என்று சொல்லிப் 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'டைக் கிழித்து, ராமலிங்கத்தின் மூஞ்சியில் எறிந்தான்.

ராமலிங்கம் சென்றவுடன், ஆபீஸ்பேப்பர்களில் தன் கவனத்தைச் செலுத்த விசுவநாதன் யத்தனித்தான். ஆனல், அவனுடைய மனம் அவைகளில் செல்லவில்லே. அவனுடைய உள்ளத்

தில் ஒரு பெரும்புயல் கிளம்பியது போல் தோன்றியது. மனங் குழம்பியது. மேஜையின் மீது இருந்த காகிதங்களை அப்படியே போட்டுவிட்டுப் போய்ப் படுத்துக் கொண்டான். பலவிதமான எண்ணங்கள் அவனுடைய மனதில் தோன்றின. "ஆஹா! என்ன மதியீனம் எனக்கு! அண்ணன் தங்கைமாதிரி விளையாடுகிறார்கள், சகோதர வாஞ்சை என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஐயோ! ஏமாந்தேன். அவளுக்கு அளவுமீறின சுதந்திரங் கொடுத்துவிட்டேன். பெண்புத்தி ஸ்திரமற்றது. தேனில் நஞ்சைக் கலந்துவிட்டான் பாவி! இல்லையானால் அவளது மோதிரம், அதுவும் செய்துவந்த இரண்டு தினங்களுக்குள், இவனுடைய கைக்கு எப்படி வந்தது? ஐயோ! இப்பொழுதல்லவா எல்லாம் விளங்குகிறது! எத்தகைய மூடன் நான்!" அவனது மனக் கண்ணின் முன்னால் சில தினங்களுக்கு முன்னே நடந்த ஒரு சம்பவம் தோன்றியது. ஒரு நாள் அவன் மாடியில் படுத்துத் தன் உத்தியோகத்தைப் பற்றி மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தான். கீழே ஹாலில் சுசீலா சாதம் பரிமாறினாள்; ராமலிங்கம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். திடீரெனச் சாதம் போதுமென்று, அவன் எழுந்திருக்க எத்தனித்தான். ஆனால், சுசீலா விடவில்லை. "தம்பீ! அதெல்லாம் முடியாது. இவ்வளவு சாதத்தையும் வைத்துவிட்டுப் போகக்கூடாது. சாப்பிட்டுவிடு" என்றாள்.

"என்னால் சாப்பிட முடியவில்லை, மன்னி. சாயந்திரம், ஒரு நண்பனின் வீட்டில் காப்பி சாப்பிட்டேன்" என்றான் ராமலிங்கம்.

"வீணே பொய் சொல்லுகிறாய். காப்பி ஹோட்டலில்தான் ஏதேதோ சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறாய். வீட்டில் காப்பி இருக்கும்போது, ஹோட்டல்களுக்கெல்லாம் ஏன் போகிறாய்? உன் அண்ணா வரட்டும் சொல்லுகிறேன்." விசுவநாதன் மாடியில் படுத்திருப்பது சுசீலாவுக்குத் தெரியாது.

"இல்லை, மன்னி! நிஜமாய்ச் சொல்லுகிறேன்."

"சரி, பரவாயில்லை; பால் விடுகிறேன், சாப்பிட்டுவிடு."

"இனிமேல் ஒரு பிடி சாதங்கூட என்னால் சாப்பிட முடியாது" என்று ராமலிங்கம் எழுந்தான்.

"முடியவே முடியாது. சாப்பிட்டால் ஒழிய, உன்னை விடமாட்டேன்" என்று சுசீலா வழியை மறித்துக்கொண்டு வாசலில் நின்றாள்.

"நான் கீழே குனிந்து போவேன்" என்றான் ராமலிங்கம்.

"அந்தத் தைரியத்தைத் தானே பார்க்கப் போகிறேன்."

"மன்னி! விட்டு விடு."

"முடியாது" என்று, 'கலகல' என நகைத்தாள் சுசீலா. அந்த மோஹனச் சிரிப்பின் ஒலியைக் கேட்டுக்கொண்டே, படுக்கையினின்றும் எழுந்து, விசுவநாதன் கீழே இறங்கி வந்தான். அந்தச் சத்தத்தைக் கேட்டதும், சுசீலா கலவரம் அடைந்தவள்போல் சட்டென்று திரும்பினாள். விசுவநாதன் மாடியி லிருந்திருப்பான் என்று அவள் நினைக்கவே இல்லை. "இவ்வளவு நேரமும் நீங்கள் மாடியில்

தானே இருந்தீர்கள்? இனிமேல் நீங்கள் இல்லாமல், தம்பிக்கு நான் சாதம் போடவே மாட்டேன்" என்று கால்களை உதறிக் கொண்டு, சுசீலா சமையலறைக்குள் சென்றாள்.

'உள்ளத்தில் களங்கமில்லாவிட்டால், தன்னைப் பார்த்ததும் அவள் என் அன்று அப்படித் திடீரென விலக வேண்டும்' என்று விசுவநாதன் இப்பொழுது நினைக்கலானான். "ஆஹா! இந்தப் புத்தி அப்பொழுதே எனக்கு வரவில்லையே!" என்று ஏங்கினான்.

அவனுடைய ஏக்கத்தைச் சகிக்க முடியாதவன்போல், கதிரவன் மேற்குத் திசையில் மறைந்தான். பலவிதமான கூச்சல்களுடன், கூடுகளை நாடிப் பறந்து செல்லும் காக்கை, குருவி, கிளி, மைனா முதலிய பறவைகளின் சத்தம் விசுவநாதனின் காதில் விழுந்தது. அவைகளில் எத்தனை பட்சிகள் தங்கள் பேடுகளை நாடிச் செல்கின்றனவோ, எத்தனை தங்கள் கணவர்களை நாடிச் செல்கின்றனவோ? தங்களுடைய கூடுகளை யடைந்ததும், அவைகள் எத்தனை இன்பத்துடன் தங்கள் காதல காதலிகளைச் சந்தித்துக் கூடிக் குலவுமோ என்று எண்ணினான் விசுவநாதன். அச்சமயம் 'க்ரீச், க்ரீச்' என்று ஒரு கெவுளி சத்தமிட்டது. அந்தப் பல்லி என்ன சொல்லுகிறது? 'அத்தகைய இன்பம் உனக்கு இனி ஏது?' என்றா கூறுகிறது? ஆமாம், அப்படித்தான்; வேறென்ன சொல்லும்?

விளக்கேற்றுவதற்காக, வேலைக்காரி மாடிக்கு வந்தாள். விசுவநாதனுடைய மனம் இப்பொழுது தனிமையையும், இருளையுமே நாடியது. ஆகையால், "விளக்கு அவசியமில்லை" என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு, மீண்டும் சிந்தனையிலாழ்ந்தான்.

இது இரண்டு நாட்களுக்கு முன்புதான் நடந்த சம்பவம். அன்று ஞாயிற்றுக் கிழமை. மாலையில் வழக்கமாக உலாவச் செல்லும் விசுவநாதன், அதை மறந்து, பெர்னாட் ஷாவின் நாடகம் ஒன்றைப் படித்துக் கொண்டே இருந்து விட்டான். அவனுடைய தாய், தோசைக்கு மாவரைத்துக்கொண்டிருந்தாள். ராமலிங்கம் அந்தச் சமயம் சுசீலாவிடம் சென்று, "மன்னி, இன்று ஒரு பாடங் கேட்க மாட்டாயா?" என்று வினவினான்.

"முடியாது, போ" என்றாள் சுசீலா.

"மன்னி! நாளைக்குத் தமிழ்ப் பரிட்சை, மன்னி! பாஸ் பண்ணாவிட்டால், அண்ணா திட்டுவாரே?"

"நன்றாய்த் திட்ட வேண்டும். நான் சொல்வதைத்தான் நீ ஒன்றுங் கேட்க மாட்டேன் என்கிறாயே!"

"என்ன கேட்கவில்லை, மன்னி?"

"அன்றைக்கு நான் சொல்லச் சொல்ல அத்தனை சாதத்தையும் வைத்துவிட்டுப் போனாயல்லவா?"

"இனிமேல் அப்படிச் செய்யவில்லை, மன்னி!"

"அதெல்லாம் முடியாது."

இந்தச் சமயம், விசுவநாதனுடைய தாயார், "ஏனடி சுசீலா, அவனோடு வம்பளந்து கொண்டிருக்கிறாயே; இங்கே வந்து என்னோடு இந்த மாவை ஆட்டேன்?" என்றாள்.

"ஆமாம், எனக்கு வேலை இருக்கிறது" என்று ராமலிங்கத்திடம் சொல்லிவிட்டு, அவள் போக யத்தனித்தாள்.

"மன்னி! மன்னி!" என்று கெஞ்சினன் ராமலிங்கம்.

"சரி, ஒரு பிழை விட்டால், ஐந்து குட்டுகள் குட்டுவேன். சம்மதமா?"

"சரி" என்று ஒப்புக் கொண்டான் ராமலிங்கம்.

"ஓங்கிக் குட்டுவேன். நான் குட்ட மாட்டேன் என்று நினைக்காதே."

"சரி."

சுசீலா புத்தகத்தைக் கையில் வாங்கிக் கொண்டாள். ராமலிங்கம், 'கங்கையிரு கரையுடையான், கணக்கிறந்த நாவாயான்' என்று குகப் படலத்தை ஆதியிலிருந்து அந்தம் வரை ஒப்புவித்துக் கொண்டே சென்றான். தான் படிப்பதையும் நிறுத்திவிட்டு, விசுவநாதன் இவற்றையெல்லாங் கவனித்துக் கொண்டிருந்தான்.

"ஒரு தப்பு" என்றாள் சுசீலா.

"இதை யெல்லாம் தப்பிதத்தோடு சேர்க்கக் கூடாது" என்றான் ராமலிங்கம்.

"அதெல்லாம் முடியாது. தப்பிதந்தான்."

"சரி, வச்சுக்கோ. ஐந்து குட்டுத்தானே குட்டுவே" என்று மேலே ஒப்புவித்துக் கொண்டு போனான்.

"இரண்டு" என்று எண்ணினாள் சுசீலா.

"நீ வேண்டுமென்றே என்னை ஏமாற்றுகிறாய், மன்னி" என்று ராமலிங்கம் எழுந்திருந்தான்.

"உன்னை நான் ஏன் ஏமாற்ற வேண்டும்? இதோ பார். 'இன் துணைவன், ராகவனுக் கிலக்குவற்கும் எனக்கும் மூத்தான்' என்றுதானே நீ சொன்னாய்? 'இளையவற்கும்' என்பதை விட்டு விட்டா யல்லவா?" என்று புத்தகத்தைக் காட்டினாள் சுசீலா.

இவ்விதம் அவன் குகப் படலத்தை முழுவதும் ஒப்புவித்து முடிப்பதற்குள், சுசீலா ஏழு தப்பிதங்கள் எண்ணினாள். "முப்பத்தைந்து குட்டுகள் ஆயிற்று. வா, பக்கத்தில்" என்று அவள் கையை ஓங்கிய பொழுது, விசுவநாதன் அறையினின்றும் வெளியே வந்து, "போடு; ஓங்கின கை மாறாமல், போட்டுவிடு" என்றான். சுசீலா பிரமித்துவிட்டது போல் தோன்றினாள். என்றாலும், நிலைமையைச் சமாளிப்பதற்காகவோ என்னவோ, ஒரு சிரிப்புச் சிரித்து, "நீங்களே பாருங்கள், ஒரு படலம் ஒப்புவிப்பதற்குள் எத்தனை பிழைகள் விடுவது?" என்று சொல்லி மழுப்பிவிட்டாள்.

அன்று விசுவநாதனின் மனப்பான்மை, 'எடுக்கவோ, கோக்கவோ' என்று சொல்லிய துரியோதனனுடைய பெருந்தன்மையை ஒத்திருந்தது. ஆனால், இன்றோ அவனுடைய மனம் என்ன பாடு பட்டது? "ஹா! பெண்மையே! துரோகமும் வஞ்சனையும் உன்னோடு கூடப் பிறந்தவைகள் போலும்! முள்ளில்லாத ரோஜா இல்லை. அதுபோல்...... ஆஹா! இவளை அருந்ததி யென்றல்லவா நினைத்திருந்தேன். மோசம் போனேனே! அடே! சொந்தச் சகோதரன் என்றும் பாராமல் நம்பிக்கைத் துரோகம் செய்த பாதகா! உன்னை என்ன

செய்கிறேன், பார்" என்று உள்ளங் கொதித்தான்.

இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. இம்மாதிரி பல வகையாக நினைத்துப் படுக்கையில் புரண்டு கொண்டே கிடந்தான் விசுவநாதன். எத்தனை சஞ்சலமுற்றவர்களுக்கும் கடைசியில் சாந்தியளிப்பது நித்திரா தேவி யல்லவா? தன்னுடைய மெல்லிய மலர்க்கரங்கள்ால் அவனுடைய கண்களை மூடினுள் துயிலன்னை.

3

ஆபீஸிலிருந்து வந்த விசுவநாதன் மாடிக்குச் சென்று தன் உடைகளைக் கழற்றிக்கொண்டிருந்தான். ஒரு தாம்பாளத்தில், தேன்குழல், சீடை முதலிய பட்சணங்களும், டம்ளரில் காப்பியும் வைத்து, சுசீலா காத்துக் கொண்டிருந்தாள். அவள் மீது விசுவநாதனுக்கு முன்ன மிருந்த அன்பில்லை. "சீக்கிரம் வந்து சாப்பிடுங்கள்" என்ருள் சுசீலா.

"அப்படி என்ன அவசரம்?" என்ருன் விசுவநாதன்.

"தம்பி பள்ளிக்கூடத்திலிருந்து வரும் நேரமாகி விட்டது. காப்பி எடுத்துக் கொடுக்கணும்."

"ஓஹோ!" என்று அவளுடைய முகத்தை எறிட்டுப் பார்த்தான் விசுவநாதன்.

பட்சணத் தாம்பளத்தைச் சரியாய் வைப்பவள் போல், அவள் தலை குனிந்தாள்.

ஆபீஸ் உடைகளை எல்லாம் கழற்றிவிட்டு, ஒரு வேஷ்டியும், ஷர்ட்டும் மட்டும் அணிந்து கொண்டு வந்து, அந்தப் பலகாரங்களை விசுவநாதன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவளுடன் ஒன்றும் பேசவில்லை. கீழே இருந்து "மன்னி! மன்னி!" என்று ஒரு சத்தம் வந்தது. "தம்பி வந்து விட்டது. நான் போகிறேன்" என்று புறப்பட்டாள் சுசீலா. "காப்பியைச் சாப்பிட்டு விட்டு, டம்ளரைத் தருகிறேன். வாங்கிக்கொண்டு போ" என்ருன் விசுவநாதன். "அப்புறம் வந்து எடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லி, அவள் ஓடிப்போய் விட்டாள்.

விசுவநாதனுடைய நெஞ்சு கொதித்தது. அந்தச் சமயம் வீதியில் ஒரு பிச்சைக்காரப் பரதேசி ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டு செல்லுஞ் சத்தம் கேட்டது.

"கைப்பிடி நாயகன் தூங்கையிலே யவன் கையையெடுத் தப்புறந்தன்னி லசையாமல் முன் வைத் தயல் வளவில், ஒப்புடன் சென்று துயினீத்துப் பின் வந்துறங்குவளை, எப்படி நான் நம்புவேன் இறைவா கச்சி ஏகம்பனே" என்று சிந்து பைரவியில் அந்தச் சந்நியாசி பாடினன்.

"பெண்மையே! உன் பெயர் வஞ்சகம்!" என்ருன் விசுவநாதன்.

அதற்குமேல் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒன்றும் சாப்பிடுவதற்கும் முடியவில்லை. எழுந்து அந்த ஹாலிலேயே இங்கு மங்கும் உலவ ஆரம்பித்தான். ஒரு மூலையில் ராமலிங்கத்தின் மேஜை இருந்தது. விசுவநாதனுடைய கால்கள் அவனையுமறியாமல் அந்த மேஜையண்டை இழுத்துச் சென்றன. அதன் மீது புதிய இரண்டு குயர் நோட்டொன்று கிடப்பதைத் திகிலுடன் பார்த்தான். அதில் சுசீலாவின் கையெழுத்தில் ராமலிங்கத்தின் பெயர் எழுதியிருந்தது.

"சுசீலாவின் கையெழுத்தில் ராமலிங்கத்தின் பெயர்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவனுடைய உடம்பெல்லாம் எரிவதுபோன்ற ஒருவித உணர்ச்சி உண்டாயிற்று. அந்த நோட்டு வாங்குவதற்கு அவனுக்குக் காசு எப்படிக் கிடைத்தது? அம்மாள் கொடுத்திருக்கலாம் என்று முதலில் நினைத்தான். பின்பு ஒரு சந்தேகம் தோன்றியது. ஒரு வேளை சுசீலா கொடுத்திருப்பாளோ? இல்லையானால், அவள் பெயர் எழுதக் காரணம் என்ன? அதைக் கேட்டுத் தெரிந்துகொள்வது என்று தீர்மானித்தான். சிறிது நேரத்தில் ராமலிங்கம் மாடிக்கு வந்தான்.

"அந்த நோட்டு வாங்குவதற்குக் காசு ஏதடா உனக்கு?" என்று கடூரத் தொனியில் கேட்டான் விசுவநாதன்.

கேள்வியைக் கேட்டதும், ராமலிங்கம் நடுங்கினான். 'பதில் சொல்லலாமா, வேண்டாமா? சொன்னால் என்ன விபரீதம் நேருமோ' என்று நினைத்தான்.

"என் மண்ணாய் நிற்கிறாய்? பதில் சொல்வதற்கென்ன? வாயில் கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது?" என்று விசுவநாதன் அதட்டினான்.

இதற்கு மேல் அவன் என்ன செய்வான்? பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்? வருவது வரட்டும் என்று தீர்மானித்து, "மன்னி" என்று மெல்லிய குரலில் சொல்லித் தலை குனிந்துகொண்டான்.

"படிப்பில் அளவு கடந்த அக்கரை வந்துவிட்டது போலிருக்கிறதே!" என்று சொல்லிவிட்டு, விசுவநாதன் கீழே இறங்கிச் சென்றான்.

மனம் சாந்தி அடைவதற்காக வைகைக் கரையை நோக்கி நடந்தான். "இனி என்ன செய்வது?" என்ற ஒரே பிரச்னைதான் அவன் முன்னால் நின்றது.

அன்று அவன் வீட்டுக்குத் திரும்புவதற்கு வெகு நேரமாகி விட்டது. அவன் என்னதான் யோசித்தும், இரண்டு மூன்று நாட்களாய் அவனது உள்ளத்தை வருத்திவரும் விஷயத்தைப் பற்றி அவனால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. யார் குற்றவாளி? இதை எப்படிக் கண்டுபிடிக்கலாம்? எங்ஙனங் கண்டுபிடிக்க முடியும்? இப்படிப் பலவாறாகச் சிந்தித்தான். மோதிரத்தைப் பற்றிச் சுசீலாவையே கேட்டு விடுவதுதான் உத்தமம் என்று யோசனை தோன்றிற்று. அந்தத் தீர்மானத்துடன் அவன் வீட்டையடைந்தபொழுது, ஒன்பது மணிக்கு மேலாகிவிட்டது. அன்று அவனுக்குச் சாப்பிட இஷ்டமேயில்லை. ஆயினும், மோதிரத்தைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காகச் சாப்பிட உட்கார்ந்தான். சுசீலா பரிமாறினாள். அவள் பொரியல் எடுத்து இலையில் வைக்கும் பொழுது, அவளுடைய கையைக் கண்டு ஆச்சரியமுற்றவன் போல், உன் விரலிலிருந்த மோதிரம் எங்கே, சுசீலா?" என்று கேட்டான்.

விசுவநாதனுடைய கேள்வியைக் கேட்டதும், சுசீலா திடுக்கிட்டாள். அவள் முகத்தில் கலவரக் குறிகள் தோன்றின. விசுவநாதன் இவையெல்லாவற்றையுங் கவனித்தான். இரண்டொரு விநாடிகள்தான். மீண்டும் அவளுடைய வதனம் சாந்தியடைந்தது. "ஐயோ! மறந்து விட்

டேனே! இன்று கட்டாயம் கேட்க வேண்டும்" என்று தனக்குள் முனகிக் கொண்டாள். விசுவநாதன் அதைக் கேட்காம லில்லை.

4

மறு நாட்காலை விசுவநாதனுடைய தாயார், நோயாய்ப் படுத்திருக்கும் தன் தம்பியைப் பார்ப்பதற்காகத் திருச்சி போய் விட்டாள். விசுவநாதனுக்கு அன்று ஆபீஸ் போவதற்கே மன மில்லை. ஆயினும், சர்க்கார் உத்தியோகத்தில் ரஜா கிடைப்பது வெகு துர்லபம். ஆகையினால், போய்த் தொலைய வேண்டியிருந்தது. எனினும், மணி ஐந்து அடித்தவுடன், இருக்கிற காகிதங்களை யெல்லாம் கட்டிக் கொண்டு வந்து விட்டான். சுசீலா ஏதோ ஒரு காகிதத்தைக் கையில் வைத்து அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இதழ் ஓரத்தில் ஒரு புன்னகை தோன்றியது. கணவன் வந்ததைக் கூட அவள் கவனிக்க வில்லை. விசுவநாதன் மெதுவாய்ப் பக்கத்தில் சென்று பார்த்தான். அது சுசீலாவின் படம்! ராமலிங்கம் வரைந்தது!! அவள் யாரையோ பார்த்துப் புன்னகை புரிவது போல் வரையப்பட்டிருந்தது. அவளுடைய மூக்கு, அவளுடைய முழி, அவளுடைய சாயல், அவளுடைய புன்னகை! யாவும் அப்படியே ஒரு ரேகை பிசகாமல் அதில் பொறிக்கப் பட்டிருந்தது!

அதைக் கண்டவுடன் விசுவநாதனுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. இத்தனை நாளும் புகைந்து கொண்டிருந்த தீ இன்று கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அதை வெடுக்கென்று அவளிடமிருந்து பிடுங்கிக் கிழித்தெறிந்தான். சுசீலாவுக்கு ஆத்திரம் சகிக்க முடியவில்லை. "இந்தப் படத்தின் மேல் உங்களுக் கென்ன இவ்வளவு கோபம்?" என்று கேட்டாள். "என் கோபமா? உனக்கு இன்னும் தெரியவில்லையா, கள்ளி?" என்று சொல்லி விட்டு, வெளியே போய் விட்டான்.

ஆற்று மணலில் வெகு நேரம் வரை உட்கார்ந்து யோசித்தான். இனி இதில் சந்தேகமில்லை. அவனுடைய இல்லப் பாதையில் முளைத்திருக்கும் முள்ளை அகற்றினால் ஒழிய, அவனுடைய மனம் ஆறுதல் அடையாது எனத் தோன்றியது. வாழ்க்கையிலும் இன்பத்தைக் காண முடியாது. அவனுடைய இன்பத்துக்கு இடையூறு யிருக்கும் ராமலிங்கத்தை ஒழிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதைத் தைரியமாகச் செய்ய வேண்டியதுதான் என்று தீர்மானித்தான். திடீரென்று அவனது மனதில் ஓர் எண்ணந் தோன்றியது. இவ்விஷயம் அம்மாளுக்கு என்றைக்காவது ஒருநாள் தெரியத்தான் செய்யும். அப்போது அவளுடைய உள்ளம் என்ன பாடு படும்? அவள் எப்படிச் சகிப்பாள்? ஆனால், அதற்காக விசுவநாதன் என்ன செய்ய முடியும்? தாயாரின் மனோ சாந்திக்காகத் தனது வாழ்க்கை யின்பத்தைப் பலியிட முடியுமா? ஒருகாலும் முடியாது. எந்த விதத்திலாவது அந்தக் காரியத்தைச் செய்து முடித்துவிட வேண்டியதுதான் என்ற திட சங்கல்பத்துடன், ஆற்று மணலினின்றும் எழுந்தான்.

இரண்டு மூன்று நாட்களாய் ராமலிங்கத்தைக் காணோம்.

சுசீலாவின் மனதில் ஒரு பயங்கர சந்தேகம் உதித்தது. கணவனைக் கேட்கலாமா என்று ஒரு சமயம் நினைப்பாள். ஆனால், அடுத்த நிமிஷம், கேட்டால் என்ன நினைத்துக் கொள்ளுவாரோ என்று எண்ணுவாள். என்றாலும், எத்தனை நாள்தான் இம்மாதிரி சம்சயத்திலேயே காலங் கழிப்பது? ஆகையால், ஒரு நாள் விசுவநாதன் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது, சுசீலா மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு, "தம்பி எங்கே, நாலைந்து நாட்களாய்க் காணோம்?" என்று கேட்டாள்.

"அவனை இனி மேல் ஒரு போதும் உன்னால் பார்க்க முடியாது!" என்று, தலை குனிந்த வண்ணம் பதிலளித்தான் விசுவநாதன்.

சுசீலாவின் கண்களினின்றும் நீர் தாரை தாரையாக வடிந்தது.

5

விசுவநாதன் மாலையில் ஆபீஸிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான். அவனுடைய மனம் மிக்க குதூகலமாயிருந்தது. இத்தனை நாட்களும் ஆபீஸிலிருந்து வரும் பொழுது, சுசீலாவைப் பற்றி அவன் மனதில் என்னென்னவோ எண்ணிக் கொண்டு வருவான். அவன் நெஞ்சு துடிக்கும். சிறகுகள் முளைத்து, வீட்டுக்கு ஒரு நிமிஷத்தில் பறந்து சென்று விடமாட்டோமா என்று நினைப்பான். வீட்டுக்குள் நுழைந்ததும், அவனுடைய கண்கள் சுசீலா எங்கே இருக்கிறாள் என்று ஆவலாய்த் தேடும். கீழே அவளைக் காணா விட்டால், அவனது மனம் துடியாய்த் துடிக்கும். வேகமாய் மாடிப் படிகளின் மீது ஏறிச் செல்வான்.

ஆனால், இன்றோ, அவன் நிச்சிந்தையாய் நடந்து வந்து கொண்டிருந்தான். காரணம் என்ன? ஆம், அதுதான். அவன் போய் விட்டானல்லவா? ஆம் போய் விட்டான். விசுவநாதனுக்கு அதைப்பற்றிச் சந்தோஷந்தான். ஆனால், அம்மா "ராமலிங்கம் எங்கே?" என்று கேட்டால், அவன் என்ன பதில் சொல்வான்? ஆயினும், அவன் அதைப் பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாமென்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

இவ்வாறு யோசித்துக் கொண்டே வீட்டு வாசலண்டை வந்து விட்டான். உடனே திடுக்கிட்டு நின்றான். உள்ளே இரண்டு குரல்களின் சத்தங் கேட்டது. ஆம், இரண்டு பேர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒன்று சுசீலா. இன்னொன்று யார்? நொடிப்பொழுதில் அவன் மனதில் விதம் விதமான கற்பனைகள் தோன்றின. ராமலிங்கந்தான் திரும்பி வந்து விட்டானோ என்று ஒரு நிமிஷம் நினைத்தான். ஆனால், அடுத்த நிமிஷமே 'அவன் எப்படித் திரும்பி வர முடியும்' என்ற சந்தேகந் தோன்றியது. அவனால் திரும்பி வர முடியாது. சற்றுக் கூர்ந்து கவனித்தான். அது அவனுடைய தாயாரின் குரல்! ஊருக்குச் சென்றிருந்தவள் திரும்பி வந்து விட்டாள்.

சுசீலா திடீரென்று கேட்டாள்: "அத்தை! நான் உங்களிடத்தில் என் மோதிரத்தைப் பார்க்கக் கொடுத்தேனே. அதை

நீங்கள் திருப்பிக் கொடுக்க வில்லையே!"

"அடி சுசிலா! நான் மறந்து விட்டேனடி! அதைக் கையில் வைத்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன் நான். அந்தச் சமயம் ராமலிங்கம் வந்து, 'அதைக் கொடம்மா பார்ப்போம். உனக் கென்னத்துக்கு மோதிரம்? நான் போட்டுக் கொள்கிறேன்' என்று கையில் போட்டுக் கொண்டு வெளியே போனன். 'என்ன தில்லையடா' என்று சொல்வதற்குள், அவன் ஓடியே போய் விட்டான். நானும் அப்புறம் கேட்க மறந்து விட்டேன். இப்ப பள்ளிக்கூடத்துக்குத் தானே போயிருப்பான்? வந்ததும், வாங்கித் தருகிறேன்" என்ருள் விசுவநாதனின் தாயார்.

இதைக் கேட்டதும், விசுவநாதன் அப்படியே ஸ்தம்பித்து விட்டான்! என்ன காரியம் செய்தோமென்று வருந்தினன். பத்து நிமிஷங்களுக் கப்புறந்தான் அவனுக்குத் தன்னுணர்வு வந்தது. உடனே தந்தி ஆபீஸுக்கு ஓடி, ராமலிங்கத்தைத் தட்சணமே புறப்பட்டுத் திரும்பி வரும்படி, சாந்திநிகேதனத்துக்கு ஒரு தந்தி யடித்தான்.

★

பாகிஸ்தானுக்கு இடையூறு!

யுத்த ஆரம்ப காலத்தில், மகாத்மா காந்தி, ஜனப் ஜின்ன, பாபு ராஜேந்திரப் பிரசாத் மூவரையும், வைஸிராய் லின்லித்கோ அழைத்திருந்தார். மூவரும் ஜின்னவின் காரிலேயே வைஸிராய் மாளிகைக்குச் சென்ருர்கள். மகாத்மா காந்திக்கு, வைஸிராய் லின்லித்கோ தனிப்பட்ட முறையில் நண்பரல்லவா? ஆகையால், வைஸிராயின் குடும்ப யோக க்ஷேமங்களை, காந்திஜி விசாரிக்க ஆரம்பித்து விட்டாராம்.

"என்ன, பில்லிஸ் சௌக்கியமா?" என்ருர் காந்தி.

"ஆம், காந்தி! சௌக்கியம்தான். உங்களுக்கு என் முந்திய கடிதத்துக்குப் பிறகு, பில்லிஸுக்குஅபூர்வமாய்க் குணமேற்பட்டிருக்கிறது" என்ருர் வைஸிராய்.

அதன்பின் காந்தியும் வைஸிராயும் பில்லிஸின் உணவு விருப்பு வெறுப்புகளைப் பற்றி விஸ்தாரமாகப் பேசத் தொடங்கிவிட்டார்கள். ஜின்ன சாகிபோ 'உம்ம்' என்று உட்கார்ந்துகொண்டிருந்தார்.

"ஆமாம், காந்தி! பில்லிஸைப் பார்க்கலாம் வருகிறீர்களா?" என்று கடைசியிலே கேட்டார் வைஸிராய்.

'ஆஹா!' என்று காந்தியும் பாபு ராஜேந்திரரும் புறப்பட்டுவிட்டார்கள்.

"நீங்களும் வரலாமே!" என்று ஜின்னவையும் உபசாரமாகக் கூப்பிட்டார் வைஸிராய்.

ஜின்னவுக்கு மகா ஆத்திரம். "பாகிஸ்தானைப் பற்றிப் பேச வந்தேனே அல்லாமல், பில்லிஸைப் பார்க்க அல்ல" என்று அவர் சொல்லிவிட்டாராம்.

மற்றவர்கள் பில்லிஸைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். ஜின்னசாகிபின் பாக்கிஸ்தானுக்குக் குறுக்கே முளைத்த பில்லிஸ் யார் என்று பின்னல்தான் ஜின்னவுக்குத் தெரிய வந்தது. யாருமல்ல; அது ஒரு கூர்மாவதாரம்தான்-வைஸிராய்ப் பிரபு மிக்க ஆசையோடு வளர்த்து வரும் ஓர் ஆமை!

பொது ஜனங்களுக்கு லிவர்
பிரதர்ஸ் கம்பெனியாரின்
அறிவிப்பு நெ. 3

சோப் அதிகநாள் நீடிக்கும்



கவனத்துடனிருங்கள்

ஆரோக்கியமாயிருக்க, வீடு, ஆடைகள், சரீரம் இவைகள் சுத்தமாயிருத்தல் வேண்டும், இதற்காக ஒவ்வொருவருக்கும் சோப் வேண்டியது அவசியம். ஆனால், சோப் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் இந்த யுத்தகாலத்தில் ஏராளமாக கிடைக்காததால், தேவைக்குப்போதிய அளவுக்கு சோப் கிடைப்பது அரிதாகிறது. ஆகவே, சிறிது கவனம் செலுத்தி, உங்கள் சோப்பை அதிக நாள் நீடித்து வரும்படி செய்யுங்கள். இதற்கு கீழேயுள்ள சில குறிப்புகள் உதவியாயிருக்கும்.

சோப்பைத்தண்ணீரில் ஊறவைக்காதீர்கள்



உபயோகிக்கும் பொழுது சோப் சிறிது நேரங்கூட தண்ணீரிலிருக்கலாகாது. சோப வெகு சீக்கிரத்தில் கரையுமாதலால், சில நிமிஷங்கள் அநாவசியமாக ஊறினாலும் ஒரு குழந்தை குளிப்பதற்கு வேண்டிய சோப் வீணாகிவிடும். ஆகையால் சோப்பை தண்ணீர் வடியும்படியாக கம்பிக் கூடையிலோ, அல்லது ஒரு கிண்ணத்திலோ வைக்கவேண்டியது. இவ்வாறு அதை உலரவைத்தால், நாள் நீடித்துவரும். கடைசிச் சிறு துண்டு வரை உபயோகிக்கலாம்.

பழையதுண்டை புதியசோப்புடன் ஒட்டுங்கள்



சோப்பின் கடைசி துண்டை எறிந்து விடாதீர்கள். அதையும் புதிய சோப்பையும், தண்ணீரில் நனைத்து இரண்டையுட சேர்த்து ஒட்டி, பிறகு உலர வையுங்கள் சிறிய துண்டு புதிய கட்டியுடன் ஒட்டிக்கொள்வதனால் கடைசி வரை உபயோகிக்கலாம். இந்த முறையை ஸன்லைட், லைப்பாய், லக்ஸ் டாய்லெட் எல்லா சோப்புகளுக்கும் அனுஷ்டிக்கலாம்.

ஆனால் அதிகசிக்கனமாகஇருக்காதீர்கள்!

நீங்கள் உபயோகிக்கும் சோப் விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் சொல்வதின் நோக்கம் சோப்பை நீங்கள் குறைத்து உபயோகிக்க வேண்டுமென்பதல்ல. சுத்தமாயிருக்க சோப் அவசியம், சரீரமும், ஆடைகளும் சுத்தமாயிருத்தல் ஆரோக்கியத்திற்கவசியம். ஆகையால் தினந்தோறும் உங்கள் ஆடைகளையும், சரீரத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள் ஆனால் சோப்பை வீணாக்காதீர்கள்.

லிவர் பிரதர்ஸ் — நல்ல சோப் உற்பத்தியாளர்கள்

ஸன்லைட் • லைப்பாய் • லக்ஸ் டாய்லெட் • லக்ஸ்
லைப்பாய் டாய்லெட் • விம் • மங்கி பிராண்டு

L.COM.33-50TM



புகழ்பெற்ற ஸினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

'ரிஷ்ய சிருங்கர்' தமிழ் படத்தில் பிரதம ஸ்திரீபாகம் வகித்தவரும், போப் பாண்டவரால் புகழப்பட்டவரும், இனிய சங்கீத சம்பத்துடையவருமான திறமை வாய்ந்த தென்னிந்திய நடிகை

ஸ்ரீமதி வஸுந்தரா தேவி

சொல்லுகிறார்.

"தனிப்பட்ட நறுமணத்திற்காக நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன்."

Vasundhara Devi

நரஸூஸ் காபி

M N K.—16 TM.

யுத்த கால ஆசிரியன்

தி. ஜ. ர.

‘செவிக்கு உணவு இல்லாத போழ்தத்துச் சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்’ என்றார் வள்ளுவர். சாதாரண காலத்தில், சோற்றுப் பஞ்சம் இல்லாதவனிடம் காணப்படும் தத்துவம் அது. ஆனால், யுத்த காலத்திலோ, அதை எல்லோருமே அனுஷ்டிக்கவேண்டியதாய் இருக்கிறது. யுத்தம் நடக்கையில் பத்திரிகை படிக்கும் வழக்கம், ஜனங்களிடம் அமோகமாய் வளர்கிறது. யுத்தச் செய்திகளைப் படிக்கும் ஆவலே அதற்குக் காரணம் என்று சொல்லலாம். அப்படியானால், செய்திப் பத்திரிகைகளுக்கு மட்டுமே அல்லவா கிராக்கி இருக்கவேண்டும்? மற்ற வகையான பத்திரிகைகளும் எப்படிப் பெருகுகின்றன? அதற்கு இரண்டு காரணங்கள்: முதலாவதாக, மனிதனுக்குக் கவலை நிறைந்திருக்கும் போதுதான், அதை மறக்கடிக்க ஏதாவது பொழுது போக்கு வேண்டும். இரண்டாவதாக, பொருள்கள் பெருகிவிடுகிறது. இந்நிலையில் மிகவும் மலிவாகக் கிடைக்கக்கூடிய இன்பப் பொருள்கள், புத்தகங்களும், பத்திரிகைகளும்தான். இந்த இரண்டு காரணங்களாலும், பற்பல விதமான பத்திரிகைகளுக்கும் யுத்தத்தால் வளர்ச்சி ஏற்படுகிறது. இதை இப்போது நாம் கண்ணாரக் காண்கிறோம். இங்கே மட்டிலுமல்ல; உலகெங்குமே இப்படித்தான் நிகழ்கிறது; நிகழ்ந்திருக்கிறது.

இவ்வாறு தன் தொழிலுக்கு வளர்ச்சியும் செல்வாக்கும் தரும் யுத்தகாலத்தில், ஒரு பத்திரிகாசிரியனின் நிலைமை என்ன? அது வாள்மேல் நடப்பதுபோல்தான் ஆகும். இந்த நவீன நாகரிக காலத்தில், அரசாங்க நிர்வாக சக்தியைப் பத்திரிகைகளும் பங்கு கொண்டு விடுகின்றன என்று சொல்வதுண்டு. பொது ஜனங்களிடம் பத்திரிகைகள் பெறும் செல்வாக்கு, அரசாங்கத்தையே ஆட்டிவைக்கக் கூடியதாயிருக்கிறதாம். ஆகவே, அந்த அதிகார சக்தியைப் பெற்றிருக்கும் பத்திரிகைகள், அரசாங்கத்தின்

“சனியன் பிடித்த இந்த யுத்தம் நிற்கட்டும்: நான் என்னென்ன பண்ணுவேன், தெரியுமா?” என்று கர்ஜிப்பது, புத்திமானுக்கு அழகல்ல. யுத்த காலத்திலும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தே யாக வேண்டும். பத்திராசிரியனும் அதற்கு விலக்கல்ல. அவன் கடமைகளைக் குறிப்பிடும் இந்தக் கட்டுரை, ஆகஸ்டு மீ 26உ சென்னை ரேடியோவில் பேசிய பேச்சாகும். நிலையத்தாரின் அனுமதியுடன் இங்கே வெளியிடப்படுகிறது.

பொறுப்பிலும் பங்கு கொள்ள வேண்டாமா? இப்படி ஒரு கட்சி. வாதம் என்னவோ ரஸமாய்த் தான் இருக்கிறது. ஆனல், உண்மையில் அது சாத்தியமல்ல. ஜனங்களைப் பத்திரிகைகள், தங்கள் செல்வாக்கினல் கலக்கி விட முடியும்; ஆனல் கட்டளையிட்டுப் பணியவைக்க முடியாது. ஆயினும், ஜன சக்தியை உருவாக்குவதில், பத்திரிகைகள் பெருந் தொண்டு புரிய முடியும்.

படிக்கும் வழக்கம், யுத்தகாலத்தில் ஜனங்களிடம் மிகவும் பரவுவதால், ஒருபுறம் பத்திரிகாசிரியனின் செல்வாக்குப் பெருகுவது உண்மை. மறுபுறம், அவனுக்குப் பல தர்ம சங்கடங்களும் நிர்ப்பந்தங்களும் யுத்தத்தால் அதிகரிக்கின்றன என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். காகிதப் பஞ்சம், கட்டுப்பாடு முதலியவைகளின் சிரமம் ஒரு பக்கம்; மறுபக்கம், யுத்தகாலச் சட்டங்களின் நிர்ப்பந்தம். இவைகளால், பத்திரிகைத் தொழிலிலே, சொல்செட்டும் நடை நயமும் அவசியமாகின்றன.

சர்வாதிகார நாடுகளில் எக்காலத்திலுமே பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் இருக்காது. ஆனல், ஜனநாயக நாடுகளிலோ, பத்திரிகைச் சுதந்திரம் ஜீவாதாரமான உரிமையாகப் பாவிக்கப் படுகிறது. அப்படிப்பட்ட ஜனநாயக நாடுகளில் கூட, யுத்தகாலத்தில், அதிகாரவர்க்கம், தொட்டாற் சுருங்கிபோல், சற்று நடக்கத்தான் செய்யும். அதனல் நேரக்கூடிய நிர்ப்பந்தங்களுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு தன் சுதந்திர ஐதீகத்தையும் இழக்காமல் காப்பாற்றிக் கொள்ளுவதே, சிறந்த பத்திரிகாசிரியனின் லட்சணமாகும். அமெரிக்கப் பத்திரிகைகளைப்பற்றி, 'நாம் இரண்டு முனைகளிலே போராடுகிறேம்' என்று, ஸ்டான்லீ ஹை என்பவர் சமீபத்தில் எழுதியுள்ள ஒரு கட்டுரையை இங்கே குறிப்பிடலாம். ஒரு முனை, உலகத்தில் சுதந்திரத்துக்காகப் போராடும் போர் முனை; மற்றது, உள்நாட்டிலே, பத்திரிகைகளின் சுதந்திரம் பறிபோகாமல் காக்கப் போராடும் முனை.

விக்காம் ஸ்டீட் என்பவர், மிகப் பிரபலமான ஓர் ஆங்கிலப் பத்திராசிரியர். பத்திரிகைச் சுதந்திரத்தில் அபார நம்பிக்கை உள்ளவர். அவர் சொல்லும் ஒரு சம்பவம் மகா உருக்கமானது. ஜெர்மனியிலே, ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்து சில மாதங்களாயிற்று. அப்போது அந்த நாட்டில்பெரும்மதிப்பும்செல்வாக்கும் படைத்திருந்த ஒரு பத்திராசிரியருக்கு ஓர் எச்சரிக்கை வந்தது. 'எங்களுடைய நாஜி கட்சியுடன் ஒத்துழைப்பதாக, ஒரு பத்திரத்தில் நீர் கையெழுத்திடவேண்டும். இல்லையானல், உம்முடைய பதவியும் ஜீவனேபாயமுமே போய்விடும்' என்று, அவரை நாஜிகள் எச்சரித்தார்கள். பாவம், அவர் என்ன செய்வார்? பத்திரத்தில் கையெழுத்திட்டால், மனச்சாட்சி மண்ணகும்; தன் மதிப்பும் போய்விடும். இடாவிட்டால், வாழ்விழக்க நேரும். 'நான் எப்படி நடப்பது?' என்று விக்காம் ஸ்டீடை, அவர் யோசனை கேட்டார். 'இந்தப் பாவத்துக்கு நாம் என் ஆளாகவேண்டும்?' என்று எண்ணிய விக்காம் ஸ்டீட், 'எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. உங்கள் யுக்தம்போல் நடவுங்கள்' என்ருர். ஜெர்மன் பத்திராசியர், மனச்சாட்சியே பெரிதென மதித்தார். பத்திரத்தில் கையெழுத்திடுவ

தில்லை என்று முடிவு செய்தார். ஆங்கில ஆசிரியருக்கு இது சந்தோஷமே அளித்தது. என்ருலும், 'மனச் சாட்சியாவது, மண்ணுங்கட்டியாவது ...... ஆத்திரப்பட்டு இப்படி முடிவு செய்திர்களானல், பின்னல் ஆயுள் காலம் முழுவதும் வருத்தப்பட நேருமே, அதை யோசியுங்கள்' என்று எச்சரித்தார். இல்லை, அந்த ஜெர்மன் பத்திராசிரியர் உறுதி குலையவில்லை; பத்திரத்தில் கையெழுத்திட மறுத்தே விட்டார். பலன், என்ன? அந்தஸ்து, பதவி, செல்வாக்கு எல்லாவற்றையும் இழந்தார்; தாய் நாட்டையே துறந்தார். அயல்நாடுகளிலே ஏதாவது சிறுதொழில்கிடைக்காதாஎன்று வேலை தேடிப் பரதேசியாயும் அலையலானர். அப்போது, அவரை ஸ்டீட், மீண்டும் சந்தித்தார். தாம் செய்த காரியத்துக்கு அந்த ஜெர்மன் ஆசிரியர் துளியாவது வருந்த வேண்டுமே; கிடையாது. உத்தமமான பத்திராசிரியன் அவர்போல் தான் நடப்பான்.

ஜனங்களுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய சேவைக்குச் சாதன மாகவே, பத்திராசிரியர்கள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றி வரவேண்டும். 'இந்த யுத்தம் மாத்திரம் முடிந்து விடட்டும். நமது ஸ்தாபனம் மிக உயர்ந்த நிலைக்கு வருவது நிச்சயம்' என்று ஒருபத்திரிகை முதலாளி மிக்க நம்பிக்கையோடு, சில தினங்களுக்கு முன், என்னிடம் சொன்னர். இந்த மனோபாவம் முற்றிலும் தவருகும் என்று நான் அவரிடம் தெரிவித்தேன். வருங்காலம் ஆண்டவன் கையில் இருக்கிறது. என்ருே ஒரு நல்ல நாள் வரப்போகிறது என்று நாம் காத்திருக்கலாமா? அன்று தானகவே எல்லாம் சரிப்பட்டுவிடு மென்று ஓய்ந்திருக்கத்தான் முடியுமா? இன்று இதோ இந்தக் கணம் தான் நமக்கு உண்மை. நாளைக்கு வாழ்வ திருக்கட்டும். இன்றும்-இந்த யுத்தத்துக்கு நடுவேயும்-நாம் வாழ்ந்துதான் ஆகவேண்டும். வாழ்க்கையைக் கொஞ்ச நாளைக்கு ஒத்திப்போட்டுக் காத்திருக்க லாகாது; முடியாது. இன்று நாம் புரியவேண்டிய கடமைகளும் செய்யவேண்டிய காரியங்களும் பல இருக்கின்றன.

யுத்த காலத்தில் ஜனங்களின் மனோபாவம் குன்றக்கூடும்; நம்பிக்கை தளரக்கூடும்; மேலான சுதந்திர ஆர்வம் மங்கக்கூடும்; ஆசைக்கனவுகளெல்லாம் சிதறக்கூடும். வாள் எடுத்துப் போரிட ஜனங்களுக்கு நாம் சொல்லித் தர வேண்டியதில்லை. ஜனங்களின் மன உறுதி குலையாமல் அதைக் காத்து வளர்க்க, நாம் பாடு படமுடியும். இன்று தினம் ஜனங்களை உற்சாகப் படுத்தி எக்காரணத்தாலும் பீதியடையாமல் வாழச் செய்பவன் எவனே, வருங்காலத்தைப் பற்றி ஏங்கித் தற்காலத்தை மறந்துவிடாமல் செய்ய வேண்டிய அலுவல்களைச் செய்துவரும்படி அவர்களை ஊக்கப்படுத்திக்கொண்டே வருபவன் எவனே, உன்னதமான சுதந்திர ஆதர்சங்களை அவர்களிடம் வாடாது வளர்த்து வருங்காலத்துக்கு அஸ்திவாரம் கோலுபவன் எவனே, அவனே சிறந்த பத்திராசிரியனுவான்.

★

யார் மகாத்மா?

ஏழை மக்களுக்காக எவனுடைய உள்ள முருகி ரத்தம் வடிக்கிறதோ அவனே மகாத்மா; மற்றவரெல்லாம் துராத்மாக்கள்.

—சுவாமி விவேகானந்தர்.

கவிதை

வெ. ராமசாமி

ஒரு மகாகவி, நாட்டுக்கே சொந்தமான 'பொருள்'. அந்தப் பொருளை 'நான்தான் வைத்துக் கொண்டிருப்பேன்; அது எனக்குத்தான் சொந்தம்' என்று யாராவது சொன்னால், நாம், அப்படிச் சொல்லுபவரைச் சும்மா விடுவோமா? உதாரணமாக, இன்று தமிழ் நாட்டில் தோன்றியிருக்கும் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை யவர்களை எடுத்துக் கொள்வோம். நாஞ்சில் நாட்டு வேளாளர்களெல்லாம் ஒன்று சேர்ந்து, 'தேசிக விநாயகம் பிள்ளை எங்கள் ஊர்க்காரர்; அவர் எங்களுக்குத்தான் சொந்தம்' என்று சொன்னார்களென்றால், அந்த வார்த்தை நமக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணாதா? கோபத்தை உண்டாக்காதா?

பாண்டியனுக்கு இம்மாதிரிதான் ஆத்திரம் வந்தது: 'கம்பர் இந்தச் சோழனுக்கு மட்டுமா சொந்தம்? அவரை வேளியே செல்ல விடமாட்டேன் என்கிறானே? பெரிய சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆளுவதுபோல, கம்பரையும் தமிழ்க் கவிதையையுமே கட்டி ஆளலாம் என்று நினைத்தானா இவன்?' என்று அவன் கோபமுற்றிருந்தான். பாண்டிய ராஜாவின் நிலைமை இப்படி யென்றால், அவனுடைய தேவியின் நிலை இதைவிட விபரீதமா யிருந்தது. 'கம்பரைப் பார்க்கவேண்டும்; அவரோடு பேசவேண்டும்; அவர் பாட்டுச் சொல்லக் கேட்கவேண்டும்' என்று துடி துடித்துக்கொண்டிருந்தது அவளது உள்ளம். இந்த நிலை வெகுநாள் நீடித்துக் கொண்டே போனால், 'கம்பரை அனுப்புகிறாயா? இல்லாவிட்டால் உன்மீது படை யெடுக்கவா?' என்றுகூட, சோழனைப் பாண்டியன் பயமுறுத்தி இருப்பான், படையும் எடுத்திருப்பானோ என்னவோ? ஆமாம்; அந்தக் காலத்து அரசர்களுக்குத் தமிழில் அவ்வளவு ஆத்திரம் இருந்தது.

கம்பருக்கு இச்சமயம் தமிழ் நாடு முழுவதும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஓர் ஆசை உண்டாயிற்று. கம்பர் பல இடங்களுக்குச் சென்றார். ஆங்காங்கே மக்கள் தம்மைப் பாராட்டி உபசரிப்பதையும் தம் மீது செலுத்தும் அன்பையும் கண்டுபிரமித்துப்போய்விட்டார். கவிதையை அனுபவிப்பதில், தமிழனுக்குள்ள வெறியைக் கண்டு வியந்தார். தமிழனுடைய நாகரிகத்துக்கு இது தலை சிறந்த எடுத்துக்காட்டல்லவா?

பல ஊர்களுக்குச் சென்ற பிறகு, கம்பர் மதுரை வந்து சேர்ந்தார். கம்பர் பெருமான் மதுரைக்கு வந்து விட்டாரென்று கேட்ட பாண்டியனுக்கும் அவனுடைய மனைவிக்கும் சந்தோ

கம்பனின் ஒரு தனிப்பாடலை, கவிதைக்கு உதாரணமாக இங்கே நாம் அனுபவிக்கிறோம். அதன் பாவத்தை உணரும் விதமாக இங்கே ஒரு கற்பனையும் நம்மை அகமிழ்விக்கிறது.

ஷம் தலைகால் புரியவில்லை. 'கம்பர் வாஸ்தவமாகவே வந்து விட்டாரா? இல்லை, இந்த ஜனங்கள் நம்மைக் கேலி பண்ணுகிறார்களா?' இப்படியெல்லாம் ஐயுற்றார்கள் பாண்டியனும் அவன் தேவியும். கம்பர் வருகிறதென்பதே ஓர் அசாத்தியமான காரியம் என்று எண்ணி, ஏங்கியிருந்த தம்பதிகளுக்கு, அநாயாசமாக, யாதொரு முயற்சியுமின்றி, சாக்ஷாத் கம்பரே தங்களை நாடி வருகிறார் என்றால், அதை எளிதில் நம்பிவிடத் தோன்றுமா? இந்தச் செய்தியைக் கேட்டது தான் தாமதம். பாண்டிய அரசனும் தேவியும் ஓடோடியும் சென்று ஒரு சக்கரவர்த்தியை வரவேற்பது போன்று கம்பர் பெருமானை வரவேற்றார்கள். கம்பர் கவிச் சக்கரவர்த்தி யல்லவா?

பாண்டியனும் அவன் தேவியும் தன்னை ஒரு பெரிய தெய்வமெனக் கொண்டாடுவதைப் பார்த்த கம்பர், ஆனந்த பரவசரானார். பாண்டியனுக்குத் தம்மிடம் உள்ள ஈடுபாட்டைவிட, அவனுடைய தேவியின் அன்பைக் கண்டு புளகாங்கிதரானார். சாமானிய மனிதனுக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டால், அவன் பேச்சின் மூலம் தனது உவகையைத் தெரிவிப்பான், ஆனால், கவிஞருடைய போக்கு அலாதியல்லவா! கவிதை, நல்ல கவியுருவத்தோடு, வருகிறது:

உமையவளும் நீயும்
ஒருங்(கு) ஒப்பே.

பாண்டியனின் தேவியைப் பார்க்கும் போது, சாக்ஷாத் உமாதேவியாரைப் பார்ப்பது போலவே இருக்கிறது கம்பருக்கு. ஆனால், அடுத்த நிமிஷத்தில் தாம் சொன்னது சரியல்ல என்பது அவருக்குப் புலனாயிற்று.

உமையவளும் நீயும்
ஒருங்கொப்பே; ஒப்பில்
உமையவளுக்(கு)
உண்டங்கோர் ஊனம்.

'உமையவள் ஒப்பற்றவள் தான். ஆயினும் உமையவளுக்கு ஒரு பெரிய ஊனம் இருக்கிறதே! அதை எண்ணாமலல்லவா உனக்கு உமையவள் சமமானவள் என்று சொல்லிவிட்டேன்' என்று எண்ணினார் கம்பர்.

உமையவளும் நீயும்
ஒருங்கொப்பே; ஒப்பில்
உமையவளுக்குண்டங்கோரூனம்.
—உமையவள் தன்
பாகந்தோய்ந்து ஈசன்
பலிக்குழன்றான்...

பார்வைக்குப் பாண்டியன் தேவியைப்போலவே உமையவள் இருந்தாலும், அவளைச் சேர்ந்து தானே ஈசன் பிச்சை எடுக்கும்படி நேர்ந்தது? ஆனால், பாண்டியன் தன் தேவியைச் சேர்ந்து என்ன ஆனான்? அதைப் பார்ப்போம்:

உமையவளும் நீயும் ஒருங்(கு)
ஒப்பே; ஒப்பில்
உமையவளுக்குண்டங்கோ ரூனம்.
உமையவள் தன்
பாகந்தோய்ந்(து) ஈசன்
பலிக்குழன்றான்; பாண்டியனுன்
ஆகந் தோய்ந்(து)
ஆண்டான் அரசு!

'தேவி, நீதான் பாக்கியசாலி. உன்னைச் சேர்ந்த அதிர்ஷ்டத்தினால்தான், பாண்டியன் ஒரு சாம்ராஜ்யத்தையே ஆளுகிறான். உமையவளோடு உன்னை ஒப்பிட்டுச் சொன்னது தப்பு, தப்பு, தப்பு' என்று சொல்வதுபோல் இல்லையா இந்தப் பாட்டு? கவியின் உருவமும், பாவங்கள் வெளிப்படும் முறையும், அவைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோன்று அரசு என்ற வார்த்தை அமைந்திருக்கும் அருமையும், தமிழ்ப்பாட்டு எவ்வளவு நன்றாக வரும் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

★

மனதின் இயல்பு: மனம் நீக்ரோவின் தலையிலுள்ள சுருட்டை மயிருக்குச் சமானம். அதை இழுத்துப் பிடித்திருக்கும் வரையில் நீளமாயிருக்கும். ஆனால், பிடிப்பை விட்டதும், பழையபடி அது சுருண்டு விடுகிறது. அதேபோல், மனமும் பலவந்தமாக அடக்கி நிறுத்தப்பட்டிருக்கும் வரையில், நன்றாய் வேலை செய்து நற்பயன் விளைவிக்கும். சற்று ஜாக்கிரதைக் குறைவு ஏற்படுமானால், உடனே அது சன்மார்க்கத்தை விட்டு விலகிவிடும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

என்ன எழுவது: பாமர மக்களை மனதில் கொண்டே, நம் எழுத்தாளர்கள் தம்சிந்தனைகளைப் புரியவேண்டும்; அவர்களுக்காகவே எழுத முயலவேண்டும். இப்படிச் செய்தால், பாஷை, தானாகவே எளிதுபடும்; வலிமையும் சக்தியும் கொண்ட சொற்கள் தாமாகவே வரும்; வலிந்து கஷ்டப்பட்டு அலங்காரமாகத் தொகுக்கும் பதத் தொடர்களும் வாக்கிய அமைப்புக்களும் ஒழியும். அத்தகைய பதத் தொடர்களும் வாக்கியங்களும், வீழ்ச்சியடைந்த பாஷைக்கே அடையாளங்களாகும்.

—பண்டித ஜவஹர்.

மனிதனை மாற்ற வழி: மனிதர்களின் நடத்தையை நாம் மாற்ற வேண்டுமானால், அவர்கள் வாழும் நிலைமைகளை நாம் மாற்றியாகவேண்டும். கொடிய வறுமையுள்ள இடத்திலே, குற்றம் தானாகவே நடக்கிறது. நிர்க்கதியான நிலைமை, மனத்தின் தீய இச்சைகளைப் பெருக்குகிறது; நேர்த்தியான உணர்ச்சிகளை மாய்க்கிறது. மனிதர்களின் உடம்பும் ஆத்மாவும் ஒரே விதமான உடைகளைத்தான் அணிகின்றன. உடம்பைக் கந்தல் மூடியிருக்குமானால், ஆத்மாவும் அதே நிலையில்தான் பெரும்பாலும் இருக்கிறது.

—இங்கர்சால்.

சுதந்தரப் பாதுகாப்பு: தாராளமான கொள்கைகளைத் தாங்குவோர், பலாத்காரத்தைப் பலாத்காரத்தாலும், வசையை வசையாலும், மனக்கசப்பை மனக்கசப்பாலும் எதிர்ப்பார்களானால், தங்களால் பின்வரும் நிலைமைதான் எழுவதைக் காண்பார்கள்: வலிமை மிகுந்த சிறு பான்மையோர், சட்ட வரம்பை மீறி அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள்; இறந்துபட்ட ஜன நாயகத்தைப் பற்றிய வெறும் சொல்குப்பைக்குள், சுதந்திரம் போய் ஒடுங்கிவிடும்—இந்த நிலையே.

—ஸி. இ. எம். ஜோட்.

ஒரே முடிவு: உலகத்தை ஆண்ட சிக்கந்தர் சக்கரவர்த்தியும் அவருடைய குதிரைக்காரனும் இறந்தபின் ஒரே நிலைமையை அடைந்தார்கள்: அனைத்துக்கும் காரணமாயுள்ள பரம்பொருளில் இருவரும் சேர்ந்துவிட்டார்கள்; அல்லது இருவரும் ஒரே விதமான அணுக்களாகச் சிதறிப் போனார்கள்.

—மார்க்கஸ் ஒளரேலியஸ்.

★

உடம்பும் மருந்தும்

கர்ப்பவதிகள் கவனிக்க: ஒரு பெண் தனக்குக் கர்ப்பம் உண்டாகியிருக்கிறது என்று தெரிந்த முதல் மாதத்திலேயே வைத்தியரிடம் ஒரு முறை சோதித்துக் கொள்வது மிகவும் நல்லது என்று 'நல்வழி' கூறுகிறது: ஏனெனில், சில சமயங்களில் கருவானது கருப்பையில் உண்டாகாமல், அதற்கு வெளியேயுள்ள குழாயில் தோன்றுவதுண்டு. இதனல் முதல் மாதத்திலிருந்தே வயிற்று நோவு உண்டாகி, இரண்டு மாதம் முடிவதற்குள்ளாக, வியாதி திட்டமாக நிதானிக்கப்படுவதற்கு முன்னேயே, பிராணபாயமான நிலைமை ஏற்பட்டு விடலாம்.

ஏழாம் மாதத்துக்குப் பின் பதினைந்து நாளைக்கு ஒரு முறை பரிசோதித்துக் கொள்வது நல்லது. இந்தக் காலத்தில் குழந்தையின் கிடை சரியாக இருக்கிறதா என்று தெரிந்து கொள்ளவேண்டும். அது கருப்பையில் குறுக்காக இருந்தால், அதைத் திருப்பிச் சரியான நிலையில் வைப்பது சாத்தியமாகும். அல்லாவிடில், கடைசி நேரத்தில் இப்படி விபரீதமான நிலையோடு பிரசவிப்பதனல், சிசுவின் உயிருக்கு ஆபத்து உண்டாவதும் அன்றி, தாயும் அபாயத்துக்கு ஆளாகிருள்.

ஆகாரத்தைப் பற்றிக் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

சுகப்பிரசவத்துக்கு மார்க்கம், கர்ப்ப காலத்தில் பெண்கள் தங்கள் உடம்பை மிக ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்வதே முக்கியமானது. பிரசவம் என்பது இயற்கையான ஒரு காரியம். அதை ஏதோ, ஒரு நோயைப்போல் பாவித்து அஞ்சவேண்டியதில்லை. ஆயினும், கர்ப்பவதிகள், சாமான்ய காலத்தைவிட, அதிக எச்சரிக்கையுடன் தேகத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். அதற்கான அரிய குறிப்புக்களை இங்கே காணலாம்.

போஷணையுள்ள ஆகாரம் சாப்பிட வேண்டும். மிதமாகச் சாப்பிடவேண்டும். ஏராளமான தண்ணீர் பருகுவதும் முக்கியம். குடிக்கும் ஜலத்துக்குத் தக்கபடி, உடம்பிலுள்ள விஷ பதார்த்தங்கள் சிறு நீர் மூலமாக வெளியேறும். குடிக்கும் ஜலம் சுத்தமாயும் வடிக்கட்டினதாயும் இருக்க வேண்டும். ஆற்று ஜலத்தைக் குடிக்கப்படாது. குளம், குட்டை இவைகளின் ஜலமும் சுத்தமானதல்ல. இப்படிப்பட்ட ஜலத்தையே உபயோகிக்க வேண்டி இருந்தால், அதை முதலில் வடிக்கட்டவேண்டும். பின்பு அதில் உள்ள கிருமிகள் எல்லாம் சாகும்படியாக, அதைக் கொதிக்க வைத்து, ஆற்றவேண்டும். பிறகுதான் அதைக் குடிக்கலாம்.

அநேகருக்கு இந்தக் காலத்தில் மலச்சிக்கல் இருப்பது சகஜம். ஆனல் அது விஷயமாய் அலட்சியமாக இருப்பது தவறு, மோசம். போதுமான பழ வர்க்கங்கள், காய்கறிகள், கிரை முதலியன சாப்பிடுவதாலும் ஏராளமான ஜலம் குடிப்பதாலும், மலச்சிக்கல் தீரும். அப்படித் தீராவிட்டால் லேசான பேதி மருந்துகளை உபயோகிக்கலாம்.

கர்ப்பம் முதிர முதிர, அடிவயிற்றில் உள்ள உறுப்புகளில் பளுவு காட்டும். ஏழாம் மாதத்திலிருந்து சிறு நீரிலே ஒரு விதமான வெள்ளைத் தாது வரலாம். இந்த வியாதி இருக்கிறது என்பதை நீர் சுருங்குவதாலும், கண் பட்டையில் ஒரு வீக்கம் ஆரம்பித்து, உடம்பு முழுவதும் பரவுவதாலும், தலைவலி, மயக்கத்தாலும் அறிந்து கொள்ளலாம். இந்த வியாதி ஏற்படா வண்ணம் ஏழாம் மாதத்திலிருந்தே இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நீரைச் சோதித்துக் கொள்வது நல்லது.

தினந்தோறும் ஸ்நானம் செய்யும் வழக்கத்தை எப்போதும் போல் கையாண்டு வரவேண்டும். ஆனல்,

அதற்கு அதிகச் சூடான அல்லது அதிகக் குளிர்ந்த ஜலத்தை உபயோகிக்கக் கூடாது. ஏழாம் மாதத்திலிருந்து ஒரு தொட்டியில் வெந்நீர் நிரப்பி, அதற்குள் உட்கார்ந்து குளிக்கலாம். கர்ப்ப முதிர்ச்சியால் விசேஷ சிரமத்தை அடையும் இடுப்பு நரம்புகளுக்கும் தசைகளுக்கும் இது இதமாக இருக்கும்.

கர்ப்ப காலத்தில் ஆடையைப்பற்றி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இறுக்கமான ஆடை கூடாது. ஒட்டியாணங்கள் ஆகா.

ஸ்தனங்களைப் பற்றியும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். கடைசி மாதங்களில் காம்பை இழுத்து இழுத்துவிட்டு, குழந்தை எளிதாகப் பால் குடிக்கும்படியான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். அவ்விதம் தோல் கடினமானால் தான், குழந்தை அதைச் சுவைக்கும் காலத்தில், அதில் புண் உண்டாகாது. அதைக் கடினமாக்குவதற்காக ஓ-டீ-கொலோன் என்ற மருந்தையும் ஜலத்தையும் சமமாகக் கலந்து, அதில் தேய்க்கவேண்டும். போரிக் நீரையும் உபயோகிக்கலாம். இந்தக் காலத்தில் மார்பில் கசிவு ஏற்படும். அதை அடிக்கடி கழுவிச் சுத்தம் பண்ணவேண்டும். இல்லாவிட்டால், காம்பின் வழியாக மார்புக்குள் அழுக்குப் புகுந்து மார்புச் சிலந்திகளை உண்டாக்கலாம். ஆதலால், இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

சாதாரணமாக, ஸ்திரீகளுக்குக் கர்ப்ப காலத்தில் ரத்தம் குறைவுபடும். ஆதலால்,அவர்கள் நிறம் மங்கி வெளிறித் தோன்றுவார்கள். இந்த நிலைமை மோசமாகுமானால், சோகை வியாதி ஏற்படும். ஆகையால், ரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நலம்.

தூக்கம் மிக்க அவசியம். இரவில் எட்டு மணி நேரம் தூங்குவதோடு பகலிலும் இரண்டொரு மணி நேரம் படுத்து இளைப்பாறுவது நன்மை. மனக்கவலை, துக்கம், கிலேசம், பயம் முதலியவைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. எப்பொழுதும் சந்தோஷமும் அழகுமான வஸ்துக்களைக் காண்பதும் சிந்திப்பதும் கருவுக்கு நல்ல வளர்ச்சியைத் தரும்.

வீடு சுத்தமாக இருக்கவேண்டும். வீட்டு முற்றத்தில் சாக்கடைத் தண்ணீர், குப்பை, எரு முதலியவைகளைச் சேரவிடக் கூடாது. வீட்டறைகள் காற்றோட்டம் உள்ளவையாகவும் போதுமான வெளிச்சம் உள்ளவையாகவும் இருக்கவேண்டும். வீட்டினுள்ளே அடுப்பும் விளக்குகளும் எரிவதனாலும் பல ஜனங்கள் கூடி வாழ்வதனாலும், கெட்ட நாற்றம் உண்டாகும். கெட்ட ஆகாயம் ஜன்னல்களின் வழியாய் வெளிச் செல்லக் கூடியதாயும் கதவுகளின் வழியாய்ச் சுத்தமான காற்று வரக் கூடியதாயும் இருக்கவேண்டும்.

பிரசவத்துக்காகத் தேகத்தை நல்ல திடமான நிலையில் வைத்திருக்கவேண்டும். கூலி வேலை செய்யும் ஸ்திரீகள் கஷ்டம் இல்லாமல் பிரசவிப்பதற்கு இதுதான் காரணம். உயர்ந்த அந்தஸ்தில் இருந்து, சுக ஜீவனம் செய்பவர்களே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால், நாள்தோறும் ஏதாவது வேலை அல்லது தேகப் பயிற்சி செய்ய வேண்டும். ஆனால், அளவுக்கு மிஞ்சியும் அதிக ஆயாசத்தைக் கொடுக்கக் கூடியவையுமான வேலைகளைச் செய்யலாகாது. கர்ப்பத்தின் கடைசி மாதங்களில் நீண்ட ரயில் பிரயாணங்களையும் கரடுமுரடான பாதைகளில் வண்டி சவாரி செய்வதையும் விலக்கி விட வேண்டும். தினம் ஒன்று அல்லது இரண்டு மைல் நடப்பது உடம்புக்கு நல்லது.

குழந்தைக்காக உடுப்பு, படுக்கை முதலியவைகளை முன்னதாகத் தயார் செய்து வைத்திருப்பது அதிக உதவியாக இருக்கும்.

பிரசவத்தை வீட்டில் வைத்துக் கொள்வது உசிதமில்லை. ஆஸ்பத்திரிக்குப் போய் விடுவதே நல்லது.

★

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்

●

மதராஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், மவுன்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், - மயிலாப்பூர், புரசைவாக்கம் -

●

சென்னை ராஜதானியில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் ஸப் ஆபீஸ்களும் உள்ளன

●

அதிகாரம் பெற்ற
மூலதனம் ரூ. 1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்
30-6-43-இல் ரூ. 27,57,336
ரிஸர்வ் நிதி ரூ. 28,01,800

மொத்த ஆஸ்தி 7 கோடிக்கு மேல்

●

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

●

N. கோபால அய்யர்,
செக்ரெடரி.

சிவாஜி

தையல் நூல்

★

பணத்தைப் போட்டு வாங்கத் தக்க மிகச் சிறந்த நூல் அதுவே

★

இந்தியாவில் செய்வோர்:

ஆக்மி த்ரெட் கோ, லிமிடெட்.
பாங்க் அப் பரோடா பில்டிங்
அப்பாலோ தெரு, பம்பாய்.

மூலதனம் !

சண்டையிலும் சமாதானத்திலும் பொருத்தமானதும் உண்மையானதும்............

வைரங்களே

உறைவிடம்

ஸூரஜ்மல்ஸ்

நாணயத்திற்கும் நம்பிக்கைக்கும்........................
சென்ற அரை நூற்றாண்டுகளாக நிரந்தர நன்மதிப்புப் பெற்றுள்ளது.

ஆகையால்

ஸூரஜ்மல்ஸ்

வைரங்களே !!!

313, எஸ்பிளனேட், மதராஸ்

என்றன் பொம்மைக் கிணை ஏது?
எங்கும் காணக் கிடைக்காது.
நன்றோ தீதோ எது வரினும்,
நாளும் நகைமுகம் மாறாது.

காய்ச்சல் இல்லை; தோடமிலை;
கவலை சற்றும் படுவதிலை;
கூச்சல் இல்லை; நோயென்றே
குமைவ தில்லை என்பொம்மை.

என்றோ வந்தென் வீட்டினுக்கே
என்னுடன் ஆடி விளையாடி,
அன்று முதலாய் இன்றுவரை
ஆனந்தம் தருகின்றதுவே!

பஞ்ச வர்ணக் கிளிபோலே
பச்சை நீலம் பசுமஞ்சள்
மிஞ்சு செம்மை வெள்ளையுடன்
மிளிர்ந்து கண்ணைப் பறித்திடுமே!

ஆஹா! என்னே விந்தையிது!
அம்மாண் புடைய என்பொம்மை
கூகூ! ஏனோ வளராமல்
குந்திக் கிடக்கும் சூழ்ச்சிஎதோ?

—'தஞ்சன்'

★

மாயக் கண்ணாடி

'நீலா'

சூடாமணி என்று ஒரு மனிதனுக்குப் பெயர். அவன் மிகவும் கர்வம் பிடித்தவன். தனக்கு யாரும் நிகரில்லை என்று எண்ணுவான். எப்போதும் தன்னைப்பற்றியே நினைத்துக் கொள்வான். தான் நிரம்ப அழகு என்று எண்ணுவான். தானே மிக்க புத்திமான் என்று நினைப்பான். ஊரிலுள்ள எல்லோரும் அசடுகள் என்று பரிகசிப்பான்.

அவனுக்கு ஓர் ஆசை. "பிறரெல்லாம் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்? நான் இவ்வளவு அறிவாளியாயிருக்கிறேன்; அழகனாயிருக்கிறேன். இதையெல்லாம் பிறர் வியந்துதான் ஆகவேண்டும்; அவர்கள் மனதிலே ஆச்சரியப்பட்டே தீருவார்கள். அப்போது அவர்களுக்குஉண்டாகும் எண்ணங்களை நான் அறிந்தால், எவ்வளவு ஜோராயிருக்கும்? அந்தச் சக்தி எனக்கு இல்லையே!" என்று ஏங்கினான்.

இந்தச் சமயம், அந்த ஊருக்கு ஒரு சுவாமியார் வந்தார். அவரிடம், சூடாமணி சென்றான். தன் ஆசையைத் தெரிவித்தான்.

இவன் பெரிய கர்வி என்று சுவாமியார் தெரிந்து கொண்டார். "இவனுக்குப் புத்தி சொன்னால் கேட்க மாட்டான். தானாகவே பட்டுத்தான் திருந்துவான்" என்று எண்ணினார்.

சூடாமணியைப் பார்த்து, "உன் ஆசை, பெரிய காரியமல்ல. மந்திர சக்தி வாய்ந்த ஒரு மாய மூக்குக் கண்ணாடி என்னிடம் இருக்கிறது. அதை அணிந்து கொள்வோருக்கு, எதிரேயுள்ளவர் எண்ணமெல்லாம் தெரியும். அதை உனக்குத் தருகிறேன்" என்றார். அப்படியே அந்த மாயக் கண்ணாடியை, சூடாமணியிடம் சுவாமியார் கொடுத்தார்.

சூடாமணிக்கு ஆனந்தம் பொங்கிவிட்டது. அவசர அவசரமாக வீட்டுக்கு ஓடினான். வாசனை யெல்லாம் போட்டுக் குளித்தான். ஜரிகை வேஷ்டி கட்டினான். பட்டுச் சொக்காய் தரித்தான். வைர மோதிரங்கள் அணிந்தான். தைலம் தடவி வாரினான். புனுகு ஜவ்வாதுப் பொட்டு வைத்தான். மாயக் கண்ணாடியை, மூக்கிலே மாட்டினான்.

அது ஓர் அதிசயமான மூக்குக் கண்ணாடி: பிறருடைய மனதில் உண்டாகும் எண்ணங்களையெல்லாம் அறியக் கூடியது. சூடாமணி அதை அணிகிறான். பிறர் மனதையெல்லாம் பார்க்கிறான். என்ன ஆச்சர்யம்! எல்லாரும் அவனைப்பற்றி என்ன மாதிரி நினைக்கிறார்கள்! காரணம் என்ன?

மாப்பிள்ளைக் கோலமாய்ப் புறப் பட்டுவிட்டான்.

வீதியிலே, சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். "இந்தப் பசங்கள் என்ன நினைக்கிறார்கள், பார்க்கலாம்" என்று சூடாமணி எண்ணினான்.

நாலு பசங்களும் ஒரே விதமாய்த்தான் நினைத்தார்கள்: "அடே! பெரிய மைனர் வந்துட்டாருடா! மூஞ்சியைப் பாரேன், குரங்கு மாதிரி! நம்ம விளையாட்டுக்கு இடைஞ்சலாக, இந்தச் சனியன் இங்கே என் வந்தது?" என்றுதான் பசங்கள் எண்ணினார்கள்.

அவர்களை அறைய வேண்டும் போலிருந்தது சூடாமணிக்கு. ஆனால், அவர்களை அடித்தால் அழுவார்களே? யாராவது பெரியவர்கள் வந்து காரணம் கேட்பார்களே? என்ன சொல்லுவது? அதற்குப் பயந்து, சூடாமணி அப்பாலே சென்றான்.

ஒரு மரத்தடியிலே, ஒரு கூடைக்காரி மாம்பழம் விற்றுக்கொண்டிருந்தாள்.

"ஏ பிள்ளை! ஏ பிள்ளை!" என்று, அவளைச் சூடாமணி அழைத்தான். அவள் இவனைக் கடைக் கண்ணால் பார்த்தபடி, பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

"ஏ பிள்ளை! கூப்பிடக் கூப்பிடப் பேசாமலிருக்கிறாயே! நீ என்ன செவிடா, அல்லது ஊமையா?" என்று, எரிச்சலாய்க் கேட்டான் சூடாமணி.

"அட வேலை மெனக்கெட்டவரு! மாம்பழம் வாங்கறவரைப் பாரு, மாம்பழம்—இந்த ஜம்பம் பிடித்தவரா, மாம்பழம் வாங்கப் போறாரு! சும்மாப் போகாமே, தொந்தரவு பண்ணுறாரு" என்று அவள் எண்ணினாள். திரும்பிப் பாராமலே, "மாம்பழம் விக்கிற தில்லை" என்று சொன்னாள்.

சூடாமணிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. இருந்தாலும், பொறுமையாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

கொஞ்ச தூரத்திலே, ஒரு சிநேகிதனைச் சந்தித்தான். அவன் இவனைப் பாராதவன்போல நடந்தான். ஆனால், அவன் மனதுக்குள்ளே, "ஐயோ! இந்த முட்டாளுக்கு என்ன அலங்கார மடா, அப்பா! அவசர ஜோலியாகப் போகிறேன். மூதேவி மாதிரி எதிரே வந்துவிட்டானே! ஆண்டவா! போகிற காரியம் பலிக்குமா?" என்று எண்ணினான்.

"சீ! இவனுமா அப்படி நினைக்கிறான்! இவனுடன் பேசக் கூடாது" என்ற முடிவுடன், மேலே நடந்தான் சூடாமணி.

இங்கே சில பெண்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் கட்டாயம் தன் அழகைக் கண்டு மயங்குவார்கள் என்று, சூடாமணி நினைத்தான். கம்பீரமாக நடந்தான்.

அத்தனை பெண்களும் புன்சிரிப்புச் சிரித்தார்கள்; ஒரே மாதிரி எண்ணினார்கள். "அப்பாடா! மன்மதக் குஞ்சுதான். போடுகிற நடையைப் பாரு; ஆடுகிற ஒயிலைப் பாரு! அழகுதான் இல்லை; அறிவுதான் மட்டு; ஆடம்பரமாவது குறைந்திருக்கப் படாதா?" என்றே அவர்கள் நினைத்தார்கள்.

இதற்குமேல், சூடாமணியால், தாளமுடியவில்லை அவனுக்கு

அழுகை அழுகையாய் வந்தது. அப்படியே சுவாமியாரிடம் ஓடினன்.

"சுவாமி! எங்கே போனலும், எல்லாரும் என்னைக் கேவலமாகவே எண்ணுகிருர்களே! நான் என்ன பாவம் செய்தேன்? எனக்கு விமோசன மில்லையா?" என்று முறையிட்டான்.

"மகனே! உன்னைப் பிறர் கேவலமாக எண்ணுவதற்குக் காரணம் யார்? நீ தான். நீ படாடோபமாக இருக்கிருய்; கர்வப்படுகிருய். உன்னைப்பற்றியே நினைக்கிருய்; மற்றவரை உதாசீனம் செய்கிருய். நீயே பெரியவனென்ருல், பிறரெல்லாம் தாழ்ந்தவரா? உன்னைப்போலவே எல்லாரும்; எல்லாரையும் போலவே நீ—இப்படி நீ நினைக்கவேண்டும். அப்போது, எல்லாரையும் நீ நேசிப்பாய்; எல்லாரும் உன்னை நேசிப்பார்கள். உன் அகம்பாவமே பிறர் அகம்பாவத்தை எழுப்புகிறது. நிலைக் கண்ணுடியிலே, உன் முகமே திரும்பத் தெரிகிறது அல்லவா? அந்தமாதிரிதான் இதுவும். மாயக் கண்ணுடியைக் கழற்றி வை. பணிவாக, பொறுமையாக, தன்னலமற்று, எல்லாரையும் மதித்து, எல்லாருக்கும் உதவியாக நட. ஊராரெல்லாம் உன்னிடம் அன்பு செலுத்துவார்கள்" என்ருர் சுவாமி.

சூடாமணிக்கும் நல்ல புத்தி வந்து, அப்படியே வாழலானன். பின்னல், அந்த மாயக் கண்ணுடியை அவன் தேடவேயில்லை.

★

என்ன துணிச்சல்!

சிக்காகோவில் 1893-ஆம் ஆண்டில் உலக மதங்களின் மகாநாட்டில் சுவாமி விவேகானந்தர் பேசுகையில், ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சுவாமிகள் தமது பேச்சின் நடுவே சற்று நின்ருர். ஹிந்துக்களின் புனிதமான மத நூல்களைத் தாமே படித்தறிந்தவர் அங்கே யாரார் உண்டோ அவர்களெல்லாம் கையைத் தூக்கும்படி, சுவாமி கேட்டுக்கொண்டார். சபையிலே எத்தனையோ நாடுகளின் தலைவர்களான எத்தனையோ சமய பண்டிதர்கள் உட்கார்ந்திருந்தும், மூன்று அல்லது நான்கு பேர்கள்தான் கையைத் தூக்கினர்கள். சுவாமிகள், கம்பீரமாகச் சபையை ஒரு கண்ணேட்டம் விட்டார். பெருமிதத்தோடு நிமிர்ந்து நின்ருர். ஒவ்வோர் எழுத்தும் சபையோரின் மண்டையிலடிப்பது போன்ற அழுத்தமான குரலில், "இப்படியிருந்தும், எங்களைப்பற்றித் தீர்ப்புக்கூற உங்களுக்கு என்ன துணிச்சல்!" என்ருர்!

காந்தியும் லெனினும்

லண்டனில் நடந்த வட்டமேஜை மகாநாட்டுக்கு, காந்தியடிகள் சென்றிருந்தபோது, ஸ்ரீமதி கிளேர் ஷெரிடன் என்ற சிற்ப நிபுணி அவரிடம் வந்து அவரைப்போல் ஒரு சிலை அமைக்க விரும்பினள். அவரும் சம்மதித்தார்.

சிலை வேலை நடந்துகொண்டேயிருக்கையில், "ஓ! வின்ஸ்டன் சர்ச்சிலின் சகோதரருடைய பெண்ணு நீங்கள்? சர்ச்சில் என்னைப் பார்க்க மறுக்கிருர் என்று உங்களுக்குத் தெரியுமா? ஆனல், நான் உங்களைப் பார்த்ததில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகிறது! இதை எனக்காக நீங்கள் அவரிடம் சொல்லுங்கள்" என்ருர் காந்தி.

இதே பெண்மணி லெனினைக் கண்டு சிலை தயாரிக்கையில், அவரும் இதேமாதிரிதான், "உங்கள் சிற்றப்பாவிடம் சொல்லுங்கள்" என்ருராம். என்ன ஒற்றுமை!

புத்தக உலகம்

தெய்வ ஜனனம்: ஆசிரியர்: க. நா. சுப்ரமண்யம். வெளியிட்டோர்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை ரூ. 1—4—0.

ஒரு நீண்ட சிறு கதையும், இரு குறுகிய சிறு கதைகளும் இதில் அடங்கி யிருக்கின்றன. 'பாட்டி சொன்ன' கதைகளைப் 'பேரன்' எழுதுகிறார். நடராஜ விக்ரகம் எப்படிச் சிருஷ்டி யாயிற்று என்பதைப் பற்றிய கற்பனை, மிகவும் சுவாரஸ்யமான முறையில் எழுதப்பட் டிருக்கிறது. பாட்டிக்கு எவ்வளவு கற்பனை இருக்கிறது! காலேஜில் படித்த நவநாகரிகப் பாட்டி போலவே தோன்றுகிறாள். எப்படிப்பட்ட பாட்டியா யிருந்தால் என்ன? லளிதமான சொற்களில் சொல்லப்படும் ருசிகரமான கதைகளைப் படிப்பதில், நாம் இன்பமே அடைகிறோம்.

விஞ்ஞான சோஷலிஸம்: ஜோன் தாம்ஸன் ஆங்கிலத்தில் எழுதியதன் மொழிபெயர்ப்பு: வெளியிட்டோர்: ஜனசக்திப் பிரசுராலயம், 2, ஜோன்ஸ் லேன், பிராட்வே, சென்னை. விலை அணு 6.

அபேதவாதத்தைப் பற்றிய ரஸமான சிறிய ஆராய்ச்சி இந்த நூல். அபேதவாத தத்துவங்கள் விரிவாக இதில் விளக்கப்படுகின்றன. 'முதலாளித்துவத்துக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் நேரிட்ட உலகப் போராட்டத்தில், அச்சு நாடுகளில் முதலாளித்துவம் பெருவெற்றி அடைந்துள்ளது. சமதர்ம ருஷ்யாவைத் தாக்கி அழித்து விட்டால்தான், உலகிலே முதலாளித்துவம் நிம்மதியாய் நிலைக்க முடியும் என்பதற்காகவே, ருஷ்யா மீது ஹிட்லர் பாய்ந்திருக்கிறார்' என்பது ஆசிரியரின் கருத்து. எளிய நடையில் தெளிவாய் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

சுதந்திர கீதம்: ஆசிரியர்: பாரத்வாஜி முகவைக் கண்ண முருகனார். வெளியிட்டவர்: ஸ்ரீ ரமணபாதானந்தர். கிடைக்குமிடம்: கலைமகள், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ 1—8—0.

மகாத்மா காந்தியின் அஹிம்சா தர்ம நெறியில் மனம் பொதிந்த பற்பல பாடல்கள் இதில் உள்ளன. கொடி, சுதந்தரம், கதர், மதுவிலக்கு, தீண்டாமை யொழிப்பு, காந்தி வாழ்த்து முதலிய பல பொருள்கள் குறித்துப் பல மெட்டுகளில் பாடல்கள் அமைந்திருக்கின்றன. முன்னுரையாளர் திரு. கி. வா. ஜகந்நாதன் கூறுவதே போல, 'பெர்துவாக, நூல் முழுவதும் செந்தமிழ்ப் புலமையும் பண்பட்ட உள்ளமும் கலந்து மிளிர்கின்றன.'

சதாசிவப் பிரமேந்திரர் நூல்கள் (உரையோடு): பதிப்பாசிரியர்: வே. நாராயணன். வெளியிட்டோர்: ஸ்ரீ காமகோடிபீடம், சங்கர மடம், கும்பகோணம். விலை: அணு 12.

ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர் இயற்றிய சிவமானஸிக பூஜா, கீர்த்தனைகள், ஆத்ம வித்யா விலாஸம் என்ற மூன்றையும் தம்முடைய ஆங்கிலத் தமிழ் மொழிபெயர்ப்புக்களோடு, பதிப்பாசிரியர் பதிப்பித்துள்ளார். பிரம்மேந்திரரின் வடமொழிக் கீர்த்தனைகள், ஆத்ம ஞானமும் பக்தி பரவசமும் நிறைந்த கர்ணம்ருதமான இசை இன்பம் பொதிந்தவை. அவருடைய பிற நூல்கள், வாக்குநயம் செறிந்து பிரம்ம வித்தையைப் புகட்டுவன. வடமொழியும் நாகரி லிபியும் தெரிந்தவர்களுக்கும் சரி, தெரியாதவர்களுக்கும் சரி, உபயோகப்படக் கூடியவாறு, நாகரி லிபியிலன்றித் தமிழ் எழுத்திலும் மூலத்தைத் தந்து, தெளிந்த அழகிய தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் பதிப்பாசிரியர் செய்துள்ளார். சங்கீதாபிமானிகளே யன்றி ஆத்ம வித்யாபிமானிகளும் படிக்க வேண்டிய நூல்.

சம்பிரதாயம் : (ஒலி நாடகம்) ஆக்கியோன்: சங்கு சுப்பிரமணியன், கணபதி முதலி தெரு, ராயப்பேட்டை. விலை ரூ. 1 முதல் 5 வரை சமயோசிதம்போல்.

ரேடியோவில் கேட்கவில்லையா, ஒலி நாடகம்; அதை எங்குமே நடத்தலாம் என்பது ஆசிரியரின் அபிப்பிராயம். ஒரு தாசிப் பெண்ணுக்கும் ஜமீன் குமரனுக்கும் உண்டாகும் காதலை எழுவாயாகக் கொண்ட சோக நாடகம் இது. இயற்கையான சம்பாஷணைகளின் மூலம், கதை நம்முன் மலர்கிறது. இடையில் வரும் பாடல்களனைத்தும் மனமுருக்கும் தேவாரப் பாடல்கள். பாத்திரங்களெல்லாம், நம்மைச் சூழ நிதம் காணும் உயிர் உள்ள மனிதர்கள். பக்கம் 31-தான். ஆகவே, சம்பிரதாயத்தை மீற வந்த இந்த நாடகத்தின் விலையும், சம்பிரதாயத்தை மீறிய ஒரு 'கலாட்டா'வாகவே இருக்கிறது.

பினம்ப்ரா (ஆங்கிலக் கவிகள்): ஆசிரியர்: மஞ்சேரி எஸ். ஈசுவரன், 2, ஜானகி தெரு, பஞ்சவடி எழும்பூர். விலை ஒரு ஷில்லிங்.

ஆங்கிலத்தைத் தம் உடன் பிறந்த மொழிபோல் லாகவமாய் உபயோகிக்கும் கலைஞர் ஈசுவரன். இந்தக் கவிதைகளில், ஒரு விறுவிறுப்பும் இனிமையும் நிறைந்திருக்கின்றன. முக்கியமாய், 'தேவ தாசி' என்ற கவிதை அற்புதமானதாகும். நாட்டிய ராணி ஒருத்தியே அதன் ஒவ்வோர் அடியிலும் நர்த்தனமிடுவதுபோல் அது அமைந்திருக்கிறது. பாடல்கள் அனைத்தும் மிக்க இனிய நடை.

காங்கிரஸ் தோற்றதா (ஆங்கிலம்): வெளியிட்டோர்: டைம்ஸ் ஆப் இந்தியா பிரஸ், பம்பாய். விலை அணா 6.

1918—1939-ஆம் ஆண்டுகளில் காங்கிரஸின் சரித்திரத்தை ஆராய்கிறது இது. மகாத்மா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் சீரழிந்து போய் விட்டதாக நிரூபணம் செய்வதே இதன் நோக்கம். சுபாஷ் விஷயம் வரும்போதுகூட, 'காங்கிரஸின் சர்வாதிகாரி'யான மகாத்மா இப்படி அவரைப் பழிவாங்கினாரே என்று கண்ணீர்விடுகிறார் ஆசிரியர். ஆயினும் "சுபாஷ் இன்று பகிரங்கமாக அச்சு நாடுகளுக்கு ஆதரவாயிருப்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். ஆனால், இதை எதிர்பார்த்து,அன்று காந்தி அப்படிச் செய்யவில்லை" என்று அதிலும் ஓர் அந்தர் அடிக்கிறார். மொத்தத்தில் காங்கிரஸைப்பற்றி, முக்கியமாய் மகாத்மாஜியைப்பற்றி, ஒரு விஷமப் பிரசாரப் பிரசுரம் இது.

மல்லிகைத்தோட்டம் : ஆசிரியர்: ப. நீலகண்டன். வெளியிட்டோர்: பாரதமாதா பிரசுராலயம், துறையூர். விலை ரூ. 1-4-0.

இந்தத் தோட்டத்திலே பூத்திருப்பவை பல சிறுகதை மலர்கள். சின்னச் சின்னக் கதைகள், சற்று நீளமான கதைகள் இருவிதங்களும் அடங்கி யிருக்கின்றன. சமூகம், சரித்திரம் இருவகைகளும் இருக்கின்றன. நடை மிக லளிதமாயிருக்கிறது. உணர்ச்சி செறிந்திருக்கிறது.

பார்வதி : ஆசிரியர்: 'சங்கராராம்.' வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை ரூ. 3.

பார்வதி கபடற்ற பெண். அவள் மீது அபாண்டம் கூறுகிறாள் சீதம்மாள். வீண் அபவாதம் பல சிக்கல்களை உண்டாக்குகிறது. சீதம்மாளின் மகளே ஆத்மத்தியாகம் புரிந்து விடுகிறாள். இறுதியில் பார்வதியும் கணவனும் இன்ப வாழ்வு வாழ்கிறார்கள். இதுவே இந்த ருசிகரமான நாவலின் கதைச் சுருக்கம். ஆரம்பம் தொடங்கி முடிவு வரையில் சலிக்காமல் படிக்கத்தக்க நாவல். சம்பாஷணைகள், சற்று அதிகப்படியா யிருந்தாலும், தத்ரூபமா யிருக்கின்றன. ஒவ்வொரு பாத்திரமும், கதையிலே அல்ல, நம் கண் முன்னே இயங்குகிறார்கள். நேர்த்தியான தமிழ் நாவல்.

உயிரோவியம் : ஆசிரியர்: நாரண - துரைக்கண்ணன். வெளியிட்டோர்: ஆனந்தபோதினி, தபால்

பெட்டி நெ. 167, சென்னை. விலை அணா 12

நாற்றுத் தொண்ணூற்றாறு பக்கங் கொண்ட ஒரு சிறுகதை இது. 'சிறு கதை' என்று ஆசிரியரேதான் கூறு கிறார். இருவர், ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள். பொறாமைக்காரி யின் சூழ்ச்சியால், பெண்ணுக்கு வேறொருவனோடு மணம் நடக்கிறது. மணத்துக்குப் பின், தன் மனைவியின் உள்ளம் மற்றொருவனிடம் இருக்கிறது என்று அறிகிறான் மணமகன். மனைவி யிடம் அவன் கோபங்கொள்ளவில்லை. பெருந்தன்மையோடு, மனைவியின் தூய காதலுக்குப் பங்கம் வராமல், ஆயுள் முழுதும் அவளுடன் சகோ தரன்போல் வாழ, அவன் இசை கிறான். கதை இதுவே. எளிய தூய தமிழ் நடை.

உஷா : ஆசிரியர் : சரத் சந்திரர். மொழி பெயர்த்தோர் : அ. கி. ஜயராமன், வி. எஸ். வெங்கடேசன். வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி. விலை ரூ. 1-4-0

பட்டிக்காட்டுப் பெண் பட்டணத்து மனிதருக்கு வாழ்க்கைப் படுகிறாள். கணவனின் புது நாகரிகத்துக்கும், மனைவியின் பழ நாகரிகத்துக்கும் போராட்டம். கணவனின் சகோதரி பட்டணத்தின் பக்கம். அவள் புரு ஷன் முதலில் அங்கே ; பின்பு இங்கே. கடைசியில் பழ நாகரிகமே வெல்லு கிறது. இந்த 'யுத்த' சரிதத்தின் நடு நடுவே, சரத் சந்திரரின் கலைக்கை, பல உணர்ச்சிக் குழைவுகளை இழைத்துவிடுகிறது. சுகமான மொழி பெயர்ப்பு.

ஸ்டாலின் : ஆசிரியர் : ஐவர் மாண்டெகு. தமிழ்மொழி பெயர்ப்பை வெளியிட்டோர் : ஜன சக்தி பிரசு ராலயம், 1-6, டேவிட்ஸன் தெரு, சென்னை. விலை 6 அணா.

இன்று இணையற்ற வீரத்துடன் ருஷியா போராடுகிற தென்றால், அதற்கு அத்தகைய பலத்தை உருவாக் கிய மகா புருஷர்களில் ஸ்டாலினும் ஒரு முக்கியஸ்தர். அந்த நாட்டை இந் நாள் நடத்திச் செல்லும் பாக்கியமோ, அவர் ஒருவருக்கே கிடைத்துள்ளது. அவருடைய வாழ்க்கை, ஒரு நாவலைப் போல், மகா ஆச்சர்யமான சம்பவங் கள் நிறைந்தது. அந்த வாழ்க்கை வர லாற்றையும், ருஷியாவுக்கு அவர் செய்துள்ள ஒப்பற்ற சேவைகளையும் இந்நூல் சுருக்கமாகவும் அழகாகவும் விவரிக்கிறது. தட்டுத் தடங்கலற்ற எளிய தமிழ் மொழிபெயர்ப்பு. நேர்த்தியான புத்தகம்.

காசி விசுவேச்வர ஸ்தோத்திரம் (உரையோடு) : பதிப்பாசிரியர் : எ. எஸ். நடராஜையர். வெளியிட்டோர் : ஸ்ரீ காமகோடிபீடம், கும்பகோணம். விலை : அணா 8.

லோஷ்டதேவர் அருளிச் செய்த தீனாக்ரந்தனம் என்ற இந்த வடமொழி நூல், பக்திப்பெருக்கும் காவியச் சுவையும் நிறைந்ததாகும். நாகரி லிபியிலும் தமிழ் எழுத்திலும் மூலத் தைத் தந்து, தெளிந்த தமிழ் மொழி பெயர்ப்பும் செய்திருக்கிறார் பதிப் பாசிரியர். மனமுருகிப் பக்தி செய் யும் மார்க்கத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோருக்குச் சிறந்த சாதனம். நேர்த்தியான முறையில் இந்நூலை வெளியிட்டிருப்பது ஓர் உத்தம கைங் கர்யமாகும்.

வையாபுரிப் பள்ளு : ஆக்கி யோன் : பழனி இம்முடிப்பட்டம் வேலச் சின்னோவையன். பதிப்பாளர்: அ. அருணாசலம் பிள்ளை. வெளி யிட்டோர் : ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழனி. விலை அணா 10.

பள்ளர்களை நாடக பாத்திரங்களாக வைத்து, அழகிய சிந்துப் பாடல் களால் அவர்களுடைய வாழ்க்கை யைச் சித்தரிப்பதுடன், பழனிப் பெரு மானின் பெருமையை வர்ணிப்பது இந்தப் பழம் நூல். உழவு, நடவு, அறுவடை முதலிய கிராமக் காட்சி களை, செவிக்கினிய பாடல்களில் இதில் காணலாம். அரும்பத உரை, முன் னுரை முதலியன சேர்த்திருப்பதால், படிப்பவர்க்கு மிக்க உதவியாகும்.

டான்யா : வெளியிட்டோர் : நவ சக்தி காரியாலயம், மயிலாப்பூர். விலை அணா 2.

ஸோவியத் ருஷ்யாவின் இந்த மகத் தான யுத்தத்திலே, அரக்க நாஜிகளை

எதிர்த்த ஒரு வீரச் சிறு பெண்ணின் உருக்கமான வரலாறு இது. எதிரிகளின் கையில் அகப்பட்டு உயிர் துறக்கும்போதும், வீரகோஷம் செய்தவள் டான்யா.

சிவராத்திரி (ஆங்கிலம்) : ஆசிரியர் : மஞ்சேரி எஸ். ஈசுவரன். விலை ரூ. 0—12—0

கதை, புராணக் கதை. ஆனால், நவீன நாவலைப்போல், மனோகரமான நடையில், வர்ணமும் ஒளியும் ஜீவனும் சொரிய, எழுதப்பட்டுள்ளது. புராணம் மூல வரலாறு. ஆனால், அந்தப் புராணத்திலின்றும், ஆசிரியர் குடும்பத்துக்கு வருகிறார். சிவராத்திரி. கண் விழிக்கவேண்டுமே? கண்ணை விழித்துப் புண்ணியம் பெற மற்றவரெல்லாம் அர்த்தமற்ற சினிமாவுக்குச் செல்லுகிறார்கள். ஆனால், பக்தி நிறைந்த வீட்டு மூதியவள், பரவச நிலையெய்தி, முக்தியும் அடைந்துவிடுகிறாள். அந்தக் காட்சி நம்மை மெய்விதிர்க்கச் செய்கிறது. ருசி செறிந்த கதை.

திரு அருள் மொழி : வெளியிட்டோர் : ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை. விலை : சாதா ரூ. 2–14–0 ; காலிக்கோ ரூ. 3–12–0.

'தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் என்னும் மூன்று நூல்களிலிருந்தும் பொறுக்கி யெடுக்கப்பட்ட இந்நூறு பாக்களையுடையது இந்நூல்.' ஒவ்வொரு பாடலுக்குக் கீழும், பொழிப்புரை கருத்துரை முதலியன கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, பாடல்களின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு பிறகு பாடுவதற்கு இந்த நூல் பெரிதும் துணையாயிருக்கும். இறுதியில் சிவ விஷ்ணு சஹஸ்ர நாமங்கள் தமிழ்ப் படுத்திச் சேர்க்கப் பட்டிருப்பது வரவேற்க வேண்டிய முயற்சி. என்ன வார்த்தையால் எதைச் சொல்கிறோமென்று தெரியாமல் கடவுளை வழிபடுவதைக் காட்டிலும், பொருளறிந்து அவரை வழிபடுவதில் உயர்வு இருக்கிறதல்லவா? இந்த நூலுக்கு முகம் போலிருக்கிறது சுமார் 185 பக்கங்கள் கொண்ட இந்த நூலின் முகவுரை. இதில் எல்லாச் சமயங்களின் கோட்பாடுகளும், அவை யாவும் ஒரே உண்மையையே போதிக்கின்றன என்பதும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய பொது நெறியும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. மிகத் தெளிவான முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் காகிதப் பஞ்ச காலத்தில் சுமார் 600 பக்கங்கள் கொண்ட ஒரு நூலுக்கு ரூ. 2–14–0 விலையே வைத்திருப்பது ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தாரின் பணி ஆர்வத்தையே காட்டுகிறது.

★

88838

கடவுளைப் பங்கிட முடியுமா?

ஜனங்கள் தங்களுடைய நிலத்தை அளவுகோல் கொண்டு அளந்து வரப்புப் போட்டுப் பிரித்துப் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனால், தலைக்குமேலே எங்கும் வியாபித்திருக்கும் ஆகாயத்தை அவ்விதம் பங்கிட்டுக்கொள்ள முடியாது. பகுக்கவொண்ணாத அந்த ஆகாயம் எல்லாவற்றையும் சூழ்ந்து தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளது. அதேபோல, ஞானமில்லாதவன்தான் தன் மதமே உண்மையானதென்றும் உயர்ந்ததென்றும் சொல்லுவான். ஆனால், உண்மையான ஞானம் அவனுடைய மனதில் உதயமாகும்போது, இந்த மதச் சண்டைகளையெல்லாம் கடந்த அகண்ட சச்சிதானந்தப் பொருள் ஒன்று இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்வான்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

புத்தகப் படிப்பு

ஓர் ஆத்மாவுக்கு மற்றோர் ஆத்மாவிட மிருந்தே தூண்டுதல் வரும்; வேறெதனாலும் வராது. புத்தகங்களிலிருந்து, ஆத்மீகத் தூண்டுதலைப் பெறமுடியாது. புத்தகங்களைப் படிக்கையில் ஆத்மீக உதவி பெறுவதாக, சில சமயம் நாம் மயங்கி விடுகிறோம். ஆனால், புத்தகப் படிப்பினால், லாபம் அடைவது நம் மூளைதான் ; உள்ளேயுள்ள ஆத்மா அல்ல.

—சுவாமி விவேகானந்தர்.

இந்தியத் தேயிலையில் மிகச்சிறந்தது

லிப்டன்ஸ்

ஜாகூஜா, வெள்ளை லேபில், தேயிலைப்பெண் தரங்கள்

LTK-52

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.

SHAKTI—1-10-43

வெய்யில் காலத்தில்

உங்களுடைய மூளையையும் உடலையும்

T. S. R. & Co.வின்

அரைக்கீரை

★ **சந்தனாதி** ★

பிரிங்காமல

தைலங்களினால் குளிரச் செய்யுங்கள்

T. S. R. & Co. (வாசனை வியாபாரம்) கும்பகோணம்

சோல் ஏஜண்ட்ஸ்

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ட்ஸ் ரோடு :: திருவல்லிக்கேணி, மதராஸ்

உங்கள் ஆயுள் இன்ஷ்யூரன்ஸுக்கு உகந்தது

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

★

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்பிளனேட் :: மதராஸ்

டிரஸ்டி : மதராஸ் சர்க்காரின் அபிஷியல் டிரஸ்டி

1906 முதல் திருப்தி அளித்துவரும் ஊதியம்

Printed by L. Chidambaram, at the Commercial Printing & Publishing House, 46, Muthumari Chetty Street, George Town, Madras.
Edited and Published by V. Govindan, 31, Coral Merchant Street, G. T., Madras.
Joint Editor : T. J. Ranganathan.

சங்கு மார்க்கு

முகம்மது

அபூபக்கர் & கோ.

95. தம்புசெட்டி தெரு, மதறஸ்
65/11-12. லோயர் சிட்பூர் ரோடு, கல்கத்தா
38, பேச்சியம்மன் ரோடு, மதுரை.

சங்குமார்க் கைத்தறி நெசவு துணிகள் பார்வைக்கு அழகாகவும் உடுப்பதற்கு மிருதுவாகவும் நவீனரகங்களில் தயார் செய்யப்பட்டவை

லுங்கீ

ஷர்ட்டிங்

கோட்டிங்

கைக்குட்டைகள்

எல்லா உயர்தர துணி வியாபாரிகளிடம் கிடைக்கும்

வாழையடி வாழையா
வந்த பழக்கம்

இந்தியாவிலே இரண்டு பெரிய பாரம்பரிய சொத்துக்கள் உண்டு. ஒன்று கலை. மற்றொன்று அதிதி உபசாரம். இவ்விரண்டும் வாழ்வின் இன்பத்தோடு பின்னிக் கிடக்கின்றன. சோழர் காலத்து சிற்பங்களை நாம் பார்க்கும்பொழுது நமக்கு மனதில் எழும் ஒரு இன்ப உணர்ச்சி நாம் நமது நண்பர்களுக்கு தேயிலைப் பானம் கொடுக்கும்பொழுது உண்டாகிறது. அதிதி உபசாரத்துக்கு தேயிலைப் பானத்தைத் தவிர வேறு சிறந்தது எது? எந்த நேரத்தில் யார் வந்தாலும் நிமிஷத்தில் தயார் செய்யக் கூடியது அதுவே. உங்கள் பாரம்பரிய பழக்கத்தை மறக்கவேண்டாம். வீட்டுக்கு விரும்பி வந்தோரை தேயிலை கொடுத்து மனங்குளிரச் செய்யுங்கள்.

★

"நித்திய கர்மா" என்ற எங்கள் புதுசித்திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பருகலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள் பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தியத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டீ மார்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

குடும்பத்துக்கு ஏற்ற ஒரே ப... ம்



இந்தியத் தேயிலை

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. I K 204

COVER PRINTED BY P. A. S. PRESS, POST BOX 349, MOUNT ROAD, MADRAS